
நன்றும் தீதும்
பிறர் தர வாரா
– கே.வி. குணசேகரம் –



# என்னுரை

**ஆ**ரம்பத்தில் சிறுகதைகள் எழுதினேன். பின்பு சமூகநாவல்கள் எழுதினேன். சமூகத்தில் குறிப்பாக கல்வியில் உள்ள முரண்பாடுகள், ஒழுக்கக்கேடுகள், ஊழல்கள் பற்றியும் எழுதவேண்டியிருந்தது. எனது வாழ்நாளின் முற்பகுதியைக் கல்விக்காக ஒதுக்கினேன். 1991ஆம் ஆண்டு அதிபர் போட்டிப் பரீட்சையில் சித்தியடைந்தமையால் கோப்பாய் நாவலர் தமிழ் வித்தியாலயத்திற்கு அதிபராக நியமிக்கப்பட்டேன்.

**எ**ந்த விதமான வசதிகளும் இல்லாத அப்பாடசாலைக்கு சகல வசதிகளையும் உண்டாக்கிக் கொடுத்தேன். நாவலர் சிலைவைத்தல், குடிநீர் வழங்கல், கணனி வசதிகள் யாவும் செய்து முடித்தேன். பாடசாலை பள்ளமான இடத்தில் இருந்தமையால் மாரிகாலத்தில் வெள்ளம் தேங்கி நிற்கும். அதற்குத் தேவையானளவு மண்பறித்தேன். கடைசியாக மைதானம் இல்லாது பெருங் குறையாக இருந்தது மைதானத்தையும் வாங்கினேன். திட்டமிட்டுச் சிலர் என்னை ஏமாற்றினர். விளையாட்டு மைதான வியடத்தில் நான் முழுமையாக நம்பியவர்கள் திட்டமிட்டு ஏமாற்றினர். பலகாலம் நன்றாகத் திட்டமிட்டு பெரும் அன்புள்ளவர்கள் போலவும், அர்ப்பணிப்புள்ளவர் போலவும் நடந்து ஏமாற்றிய என்னால் சகித்துக்கொள்ள முடியவில்லை.

**மை**தான விடயத்தில் முன்நாள் அதிபர் ஏமாற்றினார். ஏமாற்ற முடியவில்லை. அவர் எனது அன்புக்குப் பாத்திரமான ஒருவருடன் சேர்ந்து ஏமாற்றினார். அது எனது விதி. தீமை செய்தோர், நம்பிக்கைத் துரோகம் செய்தோர் தண்டிக்கப்படுவர் என்று புராணங்களும், இதிகாசங்களும் கூறுகின்றன. அவற்றை எழுதிய நான் அவற்றை நம்புகிறேன்.

**சி**றுவர்களை ஒழுக்கமாக வாழவைக்க வேண்டும் என்ற நினைவில் பழந்தமிழ் நூல்களையும், சமய நூல்களையும் கதைகளாக்கினேன். இதன் மூலம் ஒழுக்கப்பண்புகளை அறிந்துகொள்ளும் சிறுவர்கள் பழந்தமிழ் நூல்களையும் அறிந்துகொள்ள முடியும். ஔையாரின் பாடல்கள், திருக்குறள் கதைகள், பகவத்கீதைக் கதைகள், திருவாசகக் கதைகள், திருமந்திரக் கதைகள், திருவருட்பயன் கதைகள் எனப் பல்லாயிரம் கதைகளை எழுதியுள்ளேன்.

**இ**ப்போதும் நீதிக்கதைகளை எழுதி வெளியிடுகிறேன். காதல் சம்பந்தமான குடும்பக் கதைகளை எழுதுவதில் திறமைமிக்கவர் என்று ஏற்கனவே பெயரெடுத்த நான், இந் நூலில் உள்ள 42 கதைகளையும் காதல் சம்பந்தப்பட்ட கதைகளாகவே எழுதியுள்ளேன். அடுத்துப் பதிணெண் புராணங்களில் நான் எழுதாதவற்றை எழுதலாம் என்று நினைத்துள்ளேன்.

**எ**வ்வளவு திறமையான நூல்களை எழுதினாலும் எம்மவர் மதிக்கமாட்டார்கள். விமர்சிக்கமாட்டார்கள். இவற்றையெல்லாம் கடந்து பெரும் பணச் செலவில் நூல்களை வெளியிட்டு வருகிறேன். தொடர்ந்தும் வெளியிடுவேன். நான் விமர்சனங்களை எதிர்பார்ப்பது புகழுக்காகவோ, விருதுக்காகவோ, மனமகிழ்ச்சிக்காகவோ அல்ல. அதில் ஏதாவது குறை நிறைகள் இருந்தால் அடுத்த வெளியீட்டில் திருந்துவதற்காக. எனது நூல்கள் பல லட்சம் பிரதிகள் விற்பனையாகின. இப்போதும் பதிப்பிக்கப்படுகின்றன. ஒருவரது பண்பை மாற்ற முடியாது. தீயவர்கள் மானம், ரோசம், வெட்கம் பார்க்கமாட்டார்கள். தாம் விரும்பியவற்றை நிறைவேற்ற எந்தத் துரோகத்தையும் யாருக்கும் செய்ய அஞ்சமாட்டார்கள். அது அவர்களுக்கும் அவர்களைச் சார்ந்தவர்களுக்கும் மகிழ்ச்சியைக் கொடுத்துக் கொண்டே இருக்கும் என்பது தான் இந்த நாற்பத்திரண்டு கதைகளின் பொதுவான கருத்தாகும். இவை சமூகத்தில் நடைபெறும் கதைகள். சமயக் கதைகளை விட்டு சற்று வித்தியாசமாக எழுத வேண்டும் என்பதற்காக எழுதினேன்.

**இ**லங்கையில் வெளியாகும் தமிழ் நூல்களில் சிறந்தவை எவையெனத் தமிழர்கள் தான் தெரிவு செய்து அரச விருதுகளுக்கு அனுப்புகின்றனர். எனது ஒரு நூலைக்கூடச் சிறந்த நூல் எனத் தெரிவு செய்யாதவர்கள் எப்படி விமர்சிப்பர். எனது சில நூல்கள் திருவாவடுதுறை ஆதீனத்தால் தத்துவங்களுக்குப் பொருத்தமான நூல்கள் என்று தெரிவுசெய்யப்பட்டுள்ளன. அவைகூட இவர்களுக்குச் சிறந்த நூல்களாகத்தென்படவில்லை. இவர்கள் விருதுக்காகத் தெரிந்த நூல்கள், விருது கொடுக்கு முன்பே காணாமல் போய்விடுகின்றன. இந்நூலை மிகுந்த கவனத்துடன் கணினிமயப்படுத்தித் தந்த கோப்பாய் ஆரியன் கிரியேஷன்ஸ் நிறுவனத்துக்கு நன்றி கூறிக் கொள்கிறேன்.

கே.வி. குணசேகரம்

கோட்டக்கல்விப் பணிப்பாளர் (ஓய்வு)

## 1. பாராத பயிரும் கெடும்

**சி**வன் கோவில் மடத்தில் கதிரேசனும் பொன்னுத்துரை அதிபரும் வேறு பலரும் கூடி இருந்தனர். அப்போது சிவலிங்கம் சொன்னான், "நாளை இரவு அரவிந்தனது பிறந்தநாள். இருபத்தைந்து வருடங்களுக்கு முன் வெளிநாட்டுக்குச் சென்ற அவன் சென்றவாரம் குடும்பத்தவர்களுடன் வந்திருக்கிறான். ஞாயிற்றுக்கிழமை அவனது 50ஆவது பிறந்ததினம். அதை மிகப் பெரிய அளவில் கொண்டாடப்போவதாகக் கூறியுள்ளான். தனது திருமணமும் உற்றார் உறவினர் இன்றி நடைபெற்றதாம். அத்துடன் மகளின் திருமணமும் உறவினர்கள் யாருமில்லாது நடைபெற்றதாம். அதனால் தனது பிறந்ததினத்தை உற்றார் உறவினர், நண்பர்களுடன் கொண்டாடப்போகிறானாம். அது மிக மிக ஆடம்பரமாக நடைபெற உள்ளது".

"**உ**தெல்லாம் ஊர் முழுவதற்கும் தெரியும். நீ சொல்ல வேண்டியதை நேரடியாகச் சொல்" என்றான் ரவீந்திரன்.

"**சி**வலிங்கம் நேற்று இரவு வந்து எல்லாவற்றையும் சொன்னவன். சிவலிங்கத்தின் பேரப்பிள்ளை ஐந்தாம் வகுப்புப் படிக்கிறான். ஞாயிற்றுக்கிழமை காலை ஒன்பதரை மணிக்குப் புலமைப்பரிசில் பரீட்சை. பாடசாலையில் தரம் ஐந்தில் கற்பிக்கும் சரவணன் தான் வகுப்பாசிரியர். அவர்தான் வழமையாகப் பிள்ளைகளைப் பரீட்சை மண்டபத்துக்கு அழைத்துச் செல்வது" என்று கூறி நிறுத்தினான் மகாலிங்கம்.

**சி**றிது நேரம் மௌனம் நிலவியது. அதை சிவலிங்கம் கலைத்தான், "சரவணனைப் பற்றி எல்லோருக்கும் தெரியும். அவர் அரவிந்தனின் நெருங்கிய நண்பர். கடந்த ஒரு வாரமாக பாடசாலைக்கு லீவு போட்டு விட்டு அரவிந்தனுடன் சுற்றித் திரிகிறார். பிள்ளைகளுக்குக் கற்பிப்பதில்லை. ஓய்வு பெற்ற போதும் கடமையுணர்வுள்ள பொன்னுத்துரை அதிபர்தான் கற்பித்தவர்".

"**சி**வலிங்கம், எதையும் பெரிதுபடுத்தாதை. நானும் அதிபர் பொன்னுத்துரையும் மாணவர்களை அழைத்துச் செல்கிறோம்" என்றார் கதிரேசன்.

"**வ**ருடா வருடம் பரீட்சை தினத்தன்று நேரத்துடன் வந்து பிள்ளைகளைக் கோவிலுக்கு அழைத்துச் சென்று சுவாமியை வணங்கி விட்டுப் பிள்ளைகளை வாழ்த்தி, இனிப்பு வகைகளை கொடுத்து அனுப்பி விட்டு பரீட்சை முடிந்ததும் பரீட்சை மண்டபத்துக்கு இருவரும் சென்ற மாணவர்களின் நிலை பற்றி அறிவீர்கள். ஆனால் பாடசாலை நிர்வாகத்துக்கு மாணவர்களை பற்றி அக்கறையில்லை" என்றான் மகாலிங்கம்.

“**ம**காலிங்கம், கண்டபடி கதைக்கக் கூடாது. ஒருவர் தான் செய்வதைத்தானே சொன்னால் செய்ததன் பயன் இல்லாமல் போய்விடும்” என்று கதிரேசன் சொல்ல மகாலிங்கம் பேசாதிருந்தான்.

“**சி**வலிங்கம், உனது மகன் தொழில் காரணமாக வெளியூருக்குச் சென்று விட்டான். இவ்வூர் கமத்தொழிலுக்கானது. அதிகமானோர் களை பறித்த பின்பு நீர் பாய்ச்ச வேண்டும். நீர் பாய்ச்சுதலை விட முக்கியமானது பயிரை பாதுகாப்பது. வயலுக்கு உரியவர் தினம்தோறும் சென்று பயிரை பார்த்து அதன் தேவைகளை நிறைவு செய்தல் வேண்டும். அப்படிச் செய்யாது விட்டால் அவனது மனைவியை போல வயலும் அவனை வெறுத்து விடும். இதெல்லாம் எல்லோருக்கும் தெரியும். இருந்தும் ஏன் சொல்கிறேன் என்றால் அரவிந்தனின் பிறந்தநாள் கொண்டாட்டம் இரவு 7 மணிக்கு தொடக்கி விடிய விடிய நடைபெறும். அதனால் விதைத்தவர் ஒன்றுசேர்ந்து செல்லாமல் குழுக்குழுவாக பிரிந்து செல்வதுதான் நல்லது. ஒரு குழு வயலைக் காவல் செய்ய மறு குழு பிறந்தநாளுக்குச் செல்லட்டும். இவ்வாறு மாறி மாறி செல்லாவிட்டால் கதிர் வந்திருக்கும் பயிரைக் கட்டாக்காலி விலங்குகளும், காட்டு விலங்குகளும் அழித்துவிடும்” என்று கூறிவிட்டுச் சென்றார் கதிரேசன்.

“**ஐ**யா, நீங்கள் போகவில்லையா?” என்று கேட்டான் மகாலிங்கம்.

**க**திரேசன் அவனை பார்த்து ஏளனமாகச் சிரித்தார். பின் பதில் ஏதும் கூறாது சென்றுவிட்டார்.

“**உ**னக்கென்ன விசரே, கதிரேசன் தாத்தா மாமிசம் சமைக்கும் இடத்துக்குச் செல்லமாட்டார். அங்கு வெளிநாட்டு மதுபான வகைகளும், தாராளமாக இருக்கும். அப்படியான இடத்துக்குத் தாத்தா செல்வாரா? உனக்கு இப்ப கதைக்க பேசத் தெரியாது. கண்டபடி உளறுகிறாய்” என்றான் சிவலிங்கம்.

**ச**னிக்கிழமை அதிகாலையில் பலர் அரவிந்தனின் வீட்டுக்குச் சென்று விட்டனர். அதிகாலையில் தொடங்கிய விருந்து விடிய விடிய நடைபெற்றது.

**ஞா**யிற்றுக்கிழமை தரம் ஐந்திற்கான புலமைப்பரிசில் பரீட்சை நடைபெற்றது. தரம் ஐந்தில் கற்பிக்கும் சரவணன் பிள்ளைகளை பரீட்சைக்கு அழைத்துச் செல்ல வரவில்லை. அவனது மகன் கஜேந்திரன் தரம் ஐந்து புலமைப்பரிசில் பரீட்சை எழுதவேண்டியவன். தந்தையான சரவணன் மதுபானத்தை அளவுக்கு அதிகமாகக் குடித்தமையினால் ஞாயிற்றுக்கிழமை நண்பகல் ஒருமணிக்குத்தான் நித்திரை விட்டெழுந்தான்.

**ப**ரீட்சை மண்டபத்துக்கு மாணவர்களை அழைத்துச் சென்ற அதிபரும், ஆசிரியர்களும், கதிரேசனும், சிவலிங்கமும் வேறு பல பெற்றோரும் பரீட்சை எழுதி முடித்துவிட்டு வந்த மாணவர்களுக்குக் குளிர்பானமும், இனிப்புக்களும் கொடுத்தனர். அதிபர் சொன்னார், "தாத்தா, சரவணன் பாடசாலைக்கு மட்டுமல்ல வீட்டுக்கும் உதவாதவன். இரவு கமக்காரர் எல்லோரும் ஒன்று சேர்ந்து குழுக்குழுவாக காவலில் ஈடுபட்டமையினால் வயல் சேதம் இல்லாமல் தப்பியது. கஜேந்திரன் நன்றாக படிக்க கூடியவன். அவனைச் சரவணன் விருந்துக்கு அழைத்துச் சென்றமையால் அவனது எதிர்காலம் அஸ்தமித்து விட்டது. மாணவர்களும் பயிர்கள்தான். அவர்களை வழிநடத்த வேண்டியது பெற்றாரின் கடமை. தனது பிள்ளையில் அக்கறை இல்லாத ஒருவன் எப்படிப் பிறரின் பிள்ளைகளை கவனிப்பான். அதனால் அவனை இடமாற்றம் செய்யும்படி கல்விப்பணிப்பாளருக்கு கடிதம் எழுதவுள்ளேன். நீங்கள் இதில் தலையிடக் கூடாது"

"**நா**னும் அந்த முடிவுக்கு வந்திட்டன். சிறு பிள்ளைகளையும், பயிரைப்போல எண்ணி தினமும் அவர்களது தேவைகளைப் பூர்த்திசெய்தல் வேண்டும். அத்துடன் கண்காணிக்கவும் வேண்டும். இல்லாவிட்டால் பிள்ளையின் வாழ்வு நாசமாகிவிடும்" என்றார் கதிரேசன்.

## 2. பாசத்தினால் பிள்ளை கெடும்

**அ**திகாலையில் மகாலிங்கமும் கதிரேசனும் சரவணனின் வீட்டுக்கு வந்தனர். அவர்களின் வருகைக்காகக் காத்திருந்த சரவணனின் மனைவி காயத்திரி அவர்களை வரவேற்று உள்ளே அழைத்துச் சென்று ஆசனத்தில் அமர்த்திவிட்டுத் திரும்பி வந்து தனது கணவனுக்கு அவர்கள் வந்திருப்பதைச் சொன்னாள்.

**வே**ண்டாவெறுப்புடன் அவர்களைச் சந்திக்கச் சரவணன் வந்த போது மகாலிங்கம் சொன்னான், "வாத்தியார், கதிரேசன் தாத்தாவுக்கு வயது சென்றதால் அழைத்து வந்தேன், பின்பு வருகிறேன்" என்று கூறிவிட்டுப் பதிலை எதிர்பாராது புறப்பட்டான் மகாலிங்கம்.

"**ம**கனே, எனக்கு இங்கு வர விருப்பமில்லை. உனது மனைவியும், அவளின் பெற்றோரும் பலமுறை வற்புறுத்திச் சொன்னமையால் வந்துள்ளேன். பஞ்சதந்திரம் என்ற நூல் சொல்கிறது, "ஒருமுறை சொன்னால் கேட்பவனுக்கு தான் மறுமுறை சொல்ல வேண்டும்" என்று உனக்கு பலமுறை சொல்லிவிட்டேன். நீ கேட்பதாக இல்லை. அப்படி இருந்தும் நான் வந்ததற்கு காரணம் உன்னைப்போல உனது மகனும் வந்துவிடுவானோ என்ற பயத்தால்" மூச்சு விட்டார் கதிரேசன்.

**ச**ரவணன் எதுவும் பேசாது நின்றார், “முதலில் கதிரையில் உட்கார். மதிப்பு மரியாதை என்பன மனதில் இருந்தால் போதும். செயலால் காட்ட தேவையில்லை. நீ எனக்கு சொன்னதைத்தான் நான் உனக்கு நினைவுபடுத்த வந்துள்ளேன்” என்ற கதிரேசன் சில கணங்கள் மௌனமாக இருந்தார்.

“**நீ** ஐந்து பெண் பிள்ளைகளுக்கு பிறகு ஆறாவதாக பிறந்தவன். அதனால் உனது தந்தை அளவுக்கு அதிகமாக பாசம் வைத்துவிட்டார். அதனால் அவர் நீ செய்யும் சிறுசிறு குற்றங்களைக் கூட கண்டிப்பதில்லை. அவர் மதுபானத்தை வாங்கி வீட்டுக்குக் கொண்டு வந்து உனக்கு முன்னால் குடிப்பார். அதை பார்த்த நீ அவர் வாங்கி வைத்திருக்கும் மதுபானத்தை எடுத்து குடித்து விடுவாய். அவரால் தான் நான் கெட்டேன் என்று கூறினாய். சிறு வயதில் அறியாத்தனமாகக் குடித்ததில் தவறில்லை. வளர்ந்து படித்து ஆசிரியரான பின்பும் குடிப்பது தவறு என்று உனக்கு புரியவில்லையா...? அப்பாவின் அளவுக்கு அதிகமான பாசத்தினால் தான் கெட்டேன் என்று கூறும் நீ இப்பொழுது உனது மகன் மீது உனது தந்தையைப் போல தானே பாசம் வைத்துள்ளாய்”

**அ**ப்போதும் சரவணன் பேசவில்லை. அதனால் கதிரேசன் சொன்னார், “அரவிந்தனின் பிறந்ததின விருந்துக்கு காலையில் சென்ற நீ மாலையில் திரும்பியிருக்கலாம். உனது மகன் அடம்பிடிக்கிறான் என்று கூட அழைத்துச் சென்ற நீ அவனை வீட்டில் கொண்டுவந்து விட்டுவிட்டுப் பின்பு சென்றிருந்தால் அவன் பரீட்சை எழுதியிருப்பான். திருமணம் செய்து பலகாலம் பிள்ளை பிறக்காததால் அவன் மீது அளவுக்கதிகமான பாசத்தை வைத்திருக்கும் நீ அவனது நலன் கருதி எதிர்கால வாழ்க்கையைப் பற்றியும் சிந்தித்திருக்க வேண்டும்”.

**ச**ரவணன் அப்போதும் பேசவில்லை, “உலகத்தைப் பார், அதைப்பற்றி யோசி. மனிதன் மட்டும் தான் தன் பிள்ளைகளில் பாசம் கொண்டிருக்கிறான் என்றில்லை. படைக்கப்பட்ட சிற்றுயிர்கள் தம் பிள்ளைகள் மீதும், தம்மை வளர்ப்போர் மீதும் எல்லையற்ற அன்பை வைத்திருக்கின்றன. அதை நீ இனியாவது உணர்ந்து நட. உனது மனைவியும் அவளது பெற்றோரும் சொன்னவற்றை கூறுகிறேன். அவர்கள் இரண்டு முடிவை என்னிடம் கூறியுள்ளனர். ஒன்று, நீ திருந்தி மனிதனாக வாழ்ந்து உனது மகனை நல்வழிப்படுத்த வேண்டும். அடுத்தது திருந்த விருப்பம் இல்லாவிட்டால் வீட்டை விட்டு சென்றுவிட வேண்டும். இதில் எது உனக்கு விருப்பமோ அதைச் சொல், இல்லாவிட்டால், “சட்டப்படி நடவடிக்கை எடுக்க வேண்டும்” என்று உனது மனைவி உறுதியாக கூறியுள்ளாள்” என்றார் கதிரேசன்.

“**எ**னது தந்தை என் மீது வைத்த பாசத்தால் தான் எனது வாழ்வு கெட்டது. அது போல எனது மகனின் வாழ்வும் கெட நான் விட மாட்டேன். எனது மகன் பரீட்சை எழுதாததற்கு காரணம் நான்தான்” அழுதான் சரவணன்.

“**ம**கனே, பலர் பிரச்சனைகளை சமாளிப்பதற்காக அழுது தமது காரியத்தைச் சாதிப்பார். இவ்வாறு நீ பலமுறை அழுதுள்ளாய். அதனால் நான் நம்பமாட்டேன். குடும்பத்தினரும் நம்பமாட்டார்கள். நீ எதை செய்தாலும் அதை அறிந்துகொள்ளும் திறன் எனக்குண்டு என்பதைப் புரிந்து நட” என்று கூறிவிட்டுச் சென்றார் கதிரேசன்.

## 3. கேளாத கடனும் கெடும்

**ச**ரவணன் சிவன் கோவில் மடத்திற்கு வந்து பொன்னுத்துரை அதிபரைச் சந்திக்கச் சென்றபோது அவரின் அருகில் கதிரேசனும், மகாலிங்கமும் இருந்தனர். அவர்களைக் கண்ட சரவணன் வெளியே செல்ல முற்பட்ட போது பொன்னுத்துரை அதிபர், “சரவணா, உள்ளே வா” என்று அழைத்தார்.

**ப**லகாலமாக அதிபரைப்பற்றி பல்வேறு விதமான குற்றங்களைச் சுமத்திய சரவணன் அது பற்றிக் கதைக்க வந்தபோது கதிரேசனும் மகாலிங்கமும் இருப்பதால் கதைக்க விரும்பவில்லை. எனினும் அதிபர் அழைத்தமையினால் கிலேசத்துடன் உள்ளே சென்றான்.

“**இ**ரு” என்றார் அதிபர். அது சரவணனுக்கு சங்கடமாக இருந்தது. அதைக் கவனித்த அதிபர் சொன்னார், “மதிப்பு, மரியாதை, கௌரவம் யாவும், செயலில் இல்லை. மனதில்தான் அவை இருக்க வேண்டும். எனது மாணவர்கள் பலர் என்னைவிட படிப்பில் உயர்ந்தவர்களாக இருக்கின்றனர். சிலர் படிப்பை அரைகுறையில் விட்டுள்ளனர். தர்மலிங்கம் எனது மாணவன் என்று சொல்வதில் நான் பெருமைப்படுகிறேன். அவனது நல்ல குணத்தை ஊரே மெச்சுகிறது. மாணவன் ஆனாலும் அவன் என்னை மதித்தால் நானும் அவனை மதிக்க வேண்டும். அதனால்தான் என்னோடு பேசவரும் மாணவர்களை ஆசனத்தில் அமர்த்திய பின்புதான் பேசுவேன். நீ முதலில் உட்கார்” என்றார் அதிபர்.

“**நா**ன் இன்னொரு நாள் வருகிறேன்” என்று சரவணன் சொல்ல அதிபர் சொன்னார், “நீ எப்போது வந்தாலும் என்னுடன் சிலர் இருப்பார்கள். இரகசியமாகப் பேசவேண்டிய நிலை எனக்கில்லை. அத்துடன் கதிரேசனுக்குத் தெரியாமல் நான் எதுவும் செய்வதில்லை. அவர் இங்கில்லாவிட்டாலும் நீ சொன்னவற்றை நான் கட்டாயம் அவருக்குச் சொல்வேன்” என்றார் அதிபர்.

**சி**றிது தயங்கிய சரவணன் அழுதவாறு அதிபரின் கால்களைப் பிடித்து “என்னை மன்னித்து கொள்ளுங்கள். உங்களிடம் பொய் சொல்லிப் பத்தாயிரம் ரூபாவை ஒரு மாதத்துள் தந்துவிடுவேன் என்று சொல்லி வாங்கினேன். ஆனால் இரண்டு வருடங்களாகியும் திருப்பி

தரவில்லை. மன்னித்துக் கொள்ளுங்கள். இப்போது வட்டியோடு பணத்தை கொண்டு வந்திருக்கிறேன்” என்று சொல்லிப் பணத்தை எடுத்து கொடுத்தான்.

**அ**திபர் சிரித்தார். பின், “சரவணா, நீ கற்றவன். அறிவு என்பது கல்வியால் வருவதல்ல. அப்படி கல்வியால் வருமானால் கற்காத மிருகங்களுக்கும் பறவைகளுக்கும் எவ்வாறு அறிவு வரும். பலர் கல்வியால்த் தான் அறிவு வரும் என்கின்றனர். அறிவு வராது. பகுத்தறிவுதான் வரும். பகுத்தறிவை பலர் தீய வழியில்தான் பயன்படுத்துகின்றனர். ஒரு நாய் தெருவில் கிடைக்கும் தங்க சங்கிலியை மணந்து பார்த்துவிட்டுச் சென்றுவிடும். ஆனால் பழுதான உணவானாலும் பசித்தால் அது உண்ணும். தேவையில்லாதவற்றை விரும்பக் கூடாது. தீயவற்றை நினைக்கவும் கூடாது என்று சிற்றுயிர்கள் நினைக்கின்றன. ஆனால் கற்றவர்கள் தீய செயல்களைத்தான் செய்கின்றனர்” என்ற அதிபர் சிறிது நேரம் ஆசுவாசப்படுத்திக்கொண்டார்.

“**ம**கனே, இல்லாதவன், நோயாளி, அங்க குறைபாடு உள்ளவர்களுக்குத்தான் தான தர்மம் செய்தல் வேண்டும். உனக்கு செய்ய வேண்டிய தேவை இல்லை. நீ பொய் சொல்கிறாய் என்று தெரிந்துதான் நான் உனக்குப் பணம் தந்தேன். கேளாத கடன் கெட்டழிந்து போமென்று முன்னோர் சொல்லியிருக்கிறார்கள். அதனால் தான் காசு தரும்போது அதை தர்மலிங்கத்திடம் கொடுக்குமாறு சொன்னேன். கொடுத்ததைத் திருப்பிக் கேட்கும் பழக்கம் எனக்கில்லை. நான் சிரமப்பட்டு உழைத்த பணம் வீணாகக் கூடாது என்பதற்காகத்தான் தர்மலிங்கத்தை கேட்கச் சொன்னேன். அவன் கேட்க நீ பெரும்கோபம் கொண்டு அவனைத் திட்டியுள்ளாய். தாக்கவும் முயற்சித்தாய். அதனால் அதை கேட்க வேண்டாம் என்று அவனுக்குக் கூறினேன்”.

**மூ**ச்சு விட்டார் அதிபர், “என்னை மன்னித்துக் கொள்ளுங்கள். இனிமேல் அவ்வாறு நடக்க மாட்டேன். பணத்தை வாங்குங்கள்” என்று பணத்தை நீட்டினான் சரவணன்.

“**நா**ன் கொடுப்பேனே தவிர வாங்கமாட்டேன். இந்தப் பணத்தை தர்மலிங்கத்திடம் கொடு. ஒருவன் தவறு செய்யாது வாழ முயல வேண்டும். தப்பித்தவறி தவறு செய்தால்தான் மன்னிப்பு கோர வேண்டும். அதற்காகப் பலதவறுகளை செய்துவிட்டு பலமுறை மன்னிப்பு கேட்க கூடாது” என்றார் அதிபர்.

## 4. கேட்கும் போதும் உறவு கெடும்

“**ம**கனே, கடன் கொடுத்து விட்டு அதைத் திருப்பிக் கேட்டால் உறவு கெடும் என்று எமது மூத்தோர் கூறியிருக்கின்றனர். அது உண்மை. நல்லவர்கள் என்னிடமும் கதிரேசனிடமும் கடன் கேட்பதில்லை. ஏனென்றால் நாமிருவரும் கொடுத்ததைத் திரும்பவும் வாங்கியதில்லை.

அதனால் பழிபாவத்திற்கு அஞ்சியவர்கள் அத்தியாவசிய தேவை வந்தாலும் எம்மிருவரிடமும் கடன் கேட்கமாட்டார்கள். நீ வந்து கடனாகக் கேட்ட போது உனக்குத் தர எனக்கு விருப்பமில்லை. கதிரேசன் தான் கொடுக்கும்படி சொன்னவர். தன்னைக் கற்பித்த குருவிற்கு நன்மாணாக்கர் துன்பம் வர விடமாட்டார்கள் என்று கதிரேசன் கூறியதால் தந்தேன். ஆனால் நீ என்னைப் பற்றி மிகமிக இழிவாகப் பலரிடம் பேசியுள்ளாய். கடனைக் கேட்டு வந்த தர்மலிங்கத்திற்கு நீ அடித்ததால் அவனது மைத்துனன் உனக்கு அடித்தவன். இதனால் அமைதியாக வாழ்ந்த எனது மனம் வேதனைப்பட்டது".

**ச**ரவணன் பேசவில்லை. கண்களை மூடியபடி நின்றான். "ஒருவன் பிழை விடுவதும், தவறு செய்வதும் இயல்பானது. அவனையறியாம கூட அது நடைபெறலாம். ஆனால் நீ வேண்டுமென்றே நான் செய்யாதவற்றையெல்லாம் செய்வதாகச் சொல்லியுள்ளாய். பாடசாலையில் ஏராளமான பணத்தைக் கையாடியதாகச் சொல்லியிருக்கிறாய். பலர் அதை நம்பாவிட்டாலும், சிலர் நம்பியிருப்பார்கள். எல்லாம்வல்ல கடவுளுக்கே எதிரிகள் இருக்கிறார்கள். குறை சொல்பவர்கள் இருக்கிறார்கள். திட்டுபவர்கள் இருக்கிறார்கள். அப்படியிருக்க நான் எம்மாத்திரம்" கவலைப்பட்டார் அதிபர்.

"**ஐ**யா, இது என்ன புதுமை நீங்கள் கவலைப்பட்டதை நான் இதுவரை கண்டதில்லை. உங்களது மனைவி இறந்த போது நான் ஆறுதல் கூற வந்தேன். அப்போது "கதிரேசனண்ணை, பிறந்தன்றே மரணமும் தீர்மானிக்கப்படுகிறது. நல்ல மனைவியாக வாழ்ந்த அவளது உடல் இளைப்பாறி விட்டது. அது இயற்கை, அதை மாற்ற முடியாது. மாற்ற முடியாத ஒன்றை மாற்ற முயலலாமா? இவ்வளவு காலமும் எனது தேவையை அறிந்து செயற்பட்டவளை நினைத்து மகிழ்ந்தேன். இனிமேல் அவளது செயற்பாடுகளை நினைத்து வாழ்வேன்" என்றீர்கள். அதற்கே கவலைப்படாத நீங்கள், இந்த அற்ப விஷயத்தைப் பெரிதாக எண்ணிக் கவலைப்படுகிறீர்கள்" என்றார் கதிரேசன்.

"**இ**து அற்ப விஷயமா...? சொல்லுங்கள்" என்று அதட்டினார் அதிபர்.

**எ**வருடனும் பலத்தும் பேசாத அதிபர், நிலை குலைந்துபோனார். "கதிரேசன் செய்தவற்றைச் சொல்லலாம். அது என்னைத் திருத்த வழிவகுக்கும் செய்யாததைச் சொன்னால் ஒரு சிலரென்றாலும் அதை நம்பத்தான் செய்வர். ஒரு குடம் பாலுக்கு ஒருதுளி விஷம் போல செய்யாதவற்றைச் சொன்னதால் கோபப்பட்டுவிட்டேன்" என்றார் அதிபர்.

"**இ**தெல்லாம் அறிவுள்ளவர்களுக்குத் தான் புரியும். கவலைப்படாதைங்கோ" என்றார் கதிரேசன்.

## 5. தெவிட்டினால் விருந்து கெடும்

**சி**வன் கோவில் மடத்திற்கு வந்த அரவிந்தன் அங்கு அதிபரும் கதிரேசனும் சேர்ந்து இருப்பதைக் கண்டு மிக்க மகிழ்வுடன் அவர்களின் அருகில் வந்து சொன்னான்", நான் தவறு செய்துவிட்டேன், பல ஆண்டுகள் பெற்றோர், உறவினர்கள், அயலவர்கள், நண்பர்களைப் பிரிந்து தனிமையில் இயந்திரம்போல வெளிநாட்டில் வாழ்ந்ததால், அவர்களை மகிழ்விப்பதற்காகப் பெரியளவில் விருந்தொன்றை ஏற்பாடு செய்தேன். அதில் எனது விருப்பம் பெரும் பிரச்சினைகளை உண்டாக்கிவிட்டது. குடிக்காத பல இளைஞர்களுக்குக் குடிப்பவர்கள் குளிப்பானங்களுக்குள் மதுபானத்தைக் கலந்து கொடுத்தமையால் அவர்களின் செயல்கள் நல்லவர்களை முகம் சுழிக்க வைத்துவிட்டது. குடிப்பவர்கள் அளவுக்கதிகமாகக் குடித்துவிட்டுக் கலகம் செய்தமையால் நல்லவர்கள் விருந்திற்கு வந்து அங்குள்ள நிலையைப் பார்த்துவிட்டுத் திரும்பச் சென்றுவிட்டனர். என்னைக் கற்பித்து ஆளாக்கிய அதிபரும், கதிரேசன் தாத்தாவும் விருந்திற்குவராததால் அம்மாவும் அப்பாவும் பெருந்துன்பப்பட்டனர். பல வருடங்களாகக் கஷ்டப்பட்டு உழைத்த நான் உறவினர்களை மகிழ்விக்க நினைத்தது தப்பாகிவிட்டது" என்ற போது கதிரேசன் சொன்னார்,

"**ம**கனே, உனது எண்ணம் சிறப்பானது. ஆனால் அதைச் செய்த விதம்தான் தவறானது. தேவைக்கு அதிகமாக மதுபான வகைகளை வாங்கியதும், அளவுக்கதிகமாகச் சமைத்தாலும் தான் இந்த நிலை உருவானது. குடிகாரன் குடித்துக் கொண்டிருக்க விருப்புவானே தவிரச் சாப்பாட்டில் கவனமெடுக்கமாட்டான். அளவுக்கதிகமாகக் குடித்த பலர் கலகத்தை உண்டுபண்ணினர். வாந்தி எடுத்துச் சபையைக் குழப்பினர். அளவுக்கு மிஞ்சினால் அமுதமும் நஞ்சு என்பார்கள். அத்துடன் தெவிட்டினால் விருந்து கெடும் என்றும் சொல்வார்கள். உனது மகிழ்விற்காக எத்தனை உயிர்களைக் கொன்றுள்ளாய். பணத்தைப் பணமென்று பராது கண்டபடி செலவு செய்தும் பயனில்லாமல் போய்விட்டது" என்றார் கதிரேசன்.

"**ம**கனே, இவ்வூரவர் முழுப்பேரும் என்னிடம் கல்விகற்றவர்கள். அவர்கள் என் முன்னிலையில் குடித்துவிட்டு அட்டகாசம் செய்வதை எப்படி நான் சகிப்பது" என்றார் அதிபர்.

**க**திரேசன் தாத்தாவும், அதிபரும் சாப்பிடாததால் நான் சாப்பிடமாட்டேன் என்று அப்பா கூற அதைக்கேட்ட அம்மாவும் சாப்பிடாததால் அவர்களது சகோதரர்களும் பிள்ளைகளும் சாப்பிடவில்லை" கலங்கினான் அரவிந்தன்.

"**அ**திபரும் தாத்தாவும் சாப்பிட வேண்டுமென்றால் சிவன்கோவிலில் அன்னதானம் கொடு" என்றான் தர்மலிங்கம்.

**அ**தைக்கேட்டு மகிழ்ந்த அரவிந்தன், "வெள்ளிக்கிழமை கொடுக்கலாம் ஆயத்தப் படுத்துங்கள்" என்றான்.

**வெ**ள்ளிக்கிழமை ஊரவர் அனைவரும் மகிழ்வுடன் சிவன் கோவிலுக்கு வந்து அன்னதான நிகழ்வில் கலந்து கொண்டனர். மிக்க மகிழ்வுடன் உண்ணும் மக்களைப் பார்த்து அரவிந்தனும் பெற்றோரும் மிக்க மகிழ்வடைந்தனர்.

## 6. ஓதாத கல்வி கெடும்

**பொ**ன்னுத்துரை அதிபர் கடமையில் இருந்து ஓய்வு பெற்ற போதும் இன்றும் கல்வித் திணைக்கள அதிகாரிகள் அவரை மதிக்கின்றனர். அதற்குக் காரணம் கல்விப் பணிப்பாளர் அவரது மாணவர். அது ஊரவர் எல்லோருக்கும் தெரியும்.

**அ**ன்று சரவணன் கற்பிக்கும் பாடசாலைக்கு கல்வியை மேற்பார்வை செய்யும் குழு வந்திருந்தது. முக்கியமாக அவர்கள் வரக்காரணம் சரவணன் தான். அவன் ஒருபோதும் அதிபரை மதித்ததில்லை. அதற்குக் காரணம், அதிபர் அவரோடு ஆசிரிய பயிற்சிக் கலாசாலையில் ஒன்றாகப் படித்தவர். விசாரணைக்கென்று வராது சாதாரணமாக எல்லாப் பாடசாலைகளுக்கும் செல்வதுபோல அக் குழு வந்திருந்தது.

**ஒ**வ்வொரு வகுப்பாக மேற்பார்வை செய்து வந்த குழு சரவணனின் வகுப்புக்கு வந்தபோது, சரவணன் அவர்களை வணக்கம் கூறி வரவேற்றான். ஏனைய ஆசிரியர்களது வணக்கத்திற்குப் பதில் வணக்கம் கூறிய கல்விப் பணிப்பாளர் சரவணனை மதிக்கவில்லை. வணக்கமும் கூறவில்லை.

"**உ**ங்களது பாடத்திட்டம் பாடக்குறிப்பு மற்றும் சொல்லட்டை, செயலட்டை, உபகரணங்களைக் கொண்டு வாரும்" என்றார் கல்விப்பணிப்பாளர்.

"**சே**ர், இவர் பாடக்குறிப்பு, பாடத்திட்டம் எதுவும் எழுதுவதில்லை. கேட்டால் நான் இருபது வருடங்களாகக் கற்பிக்கிறேன். எனக்கு அவை தேவையில்லை என்பார்" என்றார் அதிபர்.

"**எ**த்தனை வருடங்கள் கற்பித்தாலும் பாட ஆயத்தம், பாடக்குறிப்பு, இன்று கற்பிக்கப் போகும் அலகு என்பவற்றை எழுதிவைத்திருத்தல் வேண்டும். ஆசிரியர்களும் மாணவர்களும் தினமும் கற்கவேண்டும். கற்பிப்பதற்கான முன்னாயத்தமும், உபகரணங்களும் வைத்திருத்தல் வேண்டும். உமக்கு யாவும் தெரியும். மாணவர்களுக்கு எதுவும் தெரியாது. அதனால் சொல்லட்டைகள், படங்கள் யாவும் வைத்திருத்தல் வேண்டும். அரசாங்கம் பாடத்திட்டத்தை

திட்டமிட்டு வகுத்துள்ளது. அதற்கான செயற்திட்ட வகுப்புக்கள் நிபுணத்துவம் அதாவது பயிற்சி பெற்றவர்களால் வழங்கப்படுகிறது. அதற்கும் நீர் ஒழுங்காக வருவதில்லை. அதிபர் பரீட்சையில் சித்தியடைந்தமையால் தான் அவர் அதிபராக நியமிக்கப்பட்டார். நீர் பரீட்சை எழுதியும் சித்தியடையவில்லை. அதனால் நீர் நடந்து கொண்டமைக்கான காரணத்தை எழுதித் திணைக்களத்திற்கு அனுப்பும். அதுவரை நீர் கடமையில் இருந்து இடைநிறுத்தப்படுகிறீர்" என்று கூறிவிட்டுக் கல்விப்பணிப்பாளர் சென்றுவிட்டார்.

**க**ல்விப்பணிப்பாளர் ஒழுக்கமானவர். கட்டுப்பாடானவர். நீதியானவர். அதனால் அவர் யாரினது சிபாரிசினையும் ஏற்கார் என்று தெரிந்த சரவணன் பொன்னுத்துரை அதிபரிடம் வந்தார்.

"**ச**ரவணா, நீ எனது மாணவன். எனது ஊரவன். அதனால் என்னைப் பற்றி முழுமையாகத் தெரிந்தவன். நான் அதிபராக இருக்கும் காலத்தில் எனது உறவினர்களையோ, நண்பர்களையோ ஆசிரியராக நியமிக்க விரும்புவதில்லை. ஒழுக்கமாகப் பாடசாலையை நடத்தினேன். ஒழுக்கமாக வாழ்ந்து வருகிறேன். அரச ஊழியர் ஒருவர் அரசின் சட்டதிட்டங்களுக்கு அமைவாக வாழ வேண்டும். மேலதிகாரி இனத்தவனாக, இனையவனாக, நண்பனாக இருந்தாலும் அவரை மேலதிகாரியாக மதித்தல் வேண்டும். இவை எதையும் நீ செய்வதில்லை. ஓர் அதிபராக இருந்த நான் பாடசாலைச் சட்ட விதிகளுக்கு முரணாக நடக்கும் ஒருவரை அவர் சட்ட விதிப்படி தான் கடமை செய்கிறார் என்று எப்படிச் சொல்வது. ஒழுக்கக் கேடான செயல்களை நான் செய்யவும் மாட்டேன், செய்பவர்களுக்குத் துணை செய்யவும் மாட்டேன்" என்றார் பொன்னுத்துரை அதிபர்.

**இ**தை ஏற்கனவே பலர் சரவணனுக்குக் கூறியிருந்தமையால் அவர் அதிர்ச்சியடையவில்லை. துயரத்துடன் வெகுநேரமாக மடத்தில் நின்றார். அதைக் கவனிக்காதவர் போலப் பொன்னுத்துரை அதிபர் தனது வேலைகளைச் செய்து கொண்டிருந்தார்.

**இ**ருள் கவிந்த பின்பு அங்கு வந்த கதிரேசன் சொன்னார், "சரவணா பொன்னுத்துரை அதிபர் தனது சகோதரியின் மகனுக்கு ஓ.எல் பெறுபேறு போதாதென்பதற்காக ஏ.எல் படிக்கவிடவில்லை. அது இரு குடும்பங்களுக்குமிடையே பெரும் பிரச்சினையை உருவாக்கியது உனக்குத் தெரியும். அதனால் உனக்கு அவர் உதவி செய்ய வேண்டுமானால் ஒரே ஒரு வழி மட்டும் தான் உள்ளது. அதைச் செய்வாயா…?" என்று கேட்டார் கதிரேசன்.

"**நீ**ங்கள் எதைச் செய்யச் சொல்லிச் சொன்னாலும் அதை நான் செய்வன்" என்றான் சரவணன்.

“சரவணா, கல்விமான்கள் தான் வகுப்பில் ஆசிரியர்கள் எவ்வாறு கற்பிக்க வேண்டுமென்று தீர்மானிக்கின்றனர். அதை யாரும் மீற முடியாது. ஓதாது விட்டால் அதாவது தினமும் முறைப்படி கற்காவிட்டால் கல்வி மட்டுமல்ல செய்தொழில் அனைத்தும் கெட்டுவிடும். பெரும் பெரும் கலைஞர்கள் கூடத் தினமும் பயிற்சி செய்கின்றனர். எமது ஊரில் உள்ள பிரபலமான நாதஸ்வர வித்துவான் சிவலோகநாதன் தினமும் வீட்டில் குறிப்பிட்ட நேரம் நாதஸ்வரம் வாசிப்பது ஏன் தெரியுமா..? தினமும் பயிற்சி செய்யாவிட்டால் பலவற்றை மறந்து விடலாம் என்பதற்காகத்தான். அதனால் நான் சொன்னபடி கடிதத்தை எழுதித்தா” என்றார் கதிரேசன்.

வேறுவழியின்றி கதிரேசன் கூறியபடி கடிதத்தை எழுதிக் கொடுத்தார் சரவணன்.

## 7. ஒழுக்கமில்லாத வாழ்வு கெடும்

“தாத்தா, இப்போது எனக்குத் துணையாக இருப்பது தொழில் ஒன்றுதான். அது இல்லாது போய் விட்டால் நான் சாவதைத் தவிர வேறு வழியில்லை. மனைவியும், மனைவியின் பெற்றோரும், அவளின் உறவினர்களும் என்னால் தமது குடும்பங்களின் மானம் போவதாகக் கூறி விவாகரத்துச் செய்ய விரும்புகின்றனர். எனது பெற்றோர் என்னை விரும்புவதில்லை. அதனால் எப்படியாவது எனக்கு உதவி செய்யுங்கள். நான் செய்த தீய செயல்களை மன்னியுங்கள்” என்று கதிரேசனின் கால்களைப் பற்றிப் படித்து வணங்கினான் சரவணன்.

“சரவணா, தனது எண்ணங்களை நிறைவேற்ற விரும்பும் தீயவர்கள் தான் கால்களில் விழுந்து வணங்கி மன்னிப்புக் கேட்பார்கள். நல்லவர்கள் ஒருபோதும் காலைப் பிடிக்கமாட்டார்கள். மனதைப் பிடிப்பார்கள். மனதைப் பிடித்துவிட்டால் அவர்கள் நினைத்ததும், நினைக்கவிரும்புவதும் நிறைவேறும்”.

சரவணன் எழுந்து நின்றான். அவனது கண்களால் கண்ணீர் வழிந்தது.

“சரவணா, ஆசிரியர் என்பவர் இறைவனின் மறு அவதாரம். மாதா, பிதா, குரு, தெய்வம் என்று எமது சமயம் தெய்வத்திற்கு முன் தெய்வமாக ஆசிரியரைச் சொல்கிறது. அதைவிடச் செய்யும் தொழிலே தெய்வம் என்று எம் முன்னோர் கூறியுள்ளனர். எத் தொழிலாக இருந்தாலும் அதை அர்ப்பணிப்புடன் முறைப்படி செய்தால் தெய்வம் வலியவந்து உதவி செய்யும். அது எமது கண்முன்னே நடக்கிறது. நடராசா படித்து விட்டு வேலை கிடைக்காததால் ஒரு சைக்கில் திருத்தும் கடையை ஆரம்பித்தான். ஐந்து வருடங்களில் அவன் சைக்கிலை வெளிநாட்டிலிருந்து இறக்குமதி செய்து விற்குமளவு உயர்ந்து விட்டான். ஆசிரியைத் தொழில் புனிதமானது. அதைக் கற்றவர்கள் விதித்த நிபந்தனைப்படிதான் செய்தல் வேண்டும்”.

“ஒழுக்கமில்லா வாழ்க்கை ஒருபோதும் உயர்வையும், புகழையும், மதிப்பையும் தராது. எமது கிராமத்தில் ஒழுக்கமாக வாழ்வோரின் வாழ்க்கையை நினைத்துப்பார். அவர்கள் துன்பப்பட்டதில்லை. துன்பமேற்பட்டால் யாரோ ஒருவர் அவருக்கு உதவுவார். மனதால் கூட தீயவற்றை எண்ணக்கூடாது. தீய எண்ணங்கள் மனதைக் குழப்பி தீய செயல்களைச் செய்யவைக்கும். அது தான் உனக்கு நடந்தது. அதிபரை விட நான் எந்த வகையில் குறைந்தவன் என்ற நினைவு உனது மனதில் தோன்றியதால் தான் தீய வழிகளை நாடினாய். அது உன்னை எங்கு கொண்டு சென்றுள்ளது. அதனால் இனியாவது திருந்தி உலக நடைமுறைக்கேற்ப வாழ்” என்றார் கதிரேசன்.

அப்போது அங்கு வந்த பொன்னுத்துரை அதிபர் சொன்னார், “உனக்கு உதவி செய்வது பாவம். இளகிய மனமுடைய கதிரேசனின் வேண்டுகோளை நிராகரிக்க முடியாமையால் செல்கிறேன். இன்னொருமுறை நீ வரக்கூடாது. கதிரேசண்ணை உங்களுக்கும் தான் இதைச் சொல்கிறேன்”.

## 8. சேராத உறவு கெடும்

ஒருவாரம் கழிய சரவணனுக்கு அருகில் உள்ள ஒரு பாடசாலைக்கு இடமாற்றம் வந்தது. சரவணனும் அவனது மனைவியும் கதிரேசனிடம் வந்தனர்.

“தாத்தா, நீங்கள் செய்த உதவிகளை நான் ஒருபோதும் மறக்கமாட்டேன். இவருக்கு கல்யாணி என்றொரு தங்கை உண்டென்பது உங்களுக்குத் தெரியும். அவள் ஒரு பெரிய வர்த்தகரைத் திருமணம் செய்து சகல வசதிகளோடும் வாழ்கிறாள். இவர் இப்போது திருந்தி மிகமிக மகிழ்வுடன் வாழ்வதோடு, பகைவர்களாக இருந்தவர்களோடும் நட்புடன் வாழ்கிறார். நல்லபடி வாழும் இவர் தனது தங்கையின் கணவருடன் அடிக்கடி முரண்படுவார். கடைசியாக அரவிந்தனின் பிறந்ததின விருந்தில் இருவரும் பெரும் பிரச்சினைப்பட்டனர். இவர் அவருக்கு அடித்தும் விட்டார். இப்பொழுது அது பெருந் தவறு என்று உணர்ந்து தங்கையின் வீட்டுக்குச் சமாதானம் பேசச் சென்றபோது இவரது தங்கை இவரை அவமதித்து அனுப்பிவிட்டாள். சுமார் பதினைந்து வருடகாலமாக இருவருக்குமிடையே பகை நீடிக்கிறது. இவர் குடித்து வெறித்துத் தீய செயல்களைச் செய்து வந்தமையால் இவர்கள் சேர்ந்தால் மேலும் மேலும் பிரச்சினைகள் வரும் என்று நான் ஒதுங்கியிருந்தேன். இவரது தங்கையும் நானும் ஒரே வகுப்பில் படித்தவர்கள். இருவரும் நல்ல நண்பர்கள். இவர் கோபித்தாலும் நாமிருவரும் கைத்தொலைபேசியில் இப்போதும் பேசி மகிழ்வோம். இப்போது இவர் தங்கையோடு உறவாட விரும்புகிறார். தயவு செய்து சேர்த்து வையுங்கள். நாம் பழகாதிருந்தால் உறவு அற்றுப்போய்விடும். அவர்களது பிள்ளைகளை எமக்குத் தெரியாது. எமது பிள்ளை

அவர்களுக்குத் தெரியாது. சேராத உறவு கெட்டுவிடும் என்று பெரியவர்கள் சொல்வார்கள். அது எப்போதோ கெட்டுவிட்டது. அதைத் தழைக்கச் செய்யுங்கள்" என்று அழுதாள் மாலதி.

"இன்று நாள் சரியில்லை. நாளைக் காலையில் வாருங்கள் சென்று கதைப்போம்" என்று கூறிய கதிரேசன் கல்யாணியின் கணவனான திருமாறனுக்குத் தொலைபேசியில் தான் வருவதைத் தெரிவித்தார்.

திருமாறனுக்குக் கதிரேசனின் சொற்கள் பெரும் இன்பத்தைக் கொடுத்த போதும் ஏன் அவர் திடீரென்று தன்னைச் சந்திக்க வருகிறார் என்ற ஒரு பயத்தையும் கொடுத்தது.

மறுநாட் காலை கதிரேசனும், சரவணனும், மாலதியும் திருமாறனின் வீட்டிற்கு வாகனமொன்றில் வந்தனர். கதிரேசன் சரவணனையும் மாலதியையும் வாகனத்துள் இருக்கும்படி கூறிவிட்டு இறங்கி உள்ளே சென்றார்.

அவரின் வருகைக்காகக் காத்திருந்த திருமாறன் மிக்க மகிழ்வுடன் அவரை வரவேற்று ஆசனத்தில் அமர்த்திவிட்டுச் சொன்னான், "எதையென்றாலும் போனில் சொல்லிருக்கலாம். இல்லாவிட்டால் நான் வந்து கேட்டிருப்பேன்" என்று கூறும்போது கதிரேசன் சிரித்தபடி கேட்டார், "ஏன் நான் உனது வீட்டுக்கு வரக்கூடாதா? போனிலோ அல்லது வரவளைத்தோ கதைக்க கூடாத பிரச்சினைகளை நான் வந்து தானே கதைக்க வேண்டும்".

அப்படி என்ன பிரச்சினையாக இருக்கும். திருமாறனின் மனம் அல்லறப்பட்டது.

"மகனே, பெரிதாக எதையும் யோசிக்காதே. சேராத உறவு நாளடைவில் துண்டிக்கப்பட்டுவிடும். சரவணன் தீயவன். குடிகாரன். யாரையும் மதிக்காதவன் என்று ஊருக்கே தெரியும். ஆனால் அவனுக்கு ஒரு பிரச்சினை வந்ததால் அவன் முற்றாக மாறிவிட்டான். ஒருவரைப் பெற்றார், மனைவி, மக்கள், உற்றார் உறவினர், நண்பர்கள் எல்லோரும் ஒதுக்கிவைத்தால் அவன் மீண்டும் தீயவனாகி விடுவான். நீ ஒழுக்கமானவன், நல்லவன், பிறரை நேசிப்பவன். அதனால் அவனை மன்னித்து விடு.." என்று கதிரேசன் கூறியபோது திருமாறன் எதையோ சொல்ல வாயுன்னினான்.

அதற்குக் கதிரேசன் இடங்கொடுக்காது சொன்னார், "மகனே, நீ சொல்லப்போவது என்னென்று எனக்குத் தெரியும். அரவிந்தனின் பிறந்ததினத்தன்று சரவணன் ஒதுங்கியிருந்தவன். உன்னுடன் ஏற்கனவே முரண்பட்ட அரவிந்தன், சரவணனுக்கு அளவுக்கதிகமாக மதுவைக் கொடுத்து ஏவிவிட்டதால் தான் யாவும் நடைபெற்றன".

“அது எனக்குத் தெரியும். அவன் எனது தந்தையின் சகோதரியின் மகன். தான் வெளிநாட்டில் சம்பாதித்ததை விட நான் உள்ளூரில் சம்பாதித்தது அதிகம் என்று நினைத்து முரண்படுகிறான். நான் அந்த விழாவுக்கு வரவிரும்பவில்லை. பெற்றோர் தான் வற்புறுத்தி அனுப்பிவைத்தனர். உறவினரோடு முரண்படக்கூடாது என்று அமைதியாக வாழ்பவன் நான். உறவினரானாலும் தீயவரை ஒதுக்கத்தானே வேண்டும். ஆனால் மனைவி தனது சகோதரன் மீது அன்பு வைத்துள்ளாள். அதனால் எனது பெற்றோரும் அவளை மதிக்கின்றனர். நாம் மதிக்க மதிக்க சரவணன் அதன் பெறுமதி தெரியாது எம்மை அவமானப்படுத்துகிறார். குடிகாரனுக்கு குடியாத நேரத்தில் கூட அறிவு வேலை செய்யாதா..? உறவினரானாலும் தீயவரானால் ஒதுக்கத்தானே வேண்டும்” என்றான் திருமாறன்.

“மகனே, சரவணன் இப்பொழுது முழுமையாக மாறிவிட்டான். காலத்தை நாம் குறை சொல்லாவிட்டாலும் காலம் வாழ்வைப் பாதிக்கிறது என்பதை மறுக்க முடியாது. சரவணனது மூத்த மகன் ஏஎல் பரீட்சை எடுக்கிறான். இளையவன் தரம் ஐந்து புலமைப்பரிசில் பரீட்சை எழுதவில்லை”.

“தாத்தா, எனக்கு யாவும் தெரியும் இறைவனை முழுமையாக நம்பி நான் வாழ்வதால் இறைவன் எப்படியாவது எனக்கு யாவற்றையும் அறிவித்துவிடுவார். இறைவனை நெடுநேரம் பூசித்துவிட்டுத்தான் படுத்தேன். கனவில் சரவணனும் மனைவியும் மகிழ்வுடன் என்னுடன் உரையாடினர். அதனால் அவர்களை வரச் சொல்லுங்கள்” என்றான் திருமாறன்.

சரவணனும் திருமாறனும் பகையை மறந்து மகிழ்வுடன் உரையாடினர். கல்யாணியும் மாலதியும் பெருமகிழ்வுடன் பழைய நினைவுகளை மீட்டுக் கொண்டிருந்தனர்.

## ௯. நாடாத நட்புக் கெடும்

மாலதியின் மகிழ்வுக்கு அளவே இருக்கவில்லை. காரணமின்றிக் கெக்கட்டம் விட்டுச் சிரித்தாள். எதையோ கதைத்தாள் அது போலத்தான் கல்யாணியும் இருந்தாள். சம்பந்தா சம்பந்தமில்லாது இருவரும் பலத்து பலமாகச் சிரிப்பதைக் கண்ட கல்யாணியின் மூத்தமகள் அர்ச்சகா தாயை விசித்திரமாகப் பார்த்தாள். யாரோ, ஒரு பெண்ணுடன் உரிமையுடன் வாடி, போடியென்று கதைத்துப் பலமாகச் சிரிப்பதைப் பார்க்க அர்ச்சகாவுக்குப் பைத்தியம் பிடித்துவிடும் போலத் தோன்றியது, “இது யாரம்மா…? ஏன் இவ்வாறு பலமாகச் சிரிக்கிறாய்? உனக்கு என்ன நடந்தது?” என்று அவள் பலமுறை கேட்டும் கல்யாணி பதில் சொல்லாததால் கவலைப்பட்டாள் அர்ச்சகா.

**ப**லத்த சத்தத்துடன் தனது மனைவி கதைத்துச் சிரிப்பதற்கான காரணம் என்னவென்று அறிய வந்த திருமாறன் அவர்களது நிலையைக் கண்டு அதிசயித்தான்.

“**அ**ப்பா, யாரப்பா இது. அரைமணித்தியாலமாக நான் கேட்கிறேன் அதைப்புரிந்து கொள்ளாது விசரர்போல இருவரும் பலமாகச் சிரிக்கின்றனர். இப்படி அம்மா நடந்து கொண்டதில்லை” விம்மினாள் அர்ச்சகா.

“**ம**களே உனது தாயாரின் உயிருக்குயிரான நண்பி மாலதி. இருவரும் கடந்த பதினைந்து வருடங்களாகச் சந்தித்ததில்லை. இன்று தான் சந்தித்திருக்கிறார்கள். உனது அம்மாவுடன் சேர்ந்து சிரிப்பது உனது மாமி”.

“**மா**மியா…? எனக்குத் தெரியாத அந்த மாமி யாரப்பா…?” அர்ச்சகா வியப்புடன் கேட்டாள்.

**தி**ருமாறன் விபரமாகச் சொன்னான், “அர்ச்சகா, படிக்கும் காலத்தில் இருந்தே இருவரும் உயிர்த்தோழிகள். நான் உனது அம்மாவைத் திருமணம் செய்யக் காரணியாக இருந்தவர் உனது மாமி. சரவணன் மாமா எம்முடன் பிரச்சினைப்பட்டதால் இருவரும் பிரிந்திருந்தனர். இன்று ஒற்றுமையாகிவிட்டோம். அந்த மகிழச்சியைக் கொண்டாடுகின்றனர். அம்மாவுக்கு நான் வந்ததே தெரியாது”.

“**எ**மது பாடப்புத்தகத்தில் திருக்குறள் இருக்கிறது. அதில் ஓர் அதிகாரம் நட்பு. பண்டிதர் மிகவும் சுவையாகக் கதைகள் சொல்லிக் கற்பிப்பார். நட்பைப் போலத் தொடர்புகொள்வதற்கு பெருமையானது உலகில் எதுவும் இல்லை. அறிவுடையவர்களுடைய நட்பு நாளுக்கு நாள் வளரும். நற்பண்புடையவர்களின் நட்பு இனிமையானது, பாதுகாப்பானது” என்றெல்லாம் பண்டிதர் சொல்லித்தந்தவர். அத்துடன் பதினைந்து வருடங்களாகப் பிரச்சினைப்பட்டுக் கொண்டிருக்கும் இரு குடும்பங்களில் வாழும் பெண்கள் நட்புடன் இருக்கிறார்களென்றால் பண்டிதர் கற்பித்த குறளின் மெய்மைத் தன்மையைப் புரிந்து கொண்டேன்” என்றாள் அர்ச்சகா.

“**அ**தென்னம்மா மெய்மைத்தன்மை” ஆவலோடு கேட்டான் திருமாறன்.

“**அ**ப்பா, நட்பாக இருப்பதற்கு நேரில் சந்திக்கவும் தேவையில்லை. பழகவேண்டியதுமில்லை. ஒரே தன்மையான உணர்வு நட்பைத் தொடரவைக்கும்” என்றொரு குறள் சொல்கிறது. அது உண்மை என்று புரிந்து கொண்டேன்” என்றாள் அர்ச்சகா.

“**அ**ப்படியா அம்மா…? நான் உவற்றையெல்லாம் படிக்கவில்லை” என்றான் திருமாறன்

“**அ**ப்பா, நட்புக்கு இலக்கணம் எதுவென்றால் ஒருபோதும் எந்தப் பிரச்சினை வந்தாலும் மனம் பேதலிக்காது, முகம் கோணாது ஒரே மாதிரிப் பழகுவதாகும். இப்போது புரிந்து கொண்டேன். இருவரும் தொலைபேசியில் நேரம் போவது தெரியாது கதைப்பார்கள். அந்த நேரம் நான் “பசிக்கிறது என்றால் போய் எடுத்துச் சாப்பிடு என்பா…” நீங்கள் நல்ல அப்பா இருவரையும் கதைக்கவிட்டுள்ளீர்கள். ஆனால் மாமா விடமாட்டார். அவர் இல்லாத நேரங்களில்தான் மாமி அம்மாவுடன் பேசுவதாக நான் அறிந்துள்ளேன்” என்றாள் அர்ச்சகா.

“**எ**மது நட்பைக் கெடுக்க யாராலும் முடியாது. நாடாத நட்புத்தான் கெடும். நாம் நேரில் காணாவிட்டாலும் போனில் காண்கிறோம்” என்று கூறிய கல்யாணி பலமாகச் சிரித்தாள். இதிலை நின்றால் எனக்கு விசர் பிடித்துவிடும என்று கூறிவிட்டுச் சென்றாள் அர்ச்சகா.

## 10. நயமில்லாச் சொல்லும் கெடும்

**த**ர்மலிங்கம் வந்து சரவணனைப் பொன்னுத்துரை அதிபர் உடனே வரும்படி கூறியதால் அவசர அவசரமாகப் பரபரப்புடன் மோட்டார் சைக்கிளில் வேகமாக வந்தான் சரவணன்.

**இ**ப்போது அதிபரும், கதிரேசனும் அவனை மதிப்பதால் ஊரவர்களும் மதித்தனர், “எதற்காக அதிபர் வரச்சொன்னவர்” என்ற நினைவுடன் மடத்திற்கு வந்தான் சரவணன். மடத்துக்கு வெளியே நின்ற வேப்பமர நிழலில் கதிரேசனும் அதிபரும் அமர்நிதிருந்தனர்.

“**ச**ரவணா, ஆரம்பக் கல்வி முதன்மை ஆசிரியருக்கான விண்ணப்பத்தைக் கல்வித்திணைக்களம் கோரியுள்ளது. கல்வித்திணைக்களத்திற்குச் சென்ற நான் ஒரு விண்ணப்பப் படிவத்தை எடுத்து வந்தேன். நீ ஆரம்பக்கல்வி பயிற்சி ஆசிரியர். பின் பட்டப்படிப்பையும், டிப்ளோமாப் படிப்பையும் முடித்துவிட்டாய். உனக்குக் கிடைக்கும். இந்தா விண்ணப்பப்படிவம்” என்று விண்ணப்பப் படிவத்தை நீட்டினார் அதிபர்.

**த**யங்கியபடி அதைப் பெற்றுக் கொண்ட சரவணன், “குருவே, நீங்கள் நேர்மையானவர், ஒழுக்கமானவர், எல்லோரும் மகிழ்ச்சியாக வாழ வேண்டும் என்ற மேலான எண்ணம் கொண்டவர். அப்படியான உங்களை கடமைப்படவைக்க நான் விரும்பவில்லை” சரவணனை வியப்புடன் பார்த்தார் அதிபர், “குருவே, பொதுவான கொள்கை என்னவென்றால் பதவிக்கான ஆளைத் தெரிவு செய்த பின்பே விண்ணப்பம் கோருவர். இதுவரை காலமும் ஆரம்பக்கல்வியை அறியாத கணிதம், விஞ்ஞானம், விவசாயம் போன்ற பாடங்களில் பயிற்சி பெற்றவர்களுக்குத்தான் ஆரம்பக்கல்வி முதன்மை ஆசிரியர், ஆரம்பக்கல்வி உதவிக்கல்விப் பணிப்பாளர் பதவி வழங்கப்பட்டது. அதைப்பற்றிக் கதைத்தமையால் தான் நான் பாதிக்கப்பட்டேன். அதனால் தான் யாழ் மாவட்டம் முதல் நிலையில் இருந்து கடைசி

நிலைக்கு வந்தது. அத்துடன் தரமில்லாத அதிபர்கள் தான் உயர்தரப் பாடசாலைகளுக்கு அதிபராக நியமனம் பெற்றனர். இதனால் விரக்தியுற்ற ஆசிரியர்களும், தரமான அதிபர்களும் சம்பளத்திற்காக வேலை செய்தனர். எனது வகுப்பிற்கு வரும் முதன்மை ஆசிரியரையும், உதவிக் கல்விப் பணிப்பாளரையும் தரம் ஐந்தின் பாடத்திட்டப் படி கேள்வி கேட்பேன். பதில் சொல்லமாட்டார்கள். இவர்கள் தேர்வுக்கான வினாத்தாள்களை மதியழகன் என்ற ஆசிரியரைக் கொண்டே தயாரிப்பர். இதைக் கேட்டால் கல்விப்பணிப்பாளர் கோவிப்பார்"

**க**திரேசன் சிரித்தார், "உண்மையைச் சொல்பவன் தண்டிக்கப்படுவது இங்குதான். சரவணனின் பேச்சில் நூறுவீத நியாயம் இருக்கிறது".

**அ**திபரும் சிரித்தார். "பிறர் நலமில்லாச் சொல்லும் கேட்டையே விளைவிக்கும் என்று எம் முன்னோர் சொல்லியுள்ளனர்".

"**ப**லர் அதற்குத் தவறான அர்த்தத்தைக் கொண்டுள்ளனர். நயமில்லாப் பேச்சு என்பது பயனில்லாத பேச்சைக் குறிக்கும்" என்றார் கதிரேசன்.

"**தா**த்தா, இப்போ சரவணன் கூறிய கருத்து நயமில்லாத பேச்சா. இதுதான் பல காலமாக நடைபெறுகிறது. உங்களை நான் ஒன்று கேட்கிறேன் பதில் சொல்லுங்கள். முன்பு அரசாங்கத்தின் கட்டுப்பாடு இல்லாத வேளையில் யாழ்ப்பாணத்தில் அரச சார்புள்ளவர்கள் உயிர்வாழ முடியாது. அப்படியான நிலையில் வடபகுதியில் இருந்த 1AB, 1C பாடசாலைகளுக்கு ஏன் தரமில்லாத அதிபர்கள் நியமிக்கப்பட்டனர். தரமுள்ளோர் சிறிய பாடசாலைகளில் வேண்டாவெறுப்பாகக் கடமையாற்றினர். இது ஏன்".

**க**திரேசன் பதில் சொல்லவில்லை. அவரால் பதில் சொல்ல முடியவில்லை, "அண்ணை, நயமான பேச்சை நயமில்லாப் பேச்சு என்று அதிகாரத்தில் உள்ளவர்கள் நிலைத்ததால் தான் இந்நிலை ஏற்பட்டது" ஏன்றான் தர்மலிங்கம்.

**அ**வர்களின் பேச்சைக் கேட்டுக் கொண்டிருந்த சரவணன் சொன்னான், "அதிபர் என்மீது வைத்த நம்பிக்கைக்கு நான் தலைவணங்குகிறேன். நான் கட்டாயம் இப் பதவிக்கு விண்ணப்பிப்பேன். ஆனால் ஒரு நிபந்தனை…?"

"**எ**ன்ன?" என்று சிரித்தார் பொன்னுத்துரை அதிபர்.

"**நா**ன் விண்ணப்பிக்கிறேன். அதிபர் யாரிடமும் சிபாரிசு செய்யக்கூடாது. ஏனென்றால் பதவியால் எதுவும் செய்ய முடியாது. விழுந்து வணங்கினாலும் சரிப்படாது. அதனால் அதிபர் தனது ஆளுமையை இழக்கக்கூடாது" என்றான் சரவணன்.

**ஒ**ருமாதம் கழிய கணிதப் பயிற்சி பெற்ற ஆசிரியர் ஒருவர் ஆரம்பக் கல்வி முதன்மை ஆசிரியராகப் பதவி ஏற்றார். அதை அறிந்த பொன்னுத்துரை அதிபர் சொன்னார், "சரவணன் சொல்வது சரி. அவன் அதைக் குடித்துவிட்டுச் சொன்னதால் தான் பிரச்சினை".

"**கு**டித்துவிட்டுச் சொன்னாலென்ன, குடியாமல் சொன்னாலென்ன உரியவர்கள் கவலைப்படமாட்டார்கள். அவர்கள் தொடர்ந்தும் அதையே செய்வார்கள்" என்றார் கதிரேசன் சலிப்புடன்.

## 11. கண்டிக்காத பிள்ளை கெடும்

**ச**ரவணன் மிகுந்த கவலையுடன் வீட்டு முற்றத்தில் நின்ற வேப்பமர நிழலில் அமர்ந்திருந்தான். அவனது மனம் கடந்தகால நினைவுகளை நினைத்து அல்லற்பட்டது, "நான் தான் அறியாமையால் பலவிதமான தீய செயல்களைச் செய்து துன்பத்துக்குள்ளானது மட்டுமன்றிக் குடும்பத்தினரையும் துன்பப்படுத்தி விட்டேன். அதனால் எனக்கு மட்டுமல்ல எனது குடும்பமே பெரும் துன்பப்பட்டது. இப்போது கடவுளின் கிருபையால் திருந்திய போதும், முன்செய்த செயல்களின் தாக்கம் என்னை மோசமாகப் பாதிப்புக்குள்ளாக்கிறது. முக்கியமாக எனது மகன் கஜேந்திரனின் போக்கு எனக்கு மிக்க வேதனையைக் கொடுக்கிறது" துயரம் நெஞ்சை அடைக்கக் கண்கள் கலங்கின.

"**த**ரம் ஐந்து புலமைப்பரிசில் பரீட்சை நடைபெறுவதால் கஜேந்திரனை அரவிந்தனின் பிறந்ததின விருந்திற்கு அழைத்துச் செல்ல வேண்டாம் என்று மாலதியும் அவளது பெற்றோரும் பலமுறை பல காரணங்களை எடுத்துச் சொல்லியும் சரவணன் கேட்கவில்லை. அத்துடன் ஒரே பிள்ளை. அதுவும் தவமிருந்து பெற்றதால் அவன் கஜேந்திரனை அளவுக்கதிகமான செல்லம் கொடுத்து வளர்த்து வந்தான். அதனால் கஜேந்திரன் மூத்தவர்களை மதிப்பதில்லை. அவர்கள் ஏதாவது சொன்னால் மதிப்பில்லாது தீயவார்த்தைகளால் ஏசுவான். அதனால் சரவணனது பெற்றோர் அவனுடன் கதைப்பதில்லை. மகனுக்கு அவனைப் பற்றிச் சொன்னால் கேட்கமாட்டான். திரும்பவும் சொன்னால் தகாத வார்த்தைகளால் ஏசுவான். அதனால் அவர்கள் எதுவும் பேசுவதில்லை.

**வே**ப்பமரத்திற்குக் கீழ் நெடுநேரமாக அமர்ந்திருக்கும் தனது கணவனின் அருகில் சென்றாள் மாலதி. அவள் தன்னருகில் வந்ததைச் சரவணன் கண்டுகொள்ளவில்லை. முன்பென்றால் எதைப்பற்றியும் அவள் கதைக்க முடியாது. கதைத்தால் தகாத வார்த்தைகளால் ஏசுவான். திரும்பவும் அதைக் கதைத்தால் அடித்தும் விடுவான். ஆனால் இப்போது அப்படியல்ல அவள் சொல்வதைக் கேட்பான். அதனால் அவள் கேட்டாள்,

“பாடசாலைக்குச் செல்லவில்லையா…? காலையில் எழும்பிய நேரத்தில் இருந்து ஒருநாளும் இல்லாதவாறு வேப்பமர நிழலில் அமர்ந்திருக்கிறீர்கள். ஏதாவது சுகமில்லையா?”.

**அ**ன்போடு கேட்ட மனைவியை நிமிர்ந்து பார்த்தான். அவனது கண்கள் கலங்கின அதைக் கண்ட மாலதி, “என்ன நடந்தது? ஏன் அழுகிறீர்கள்” என்று கேட்டாள்.

“**நா**ன் என்னுடைய வாழ்க்கையை மட்டுமல்ல மகனின் வாழ்க்கையையும் கெடுத்துவிட்டேன்” என்று விம்மிய சரவணன் சில நிமிடங்கள் கழித்துச் சொன்னான், “புலமைப்பரிசில் பரீட்சை எழுதாததால் தேசிய பாடசாலையில் இடங்கிடைக்கவில்லை. அதனால் பிரபலமான தனியார் பாடசாலையில் பெருங்கஷ்டப்பட்டுப் பிரமுகர்களின் உதவியுடன் சேர்த்தேன். அவன் கடந்த ஒருவாரமாகப் பாடசாலைக்குச் செல்லவில்லை. வகுப்பில் மாணவர்களுடன் தீயவார்த்தைகள் பேசுகிறானாம். அதனால் பாடசாலையை விட்டு நீக்கப்போவதாக அதிபர் சொன்னார்” அழுதான் சரவணன்.

**மா**லதி திகைத்துப் போனாள், “மாலதி என்னால் தான் அவன் கெட்டுப் போனான், “கண்டிக்காத பிள்ளை கெட்டு அழிந்து விடும்” என்று அப்பா அடிக்கடி சொன்ன போதும் நான் அதைக் கேட்கவில்லை. என்னால் அவனைக் கண்டிக்க முடியாது. நீ தான் கண்டித்துத் திருத்த வேண்டும்” என்றான் சரவணன்.

**அ**தைக் கேட்டதும் மாலதிக்குத் துக்கமாக இருந்தது எனினும் அதைத்தாங்கிக் கொண்டு ஒரு முடிவுக்கு வந்தாள். அன்று மாலை கஜேந்திரன் பாடசாலையால் வந்ததும் மாலதி கேட்டாள், “இன்று பாடசாலைக்குப் போனாயா?”.

“**போ**னான். சுற்றுப் பலமாகக் கோபத்துடன் சொன்னான் கஜேந்திரன்.

“**அ**ப்படியா, கொப்பிகளைக் கொண்டா பார்ப்பம்”.

**க**ஜேந்திரன் பதில் கூறவில்லை. அதனால் கையில் வைத்திருந்த கம்பால் இரண்டு மூன்று அடி உறைக்கத்தக்கதாக அடித்தாள். “மிகமிகச் செல்லமாக வளர்ந்த அவனால் அந்த அடியைத் தாங்கமுடியவில்லை”, “அடியாதைங்கோ அம்மா, நான் இனி ஒழுங்காகப் பாடசாலைக்குச் செல்வன். வலிக்கிறது” என்று அழுதான். அதன்பின்பும் இரண்டு முறை அடித்த மாலதி அவனை ஒரு மூலையில் இருத்திவிட்டாள்.

**ச**ரவணன் வீட்டுக்கு வந்தபோது கஜேந்திரன் அழுதபடி எழும்ப முயன்றான், “இனி நான் தான் உன்னைக் கவனிப்பேன். அப்பாவுடன் பேசக்கூடாது” என்றாள் மாலதி.

**கை**யில் கம்புடன் நின்ற தாயின் சொல்லை மீற அவனால் முடியவில்லை. சரவணன் அவற்றைக் கவனிக்காது சென்றான். இரவு எட்டு மணிக்கு அவனருகில் வந்த சரவணன் கஜேந்திரனைத் தூக்கி முத்தமிட்டு விட்டுச் சொன்னான், "கஜேந்திரா, நன்றாகப் படித்தால் தான் வாழலாம். நான் அதிகமாகச் செல்லம் கொடுப்பதாக அம்மா நினைக்கிறா. அதனால் தான் நீ பாடசாலைக்குச் செல்வதில்லையாம். அப்பப்பாவும், அப்பம்மாவும், அம்மம்மாவும், அம்மப்பாவும், மாமாவும் ஏனையோரும் என்னை ஏசுகின்றனர். இனி அம்மா தான் உனக்கு எல்லாம். அதனால் அம்மா சொல்பவற்றைக் கேட்டு நட" என்றான் சரவணன்.

**க**ஜேந்திரனுக்கு அதிர்ச்சியாக இருந்தது. இருப்பினும் அவனால் எதுவும் செய்ய முடியவில்லை. மாலதி வந்து தகப்பன் தூக்கிவைத்திருந்த கஜேந்திரனை வாங்கிக் கொண்டு சென்று உணவு கொடுத்தாள். சரவணன் வந்து அவனின் அருகில் இருந்தான், "நீங்கள் ஊட்டக் கூடாது அவன் சாப்பிடுவான்" என்று கூறக் கஜேந்திரன் உணவை உண்ண ஆரம்பித்தான், "ஆசிரியரான எனக்கு கண்டித்து வளர்க்காத பிள்ளை கெடும் என்று தெரியாமைக்குக் காரணம் எனது நடத்தை" என்று எண்ணிய சரவணன் எழுந்து சென்றான்., "இனி அப்பாவின் செயற்பாடுகளை அம்மா கட்டுப்படுத்தி விடுவா. ஏனையோரும் அவா செய்வதைத்தான் ஏற்பார்கள். அதனால் நான் ஒழுங்காகப் பாடசாலைக்குச் செல்ல வேண்டும்" என்று நினைத்தான் கஜேந்திரன்.

**அ**திகாலையில் சரவணனும் மாலதியும் வந்து கஜேந்திரனை எழுப்பிய போது அவன் தந்தையை விலக்கிவிட்டுத் தாயாரின் அணைப்பை விரும்பினான். சரவணனுக்குத் துக்கமாக இருந்தபோதும் அதை அவன் வெளிக்காட்டிக் கொள்ளவில்லை. "எனது மகன் இனி ஒழுங்காகப் பாடசாலைக்குச் சென்று படித்து முதன்மை மாணவனாக வருவான். என்ன ராசா" என்று கேட்டாள் மாலதி.

"**க**ட்டாயமாக முதன்மை மாணவனாக வருவேன்" என்ற கஜேந்திரன் தந்தையின் பக்கம் திரும்பிப் பார்க்கவில்லை. "அம்மா அடித்தாலும் அணைப்பா. அப்பா செல்லம் தருவாரே தவிர அம்மா அடித்தால் தடுக்கமாட்டார்" என்று நினைத்தான் கஜேந்திரன்.

## 12. கடன்பட்டால் வாழ்வு கெடும்

**வ**டிவேலன், கணேசனிடம் வந்து என்றுமில்லாதவாறு தன்மையாகச் சொன்னான், "கணேசா, நான் பிழைப்புக்காக மதுபானங்களை விற்பனை செய்பவன். எனக்கு நான்கு பிள்ளைகள் இருக்கிறார்கள். பெற்றோரும் என்னுடன் இருப்பது உனக்குத் தெரியும். எட்டுப்பேருக்கு தினமும் எவ்வளவு செலவாகும் என்று உனக்குத் தெரியும். நான் ஒருவருக்கும் கடன்

கொடுப்பதில்லை. கூடப் படித்த குற்றத்திற்காகத் தான் கடன் தந்தேன். தயவு செய்து நீ தரவேண்டிய ஐயாயிரம் ரூபாவை இன்று மாலைக்குள் தந்து விடு. இல்லாவிட்டால் நேற்றுச் சொன்னதை இன்று செய்வேன்" என்று கூறிவிட்டுச் சென்றான்.

**க**ணேசனுக்கு மூன்று பிள்ளைகள். அதில் ஒன்று பெண். பத்து வயதாகிறது. நகை எதுவும் இல்லை. வெளிநாட்டில் இருந்து வந்த ஒரு உறவினன் பத்தாயிரம் ரூபா பணமும் கொடுத்து, வேப்பம்குச்சியிருந்த அவனின் மகளின் காதுக்கு ஒருதோடும் வாங்கிக் கொடுத்துவிட்டு, "இது எத்தனை நாட்களுக்கு உனது மகளின் காதில் இருக்குமோ தெரியாது. ஒரு வருடம் கழிய நான் மீண்டும் வருவேன். அப்படி நான் வரும்போது நான் வாங்கித் தந்த தோடு உனது மகளின் காதில் இருந்தால் இரண்டு பவுணில் ஒரு தங்கச் சங்கிலி வாங்கித் தருவேன்" என்று கூறிவிட்டுச் சென்றான்.

**வ**டிவேலன் முதல்நாள் குடித்துவிட்டு வந்து கடனைப் பலமாகக் கத்திக் கேட்டான். அச்சத்தத்தைக் கேட்டு அயலவர்கள் அங்கு வந்து விட்டனர், "கணேசா, நாளை விடியுமுன் கடன் காசைத் தராவிட்டால் உனது மகளின் காதில் உள்ள தோட்டைக் கழற்றிச் சென்று விடுவேன்" என்றான். அதனால் அவன் காலையில் வந்தபோது அவனின் மகளான கார்த்திகா தனது காதில் இருந்த தோடுகளைக் கழற்றித் தகப்பனிடம் கொடுத்துவிட்டாள்.

**வ**டிவேலன் சென்றபின் அவனது மனைவி வந்து, "தோட்டைக் கொடுத்துவிட்டீர்களா…?" என்று கேட்டாள். கணேசன் பதில் சொல்லவில்லை. அதனால் அவன் தோட்டைக் கொடுத்துவிட்டான் என்றே நினைத்தாள். அவளுக்கு அழுகை வந்தது, "நீங்கள் உழைப்பதைக் குடியுங்கோ நான் கேட்கவில்லை. ஏனென்றால் யார் சொன்னாலும் நீங்கள் கேட்கமாட்டீர்கள். அதனால் நான் சொல்லவில்லை. நான் தோட்டவேலை செய்து உழைக்கும் பணத்தைக் குடும்பச் செலவுக்கு விடுங்கள். மூன்று பிள்ளைகளும் நன்றாகப் படிப்பார்கள். எனது சகோதரன் பாடசாலை அதிபர். அவனுக்கு ஒரே ஒரு பிள்ளை. அவன் படிக்கமாட்டான். ஓ.எல் லில் எல்லாப் பாடமும் பெயில். எனது மூத்த மகன் ஓஎல்லில் பத்து ஏ எடுத்தவன். அவனைப் படிக்கவிடுங்கோ" பெருங்குரலெடுத்துக் கத்தினாள் லீலாவதி.

**அ**யல் வீட்டில் வசிக்கும் சுந்தரமூர்த்திக்குக் கணேசனின் குணம் தெரியும். அதனால் அவனுக்குப் புத்திமதிகள் கூறமாட்டார். காலையில் அவன் குடிக்காது இருப்பதால் அங்கு வந்து கணேசனுக்குச் சொன்னார், "கணேசா, ஒருவன் திருமணமாகும் வரை பெற்றோருக்குத் துணையாக இருத்தல் வேண்டும். திருமணமானால் மனைவியை நேசிக்க வேண்டும். பிள்ளைகள் பிறந்தால் அவர்களுக்காகத் தான் வாழ வேண்டும். உனக்கு யாருக்கும் கிடைக்காத அருமையான அறிவுள்ள மூன்று பிள்ளைகள் இருக்கிறார்கள். எனது சகோதரன் வைத்தியர். தனது மகனில் அளவுக்கதிகமான அக்கறையுள்ளவர். தனது மகனின் கல்விக்காக ஏராளமான பணத்தைச் செலவு செய்தவர். இருந்தும் அவரது மகன் ஐந்து ஏ தான்

எடுத்தவன். நீ பிள்ளைகளில் அக்கறைப்படுவதில்லை. அவர்களின் கல்விக்காக பணம் செலவு செய்யவில்லை. அவர்கள் தமது முயற்சியால் நன்றாகக் கற்கின்றனர். அதைக் கெடுக்காதை. நீ குடிக்காது விட்டால் நான் நீ கடன்பட்டுக் குடித்த பணத்தைத் தருகிறேன்".

**க**ணேசன் அவரை வியப்புடன் பார்த்தான். அயல்வீடு என்பதால் அடிக்கடி அவர்களைக் கணேசன் ஏசுவான். சண்டை பிடிப்பான். அவர் எதுவும் கதைப்பதில்லை. இருந்தபோதும் வழிதெருவில் கண்டால் வாய்க்கு வந்தபடி கதைப்பான். அப்படியிருந்தும் அவர் இப்படிக் கதைத்தது அவனுக்கு ஆச்சரியமாக இருந்தது.

"**நீ** ஏன் யோசிக்கிறாய் என்று எனக்குத் தெரியும். குடிக்காத போது நீ மிகமிக நல்லவன். குடித்தால் உள்ளே சென்ற மது உன்னைத் தன்செயலைச் செய்யும்படி தூண்டுகிறது. தயவுசெய்து குடிக்காமல் இருந்து ஒருமாதம் குடும்பத்தைக் கவனி. அதன்பின் குடிப்பதா விடுவதா என்று சிந்தித்துப் பார்" என்றார் சுந்தரமூர்த்தி.

"**இ**னிமேல் நான் குடிக்கமாட்டன். ஆனால் எனக்குப் பதினைந்தாயிரம் ரூபா கடன் இருக்கிறது. அந்தத் தொகையைத் தாருங்கள். மாதாமாதம் வட்டியோடு திருப்பித் தருகிறேன். கடன்பட்டதால் பட்ட அவமானங்கள் போதும். நேற்று இரவு தனபால் அடித்துவிட்டான். அவனுக்கு ஐயாயிரம் ரூபா கொடுக்க வேண்டும்" என்றான் கணேசன்.

"**நா**ன் பதினைந்தாயிரம் ரூபாவைத் தருகிறேன். நீ இனிமேல் குடிக்கக் கூடாது. கடன்படக் கூடாது. ஒவ்வொரு மாதமும் பணத்தைத் தரல் வேண்டும். முழுவதையும் தந்து முடித்தால் உனது மகன் பட்டணப்பாடசாலைக்குச் செல்லச் சைக்கில் வாங்கித் தருகிறேன்" என்றார் சுந்தரமூர்த்தி.

**க**ணேசன் சென்றபின்பு சுந்தரமூர்த்தியின் வீட்டுக்குச் சென்ற கணேசனின் தந்தை, சுந்தரமூர்த்தியின் கைகளைப் பற்றிப் பிடித்தவாறு சொன்னார், "அவர்கள் படும் துன்பத்தைச் சகிக்க முடியாததால் தான் நான் உங்களிடம் பணத்தைத் தந்து கொடுப்பித்தேன். நான் கொடுத்தால் அது பயன்தராது. எத்தனையோதரம் உங்களை வாய்க்கு வந்தபடி கணேசன் ஏசியும் அதைப் பொருட்படுத்தாது எனக்காக நீங்கள் செய்த உதவியை மறக்க மாட்டேன்" கலங்கினார் பொன்னம்பலம்.

"**நீ**ங்கள் ஒரு நேர்மையான மனிதன். கணேசனின் பிள்ளைகள் அறிவாளிகள். அவர்கள் பாதிக்கப்படக்கூடாது என்பதற்காகத் தான் சென்றேன். அதை மறந்துவிடுங்கள்" என்றார் சுந்தரமூர்த்தி.

## 13. பிரிவால் இன்பம் கெடும்

**க**ஜேந்திரன் இப்போது முழுமையாக மாறிவிட்டான். அவனைத் தாயின் பொறுப்பில் விட்ட பின்பு அவன் பெரிதாகத் தந்தையை நாடுவதில்லை. மாலதி அவன் மீது அன்பைச் சொரிந்து, அதன் மூலம் அவனை முழுமையாகத் திருத்திவிட்டாள். அதை நினைக்கச் சரவணனுக்கு வியப்பாகவும் மகிழ்ச்சியாகவும் இருந்தது. அதைவிட இப்போது அவனும் முழுமையாக மாறிவிட்டதாகப் பாடசாலைச் சமூகமே சொன்னது.

**அ**ன்று பன்னிரண்டு மணிக்கு அதிபரின் அலுவலகத்திற்கு வந்த சரவணன், அதிபரிடம் அரைநாள் லீவு கேட்டான். அவர் புருவத்தை உயர்த்தி ஏன் என்று விழிகளால் கேட்டார்.

“**இ**ரண்டு மணிக்குப் பெற்றோருடனான கலந்துரையாடல் இருக்கிறது. அதற்கு முன் ஒரு வேலையை முடிக்க வேண்டும்” என்றான் சரவணன்.

“**ஒ**ரு மணிக்குப் பாடசாலையை மூடுவதற்கான அனுமதியைப் பெற்றுள்ளேன். ஆசிரியர்கள் அனைவருக்கும் மதிய உணவு ஏற்பாடு செய்துள்ளோம். அதனால் குறுகியநேர லீவில் சென்று வாருங்கள்” என்றார் அதிபர்.

**அ**திபரிடம் அனுமதிபெற்றுக் கொண்டு வீட்டுக்கு வந்தான் சரவணன். வருமுன்பே மாலதிக்குத் தான் வருவதை அறிவித்திருந்தமையால் மாலதி குளித்துத் தன்னை அலங்கரித்துக் கொண்டாள்.

**மே**சையில் பெரியதொரு தலைவாழை இலை போட்டு உணவை படைத்த மாலதி, அதைக் குழைத்துக் கணவனின் கையில் வைத்தாள், “வாழ்க்கை என்பது எவ்வளவு இனிமையானது. அன்பான மனைவி உலகில் உள்ள இன்பங்களையெல்லாம் இச் சோறும் கறியும் சேர்த்துக் குழைத்தது போல சேர்த்துத் தருவாள். அதை உணர்ந்தவர்களுக்குத் தான் தெரியும்” என்று என்னுடைய ஆசிரிய நண்பனான ஆரூரன் சொல்வான். அவன் சொல்லும்போது நான் அவனைக் கேலி செய்வேன். இப்போது தான் அது உண்மையென்று தெரிகிறது. தினமும் விதம் விதமான இன்பங்களை நான் அனுபவிக்கிறேன். இது தெரியாது பலகாலத்தை வீணாக்கிவிட்டேன்” சிரித்தான் சரவணன். அதில் அளவிட முடியாத மோகம் இருந்தது. அதைப் புரிந்தாலும் புரியாதவளைப் போல, “சாப்பிடுங்கள்” என்றாள் மாலதி.

“**நா**ன் சாப்பிடுவதானால் பாடசாலையில் சாப்பிட்டிருப்பேன். ஏன் இங்கு வந்தேன் என்று தெரியுமா…?”.

**மா**லதி மோகத்துடன் சிரித்தாள். பத்து வருடங்களுக்கு முன் இவ்வாறு அவன் இருந்திருந்தால் எப்படி இருந்திருக்கும் என்று நினைத்தாள். அவளுக்குச் சிரிப்பு வந்தது.

**இ**ப்போ உமது சிரிப்பில் இனம் புரியாத மோகம், கிளர்ச்சி, மயக்கம் என்பன சேர்ந்துள்ளன. பல வருடங்களை வீணாக்கிவிட்டேன். ஒரே வீட்டில் இருவரும் இருந்தபோதும் இரு துருவங்களாக இருந்தோம். அப்போதைய பிரிவு கோபத்தையும், ஆத்திரத்தையும், வன்மத்தையும் தோற்றுவித்தது. இப்போது பிரிவென்றால் ஏக்கமும், ஆசையும், மோகமும் சேர்ந்து என்னை ஆட்டிப்வைக்கின்றன" என்றான் சரவணன்.

**ஒ**ன்றரை மணிக்கு அவன் புறப்படும் போது சொன்னான், "இன்று நீர் மிக மிக அழகாக இருந்தீர். பார்த்துக் கொண்டே இருக்க வேண்டும் என்ற உணர்வு மேம்பட்டாலும், கடமை தடை செய்கிறது".

**மா**லதியின் மனம் பூரணமாக மலர்ந்த ரோஜாவாக இருந்தது. கீழ் உதட்டைப் பல்லால் கடித்தபடி சிரித்தாள்.

"**சி**ரிக்காதையும், சிரித்தால் நான் உலகை மறந்து விடுவேன்" என்றான் சரவணன்.

## 14. பணத்தால் அமைதி கெடும்

**அ**ன்று சனிக்கிழமை பாடசாலை இல்லாமையால் சரவணன் நித்திரையால் எழும்பவில்லை. மாலதியும் கஜேந்திரனும் எழுந்துவிட்டனர். அப்போது காலை ஆறுமணி.

**வா**சலில் கார் வந்து நிற்கும் சத்தம் கேட்டு வாசலைப் பார்த்தாள் மாலதி. சரவணனின் தாய்மாமன் மகனான முகுந்தன் மிகுந்த பரபரப்புடன் வந்துகொண்டிருந்தான். அவனும் அவனது தந்தையும் பெரிய வியாபாரிகள். அவர்கள் இருவரும் தனித்தனியாக வியாபாரம் செய்கின்றனர். முதல்நாள் முகுந்தனின் மனைவி காலையில் வந்து மாலை வரை தனக்கு முகுந்தன் செய்யும் அநியாயங்களை விபரமாகக் கூறியிருந்தாள். நல்லது கெட்டதற்கும் கூட நேரத்திற்கு வராது வியாபாரம் வியாபாரம் என்று பணத்திற்காக அலையும் முகுந்தன் அதிகாலையில் வந்தது அவளுக்கு வியப்பைக் கொடுத்தது. முகுந்தனை அழைத்துச் சென்று ஆசனத்தில் அமர்த்திவிட்டு சரவணனுக்குச் சொல்லச் சென்றாள் மாலதி.

"**ம**ச்சான், நான் வேண்டாம் வேண்டாம் என்று சொல்லச் சொல்ல நீயும் சேர்ந்து அவள எனக்குக் கட்டிவைத்தீர்கள். இப்போ அவளென்னவென்றால் தனது நண்பியின் வீட்டுக்கு விருந்திற்கு வரட்டாம். கோவிலுக்குக் கூட்டிக்கொண்டு போகட்டாம். தன்னுடன் பொழுதைக்

கழிக்கட்டாம். தொழிலை விட்டு விட்டு இவற்றைச் செய்ய முடியுமா? நான் ஒரு நாளைக்கு அவளோடு இருந்தால் பலலட்சரூபாயை இழக்க வேண்டி வரும். நான் உனது சொல்லை மதித்துத்தான் திருமணம் செய்தேன். இப்ப உனக்குச் சொல்லிவிட்டுப் பிரக்கிராசியாரிடம் சென்று விவாகரத்துக்கான முன்னாயத்தங்களைச் செய்யப் போறன்" கடுங்கோபத்துடன் சொன்னான் முகுந்தன்.

**ம**ச்சான் திருமணம் செய்து ஆறுமாதங்கள் கூட நிறைவடையவில்லை. அதற்குள் வாழ்க்கை வெறுத்ததற்குக் காரணம் உனது பண ஆசைதான். பணம் நல்லதையும் செய்யும் தீயதையும் செய்யும். அத்துடன் பணம் தான் வாழ்க்கை இல்லை. வாழ்க்கையில் பணம் என்பது ஒரு பகுதியே தவிர அதனால் தான் வாழ்க்கை வளமாகிறது என்று சொல்வதற்கில்லை. திருமணமானால் பெண்ணுக்குப் பல ஆசைகள் இருக்கும். அவற்றைப் பூர்த்தி செய்வது நல்ல ஒரு கணவனின் கடமையாகும். இப்பொழுதே பல கோடி ரூபாவுக்கு உரிமையானவன் நீ. அதனால் சில மணிநேரங்களை ஒதுக்கி வாழ்க்கையை அனுபவி. இளமை நிலைப்பதில்லை. கடந்த காலம் மீண்டும் வருவதில்லை".

"**நீ** தத்துவஞானி. உன்னோடு பேசிப் பயனில்லை" என்றான் முகுந்தன்.

"**நா**ன் தத்துவஞானி இல்லை. உன்னைப் போல முரட்டுக் கொள்கைகளால் விழுங்கப்பட்டு எனது வாழ்க்கையை அல்ல எனது ஒரே ஒரு மகனின் வாழ்க்கையையும் தொலைத்தவன். உலகில் வாழ்பவர்களில் முக்கால்வாசிப்பேர் ஏழைகள். எமது கிராமத்தைப் பார். தர்மலிங்கம் கூலிவேலை செய்பவன். அவனின் மகன் டாக்டர். சிவகுரு தோட்டக்காரன் அவனது மூன்று மகள்களும் பொறியியலாளர்கள். இவர்கள் எல்லாம் பணத்தைத் தேடி வைத்தா தம் பிள்ளைகளின் வாழ்வை உயர்த்தியவர்கள் பணத்தை எந்த வயதிலும் தேடலாம். வாழ்க்கையைத் தேட முடியாது. தர்மலிங்கத்திற்கு ஐம்பத்தைந்து வயது. சிவகுருவுக்கு ஐம்பது வயது. இருவரும் இப்போது சொகுசான காரில் பிரயாணம் செய்கின்றனர்".

"**நா**ன், எனது மனைவியின் குறைபாடுகளைச் சொல்ல வந்தால் நீ எனக்கு பாடம் படிப்பிக்கிறாய்" என்றான் முகுந்தன்.

"**தா**ய்க்குப் பின் தாரம் என்று சொல்வார்கள். ஆசிரியரான நானே அதை உணராமல் பலகாலம் துன்பப்பட்டேன். இப்போது உணர்ந்தமையால் அமைதியாக இருக்கிறன். நிம்மதியாக இருக்கிறன். பெரு மகிழ்வோடு இருக்கிறன். நான் செய்த தவறை நீயும் செய்யாதே. மனைவி உன்னை விட தகுதியில்லாதவள், அறிவில்லாதவள், புத்தியில்லாதவள் என்று நினைக்காதே. மனைவியை மதி. அவளை நேசி. அவளின் விருப்பப்படி ஒருநாளைக்கு ஒரு மணித்தியாலம் செலவு செய். அப்படிச் செய்தாயேயானால் வாழ்வின் நுட்பமான பல

விடயங்களை அறிந்து கொள்வாய். பண்பான ஒரு மனைவி பணத்தை விட ஆயிரம் மடங்கு மேலானவள்".

"**இ**வையெல்லாம் கதைப்பதற்கு நன்றாக இருக்குமே தவிர வாழ்க்கைக்கு உதவாது" என்றான் முகுந்தன்.

**அ**ப்ப வாழ்க்கைக்கு உதவுவது பணம் ஒன்று தான் என்கிறாய். சமீபத்தில் பெரும் தனவந்தரான அமிர்தலிங்கம் நோய்வாய்ப்பட்டார். பிள்ளைகள் பணத்தைப் பங்கீடு செய்வதில் சண்டை செய்து பிரிந்துவிட்டனர். அவரின் மனைவி தான் அவரைக் கவனித்தது. அவர் உணவை எடுத்து உண்ண முடியாததால் பலகாலம் மனைவியே ஊட்டிவிட்டாள். அவளால் சமைக்க முடியாத போது சமையல்காரியை ஒழுங்கு செய்து சமைப்பித்தாள். கணவன் என்ற உரிமையால் தான் அவர் இறந்தபோது பிள்ளைகளைக் கொள்ளிவைக்க விடாது தானே தனது கணவனுக்குக் கொள்ளி வைத்தாள். மச்சான், இப்படி எவ்வளவோ சொல்லலாம். நீ தான் எசமான் என்று நினைத்துக் கட்டளையிட முற்படாதே. மற்றவர்களின் வார்த்தைகளுக்கும் மதிப்புக் கொடு. ஆறு மாதங்களுக்கு முன்பு வந்து நீ ஆலோசனை கேட்டிருந்தால் இருவரும் நன்றாகக் குடித்துவிட்டு விவாகரத்துப் பத்திரம் அனுப்பியிருப்போம். இப்போது எனது மனைவியைப் பிரிந்து ஒரு நிமிடம் கூட என்னால் வாழ முடியாது. பண்பான மனைவி பெய்யெனப் பெய்யும் மழைக்கு ஒப்பானவள் என்று வள்ளுவர் கூறுகிறார். அதனால் மனைவி எம்மீது அன்பும், அக்கறையும், உரிமையும் கொண்டவள் என்று நினை. வீட்டுக்குச் சென்று ஆறுதலாக இருந்து உனது தாயாரைப் பற்றியும், உனது சகோதரிகளைப் பற்றியும் நினைத்துப்பார். அதன்பின் முடிவெடு" என்றான் சரவணன்.

"**இ**ப்ப நான் அவசரமாக ஓர் இடத்திற்குச் செல்ல வேண்டும். நாளைக் காலை வருகிறேன்" என்று கூறிவிட்டுப் புறப்பட்டான் முகுந்தன்.

**அ**வன் சென்றதும் அங்கு வந்த மாலதி, "மச்சான் என்ன செய்கிறார்" என்றாள்.

"**நா**ன் முன்பு சொன்னதைச் சொல்கிறார். உணர்ந்து திருந்துவார். இல்லாவிட்டால் உணர்த்துவோம்" என்று மாலதியின் கையைப் பிடித்தான் சரவணன்.

"**இ**து இப்போ பெருந்தொல்லையாகிவிட்டது. நேரம் காலம் தெரியாமல்..." முறைத்தாள் மாலதி. சிரித்தான் சரவணன்.

## 15. சினத்தால் அறம் கெடும்

**அ**ன்று இரவு பத்து மணிக்குச் சிவன் கோவில் நிர்வாக சபையினர் முகுந்தனிடம் வந்தனர். கோவிலின் தலைவர் உருத்திரமூர்த்தி சொன்னார், "தம்பி, உம்மைக் கண்டு பிடிக்கவே முடியாதுள்ளது. மூன்று தினங்கள் கடைக்கு வந்தோம். அவர்கள் தான் இரவு பத்துமணிக்குப் பின்பு வீட்டுக்குச் சென்றால் சந்திக்கலாமென்று சொன்னார்கள். அதனால் தான் இப்போது வந்தோம்".

"**ஒ**ரே வேலை. மனிசியும் கோபித்துக் கொண்டு தாய் வீட்டுக்குச் சென்றுவிட்டாள். அதனால் மனம் குழம்பிய நிலையில் உள்ளேன். இப்ப என்னால் நிதானமாகக் கதைக்க முடியாது இன்னொரு நாள் வாருங்கள்" என்றான் முகுந்தன்.

"**எ**மக்கும் நேரமில்லை. ஒவ்வொருவரையும் சந்திக்கப் பல தடவைகள் செல்ல வேண்டியிருக்கு. நிர்வாகசபைக்கூட்டத்தில் விபரமாக யாவற்றையும் கூறினோம். அத்துடன் நாம் செய்யும் வேலைபற்றி விபரமாகத் துண்டுப் பிரசுரமொன்றும் வெளியிட்டுள்ளோம். உங்களுக்கும் தந்துள்ளோம். அதைப் படித்திருந்தால் எல்லாம் விளங்கியிருக்கும். நாமும் அலைய வேண்டியிராது" என்றார் உருத்திரமூர்த்தி.

"**பொ**து வேலையில் ஈடுபட்டால் சிரமங்கள் வரத்தான் செய்யும். அப்படியான சிரமங்கள் வருவதை விரும்பாதவர்கள் பொது வேலைகளில் ஈடுபடக் கூடாது. உங்கள் துண்டுப் பிரசுரம் எனக்குக் கிடைக்கவில்லை" என்றான் முகுந்தன்.

"**நா**ன் தான் கொண்டு வந்து உங்களது மனைவியிடம் கொடுத்தேன். பெற்றுக் கொண்டமைக்காக உங்கள் மனைவி கையொப்பமிட்டுள்ளார்" என்றார் நிர்வாகசபை உறுப்பினர் சிவபாதம்.

"**இ**ருக்கலாம் அவள் எனக்கு அத்துண்டுப் பிரசுரத்தைத் தரவில்லை. காலையில் நான் ஏதோ சொல்லிவிட்டேன் என்று கோவித்துக் கொண்டு சென்றுவிட்டாள். இப்போ யாருடனும் கதைக்க முடியாதுள்ளது. எனது மனைவி நீங்கள் கொடுத்த துண்டுப்பிரசுரத்தை என்னிடம் தரவில்லை என்று சொன்னால் நம்புகிறீர்கள் இல்லை. அப்படியான உங்களுடன் எப்படிக் கதைப்பது" என்று கூறிவிட்டு உள்ளே சென்றுவிட்டான்.

**அ**வனது பேச்சு வந்தவர்களுக்கு அவமானமாக இருந்தது, "பணத்திமிர் வந்தவர்களை பிடிக்காவிட்டாலும் வலிந்தாவது புன்னகையை வரவழைத்து சாட்டுக்காவது கதைப்பது தான்

**ம**னிதத்தன்மை. மனித நேயமில்லாததால் தான் மனைவி விட்டு விட்டுப் போயிருப்பள்" என்றார் சிவபாதம்.

"**எ**மது வீட்டுப் பிரச்சினைக்கு வந்தது போலத்திமிராகக் கதைக்கிறான். இப்படிக் கதைத்தால் மனைவி எப்படிக் கூடி வாழ்வாள். நான் திருமணம் செய்து முப்பது ஆண்டுகள் கழிந்து விட்டன. எனது மனைவி என்னுடன் பிரச்சினைப்பட்டுக் கொண்டு ஒருநாள் கூடத் தாய்வீட்டுக்குச் சென்றதில்லை. இவன் திருமணம் செய்து மூன்று மாதங்கூட முடியவில்லை முப்பது தரம் அவள் தாய் வீட்டுக்குச் சென்றுவிட்டாள். எல்லாம் அளவுக்திகமான சினத்தால் வருவது. நாம் வயதிற்கு மூத்தவர்கள் என்று கருதாமல் காரணமின்றிச் சினந்தால் அறம் இவனை விட்டு விட்டு விலகிவிடும்" என்று உருத்திரமூர்த்தி கதைத்துக் கொண்டிருந்தபோது அங்கு வந்த முகுந்தன், "நாளைக்கு நான் ஓர் இலட்ச ரூபா கொண்டு வந்து தாறன்" என்றான்.

"**த**ம்பி, சொல்லுறன் என்று குறை நினைத்துக் கொள்ளாதை. நாங்கள் ஐவரும் அரச ஊழியர்கள். அத்துடன் உயர் பதவி வகிப்பவர்கள். வந்தவுடன் சொல்ல வேண்டியதைச் சொல்லியிருக்கலாம். அரை மணித்தியாலம் இருந்த பின் சொல்வது அழகல்ல" என்று கூறிய உருத்திரமூர்த்தி அவனது பதிலை எதிர்பாராது எழுந்து நடந்தார்.

"**மு**ற்பிறப்பில் செய்த புண்ணிய பலனால் பொருத்தமில்லாத சிலரிடம் லட்சுமி வந்து சேர்வது இயல்பு. அதை உணர்ந்து நடப்பவன் தாழ்ந்து போகமாட்டான். திமிரோடு சினந்து கதைப்பவன் லட்சுமியை இழந்து விடுவான்" என்றவாறு நடந்தார் சிவபாதம்.

## 16. சிந்திக்காத செயலும் கெடும்

**அ**து ஒரு சிறிய நகரம். பட்டணத்தில் இருந்து பத்துமைலில் அது இருப்பதால் அங்கு வாழ்வோர் மிகவும் சிரமப்பட்டே பட்டணத்திற்குச் சென்று மின்சார உபகரணங்களையும், புடைவை வகைகளையும் வாங்கி வந்தனர். அதை உணர்ந்த கதிரேசனும், பொன்னுத்துரை அதிபரும் ஆரூரனை அழைத்து மின்பொருட்களையும், புடைவை வகைகளையும் பட்டணத்தில் இருந்து கொள்வனவு செய்து பட்டண விலைக்கு விற்குமாறு கூறி நிதியுதவி செய்தனர்.

**மூ**ன்று வருடங்களின் பின் ஆரூரன் கொழும்பில் இருந்து பொருட்களைக் கொள்வனவு செய்து பட்டணக் கடைகளில் விற்பதிலும் பார்க்கக் குறைவான விலையில் பொருட்களை விற்கத் தொடங்கினான். அவனது வளர்ச்சியைக் கண்டு மிக்க மகிழ்ச்சியடைந்த அவனது கணித ஆசிரியரும், அதிபருமான பொன்னுத்துரை ஓய்வு நேரங்களில் ஆரூரனின் வர்த்தக நிலையத்திற்கு வருவார். அவருடன் கதிரேசனும் வருவார்.

**ஆ**ரூரன் முகுந்தனின் மனைவியான பகீரதியின் தாயின் சகோதரியின் மகன். தனது பாசம் மிக்க தங்கையை முகுந்தன் கொடுமைப்படுத்துகிறான் என்று நினைத்து ஆரூரன் பலமுறை முகுந்தனுடன் பிரச்சினைப்பட்டவன். அதனால் ஆரூரனைப் பழிவாங்க வேண்டும் என்று நினைத்த முகுந்தன் ஆரூரனின் வர்த்தக நிலையத்திற்கருகில் ஒரு புடைவைக் கடையைத் திறக்க விரும்பி சிவன் கோவில் மண்டபத்திற்கு வந்து கதிரேசனையும், பொன்னுத்துரை அதிபரையும் சந்தித்தான்.

**க**திரேசன் தாத்தா ஊருக்குப் பெரியவர், அதிபர் ஊரில் உள்ள அனைவரையும் கற்பித்தவர். ஓய்வெடுத்த பின்பும் மாலை வேளையில் மடத்தில் கணிதம் கற்பிக்கிறார், "இங்குள்ளவர்கள் எதைச் செய்தாலும் உங்கள் இருவரையும் கேளாமல் செய்வதில்லை. நான் ஒரு வர்த்தக…." முகுந்தன் பேசிக் கொண்டிருக்கும் போது கதிரேசன் குறுக்கிட்டுச் சொன்னார்", வர்த்தக நிலையம் ஒன்று அதிபரைக் கொண்டு திறக்க நினைக்கிறாய்".

**மு**குந்தன் எதுவும் பேசாதிருந்தான், "இங்குள்ள மக்கள் படும் கஷ்டத்தைக் கண்டு வேதனைப்பட்ட கதிரேசனும் நானும் பணங்கொடுத்து ஆரூரனை வர்த்தக நிலையம் திறக்குமாறு சொன்னோம். இது பெரிய பட்டணமல்ல. இப்பொழுது ஆரூரன் தனது பெருமுயற்சியால் நல்ல லாபம் பெறுகிறான். முன்பு நட்டமேற்பட்ட போது அவன் வர்த்தக நிலையத்தை மூடிவிட்டு வேறுதொழில் செய்ய நினைத்தான். நாமிருவரும் விடவில்லை. அதனால் நீ இங்கு வர்த்தக நிலையத்தைத் திறப்பது முறையல்ல" என்று அதிபர் சொல்லும் போது முகுந்தன் சொன்னான்.

"**நா**ன் சகல ஏற்பாடுகளையும் செய்துவட்டேன்".

"**அ**ப்படியானால் திற. எம் இருவரையும் திறப்பு விழாவுக்கு அழைக்காதே. நீ அழைத்தாலும் நாங்கள் வரமாட்டோம். ஒருவனது பேச்சு அவனது மனதில் இருந்து வரவேண்டும். இது உனது எண்ணமல்ல. ஆரூரனின் மீது வெறுப்புக் கொண்டவர்களது நோக்கமாகும். ஒரு செயலைத் தொடங்குமுன் அதனால் வரும் இலாப நட்டங்களைப் பற்றிச் சிந்திக்க வேண்டும். நீயும் உனது தந்தையும் பெரும் தனவந்தர்கள். இவ்வளவு காலமும் தோன்றாத எண்ணம் இப்போது தோன்றியதற்குக் காரணம் பகீரதியின் வாழ்க்கைப் பிரச்சினை. அந்த விடயத்திலும் உனது போக்கு மிக மிகப் பிழையானது" என்றார் கதிரேசன்.

**அ**தைக்கேட்டதும் முகுந்தன் குழம்பிப் போனான். கதிரேசனையும், அதிபரையும் எதிர்த்து யாரும் பேசக் கூட விரும்பமாட்டார்கள். அதனால் அவன் தடுமாறினான்.

"**ம**கனே, இந்தச் சிறு நகரத்தில் இன்னொரு புடைவைக் கடை தேவையில்லை. நீ வர்த்தகன். நன்றாகச் சிந்தித்துப்பார். வீணாக இன்னொருவனின் பிழைப்பைக் கெடுக்க

நினைக்காதே. இதில் முதலீடு செய்யும் பணத்தை உனது வியாபார நடவடிக்கையில் முதலீடு செய்வது தான் நன்மையானது. ஒரு செயலைச் செய்தால் அதன் மூலம் நீ நன்மை பெற வேண்டும். வேறொருவர் கூடப் பாதிக்கப்படக்கூடாது நீ பெரும் வர்த்தகன் நீ மேற்கொள்ளவுள்ள செயல் உனது வல்லமைக்குப் பொருத்தமானதா" அத்துடன் உனக்கு ஆதரவாக ஊரில் யாரும் வரமாட்டார்கள். அதனால் பகையை மறந்து மனைவியுடன் கூடி இன்பமாக வாழ முயற்சி செய். அவர்கள் நல்ல குடும்பத்தினர். பண்பானவர்கள். உனக்கு விரும்பம் என்றால் சொல். நான் சென்று கதைக்கிறேன்" என்றார் கதிரேசன்.

**எ**துவும் பேசாது சென்ற முகுந்தன் அடுத்த வாரம் பெரும் எடுப்பில் புடைவைக் கடையைத் திறந்தான். ஊரவர் யாரும் திறப்புவிழாவுக்குச் செல்லவில்லை. ஒரு மாதத்தின் பின் அது மூடப்பட்டது.

## 17. இல்லால் இல்லாவிழல் வம்சம் கெடும்

**மு**குந்தனின் தந்தை செல்வராசா மிகுந்த வேதனையுடன் முகுந்தனின் அறைக்கு வந்தார். முகுந்தன் கடந்த பதினைந்து நாட்களாக வர்த்தக நிலையத்திற்குச் செல்லவில்லை. ஊரில் புடைவைக் கடையை மூடியது அவனுக்குப் பெருந் துன்பத்தைக் கொடுத்தது. சவரம் செய்யாது, சரியாக உண்ணாது இருக்கும் மகனைப் பார்க்கச் செல்வராசாவுக்குப் பெருங்கவலையாக இருந்தது.

**அ**வர் தினமும் அவனுக்குச் சமாதானம் சொன்ன போதும், அவனது மனம் சமாதானமடையாது அல்லற்பட்டுக் கொண்டிருந்தது. கடைசியாக அவன் சொன்னான், "எனக்கு வாழ்க்கை வெறுத்து விட்டது. இனி நான் தொழில் செய்ய விரும்பவில்லை. அளவுக்கதிகமாகக் கரைச்சல் தந்தால் நான் வீட்டை விட்டு வெளியேறி விடுவேன்" என்று பின் அவனைச் சந்தித்துப் பேச அவருக்குப் பயமாக இருந்தது. அவன் தான் நினைத்ததைத் தான் சிறுவயது முதல் செய்வான். யார் சொன்னாலும் கேட்கமாட்டான்.

**செ**ல்வராசா அவனது அறைக்குள் வந்தபோது முகுந்தன் குப்புறப்படுத்திருந்தான். அவன் விழிப்பாக இருந்தும் அவர் வந்ததைக் கவனிக்கவில்லை. அவன் தொழில் செய்யத் தேவையில்லை. எழுந்து மகிழ்வுடன் இருந்தால் போதும் என்று நினைத்தார் செல்வராசா.

**பெ**ருமூச்சுவிட்டவாறு அவர் வெளியே வந்தபோது அவர் வரச் சொல்லிச் சொல்லியனுப்பிய சரவணன் வந்தான்.

**ச**ரவணனுக்கு வயது கூட என்றாலும் இருவரும் மைத்துனர்களாகையால் மதிப்பின்றி டேய், மடையா, விசரா, என்று கதைப்பார்கள். குப்புறப்படுத்திருந்த முகுந்தனை, "டேய், யார் செத்ததென்று பதினைந்து நாட்களாகத் துக்கம் கொண்டாடுகிறாய். எழும்பு சிவன்கோவிலுக்குப் போவம்".

"**உ**னக்கென்ன விசரே எனக்கு வாழ்க்கையே வெறுத்துவிட்டது" என்றவாறு எழுந்து கட்டிலில் அமர்ந்தான் முகுந்தன்.

"**ம**ச்சான், எதையும் தாங்கும் இதயம் இருப்பவன் தான் உண்மையான மனிதன். வியாபாரத்தில் நட்டமும் வரும். லாபமும் வரும். அதை உனக்கு நான் சொல்லத் தேவையில்லை. ஒருமுறை பதினைந்து லட்ச ரூபா நட்டமேற்பட்டு விட்டது என்று உனது தந்தைக்கு காட்அற்ராக் வராத குறை. ஆனால் நீ அசையவில்லை. "ஐந்து இலட்ச ரூபாவுடன் தொழில் தொடங்கினான். இப்ப நாலைந்து கோடி ரூபா சொத்து என்னிடமுள்ளது. என்னுடைய முதலில் நட்டம் வரவில்லை. நான் தேடிய சொத்துத் தான் அழிந்தது. நான் அதைவிடப் பத்து மடங்கு சேகரிப்பான்" என்ற நீ இப்போது ஏன் கலங்குகிறாய். நீ கவலைப்படுவதால் உனது குடும்பத்தினர் ஐம்பது பேர் கவலைப்படுகின்றனர். இது சரியா?" என்று கேட்டான் சரவணன்.

**மு**குந்தன் எதுவும் பேசவில்லை. அதனால் சரவணன் சொன்னான், "உனக்கு நட்டமேற்பட்டால் கவலைப்படமாட்டாய். பகீரதியைப் பற்றிக் கவலைப்படுகிறாயா? அவள் என்ன கேட்டவள் தன்னுடன் சில நாட்கள் தங்கியிருந்து தனது இனத்தவர்களின் வீடுகளுக்கு சென்றுவருவோம் என்று தானே கேட்டவள். அது பிழையா திருமணமுடிந்தால் பிறநாட்டவர் தேன்நிலவுக்குச் செல்கின்றனர். நம்மவர் உறவினர்களின் வீடுகளுக்குச் சென்று கொண்டாடுகின்றனர். சோடியாகக் கோவில், களியாட்ட விழாக்கள், சினிமாப்படம் என்பவற்றிற்குச் செல்வர். இப்போது தேவையில்லாது பதினைந்து நாட்கள் முடங்கிக்கிடக்கிறாய். இது சரியா முன்பு தொழில் கெட்டுவிடும் என்றால் இப்போது கெடவில்லையா…?".

**மு**குந்தனின் மனதில் ஒரு மாற்றம் உருவாவதைச் சரவணன் உணர்ந்து கொண்டான், "மச்சான், திருமணம் செய்வதால் வாழ்வு பூரணமடைகிறது. புதிய உலகத்தில் பிரவேசிக்கும் தன்மை உருவாகிறது. மனச்சாந்தியையும், மகிழ்வையும் திருமணம் தருகிறது. ஒரு மனைவியால் தான் ஒரு ஆணின் அனைத்துத் தேவைகளையும் பூர்த்தி செய்ய முடியும். திருமண வாழ்வால் ஒரு புதிய சந்ததி உருவாகிறது. தேவையில்லாமல் பிரச்சினையை உருவாக்கித் துன்பப்பட்டு பதினைந்து தினங்கள் வீணாகக் கழிந்ததை விடப் பகீரதியுடன்

சிலமணி நேரத்தைக் கழித்திருக்கலாம் தானே. நீ பகீரதியுடன் ஒற்றுமையாகி இன்பமாக வாழ விரும்பினால் நான் உனக்கு ஒரு இனிப்பான செய்தி சொல்கிறேன்".

**ஆ**ச்சரியத்துடன் சரவணனைப் பார்த் முகுந்தன் சொன்னான், "இனிப்பான செய்தியோ...? என்னடா அது".

**ஒ**ற்றுமையாக வாழ்வேன் என்று சொல். அதன் பின்பு சொல்கிறேன்".

**மு**குந்தன் மௌனமாக இருந்தான், "டேய் திருமணமாகி மூன்று மாதங்கூட முடியவில்லை. நீ அதிஷ்டசாலி" என்று கூறிவிட்டு நிறுத்தினான் சரவணன்.

"**வி**ளையாடாதை சொல்" என்றான் முகுந்தன். சரவணன் சிரித்தான், "இல்லாள் இல்லாத வீடு சுடுகாடடா. மனைவி மாண்புடையவனானால் குடும்பத்தினருக்கு இல்லாதவை எவையுமில்லை. பகீரதி மாண்புடையவள் அவள்...." நிறுத்திவிட்டுச் சிரித்தான் சரவணன்.

"**நீ** எதையும் சொல்ல வேண்டாம். பாடசாலைக்கு நேரமாகிவிட்டது போ" என்றான் முகுந்தன்.

"**ச**ரி நான் போறன். மச்சான் என்ற படியால் வெட்கம், ரோசம், மானம் இவற்றைப் பார்க்க முடியாது. நீ அப்பாவாகிவிட்டாய். பகீரதியையும் அழைத்து வந்துள்ளேன். விரும்பினால் பார். இல்லாவிட்டால் அவளை அழைத்துச் செல்கிறேன்" என்று கூறிவிட்டுச் சென்றான் சரவணன்.

**அ**திர்ந்து போனான் முகுந்தன், "டேய், டேய், விபரமாகச் சொல்லிவிட்டுப் போடா".

"**வி**ரும்பினால் என்னுடன் வா" என்று கூறிவிட்டு சரவணன் செல்ல முகுந்தன் வந்து அவனது கையைப் பிடித்து, "நான் உடனே பகீரதியைப் பார்க்க வேண்டும்" என்றான். அவனது கையைப் பிடித்து அழைத்துச் சென்ற சரவணன், பகீரதி தங்கியிருந்த அறைக்குள் அவனைவிட்டு விட்டுக் கதவைப் பூட்டினான்.

**சு**மார் ஒரு மணி நேரம் கழிந்தும் கதவு திறக்கபடவில்லை.

## 18. சோம்பலால் வளர்ச்சி கெடும்

**ப**கீரதியுடன் ஒற்றுமையான முகுந்தன் இரண்டு நாட்கள் முழுமையாக அவளுடன் இருந்தான். அவளின் தோழி ஒருவாரத்திற்கு முன் வந்து திருமணம் செய்தால் பெண் ஆணை தனது கைக்குள் வைத்திருக்க வேண்டும். எனது கணவன் ஒரு நிதி நிறுவனத்தின்

முகாமையாளர். அவருக்கு எந்நேரமும் எனது நெருக்கம் தேவை. ஆரம்பத்தில் உனது கணவரைப் போல வேலை வேலை என்று ஒருகணத்தைக் கூட வீணாக்காது வேலையில் கண்ணும் கருத்துமாக இருப்பார். எனது நெருக்கம் அவருக்குப் பெரிதாகப் பிடிப்பதில்லை. எனது பேர்த்தியார் அதைக் கவனித்துவிட்டு என்னைத் தான் ஏசினார். ஒரு பெண்ணின் அழகு, கவர்ச்சி, மோகம் என்பன அவளது கணவனுக்கு மட்டும் உரிமையானது. இவ்வாறு அங்கங்கள் முழுவதையும் மூடிய உடைகளை அவரின் முன் அணியாதே. ஆண்களைக் கவரக்கூடிய நறுமணம் மிக்க சென்டுகள் கடைகளில் உண்டு. அதை வாங்கிப் பாவி. கண்களுக்கு மை தீட்டு. அவரைக் காணும்போது வெட்கப்படாது மிக நெருக்கமாக அருகில் இரு".

"**போ**டி, நீ படிக்கும் போதே காமக்கதைகளைக் கூறுவாய். இவற்றையெல்லாம் எப்படிச் செய்வது" பகீரதி வெட்கப்பட்டாள்.

"**செ**ய்துதான் தீரவேண்டும். அது மனைவியின் தலையாய கடமை. உன்னை அவர் பூரணமாக ரசித்து மகிழ்ந்தாரேயானால், அதை நினைத்து நினைத்துக் களிப்படைவார். பார்த்துப் பார்த்து மகிழ்வார். இதை நான் சொல்லவில்லை. வள்ளுவர் சொல்கிறார். அதைவிட கணவனுக்குப் பனையளவு காமம் மிகுதியாக வரும்போது மனைவி தினையளவு கூடப் பிணங்கக் கூடாது என்றும், மனைவி தனக்கு விருப்பமில்லாதவற்றைச் செய்தாலும் உன்னோடு களித்த இனிமையான உணர்வுகள் நீ தனியாக இருக்கும் போது அவரை உணர்ச்சிமயமாக்கி உன்னிடம் அழைத்துவரும் என்றும் வள்ளுவர் கூறுகிறார். நான் கூறியபடி நட. பின் சொல்லு" என்று கூறிவிட்டு அவளது தோழி சென்றுவிட்டாள்.

**ப**கீரதி நல்ல அழகி. சிவந்த நிறம். வட்ட வடிவமான முகம். சிவந்த உதடுகள். படிக்கும்போது அவளைச் சுற்றிவந்த ஆண்கள் பலர். அவளது நண்பி கறுப்பு நிறமானவள். குறைவாக ஆடை அணிவாள். இனிமையாகப் பேசுவாள். அவள் அழகான இரவு உடை ஒன்றைக் கொடுத்துவிட்டு இவ்வுடையுடன் ஒருமுறை உனது கணவனைச் சந்தி. பிறகு சொல்" என்று கூறிவிட்டுச் சென்றாள்.

**அ**ந்த உடையை அணிந்து அழகாக தன்னை அலங்கரித்து ஒரு தேவதையைப் போல அவள் அவனது அறைக்குள்ச் சென்றபோது, முகுந்தன் திடுக்கிட்டுப்போனான். இதுவரை காணாத ஓர் அபூர்வ அழகு அவளின் உடலெங்கும் கொட்டிக்கிடந்தது.

"**எ**ன்னை மன்னித்துக் கொள்ளுங்கள். நீங்கள் ஏன் என்னை வெறுக்கிறீர்கள். காரணத்தைச் சொன்னால் அதன்படி நடப்பேன்".

**இ**னிய நாதமாக எழுந்த அந்தக் குரல் அவனை வசீகரித்தது. அவளின் கையைப் பிடித்து இறுக அணைத்தான். கண்களுக்குள் அழகிய ஒரு புதிய உலகம் தென்பட்டது. நேரம் கழிந்தது தெரியவில்லை.

"**த**ம்பி, நேரம் இரண்டுமணியாகிவிட்டது. சாப்பிட்டுவிட்டு…" தாய் வசனத்தை முடிக்காது சென்றாள்.

**அ**தன்பின் ஒருவாரம் கழிந்தும் முகுந்தன் வேலைக்குச் செல்லவில்லை. தாய்க்கு அது விருப்பமாக இருந்தது. பல வருடங்களாக ஓய்வின்றி உழைத்தவன் ஓய்வெடுக்கட்டும் என்று நினைத்தாள்.

**இ**ப்போது அவனுக்கு வேலைக்குச் செல்லச் சோம்பலாக இருந்தது. எந்நேரமும் பகீரதியுடன் சேர்ந்து இருக்க வேண்டும் என்று நினைத்தான்.

**ஒ**ருமாத காலமாக முகுந்தன் வேலைத்தலத்திற்கு வராதிருந்தது தந்தையான செல்வராசாவுக்கு வேதனையைக் கொடுத்தது. அவர் அன்று இரவு பத்து மணித்து வந்து கதைப்பேன் என்று ரெலிபோனில் கூறியதால் முகுந்தனும் பகீரதியும் வெளிகோலில் இருந்தனர்.

**செ**ல்வராசா வந்து சொன்னார், "மகனே, முன்பு ஏதோ விரத்தியினால் இரண்டுவாரங்கள் நீ வியாபாரநிலையத்திற்கு வரவில்லை. அதன் பின்பும் வராதிருக்கிறாய். தொழில் செய்பவன் தினமும் தொழிலகத்திற்குச் சென்று அங்கு நடைபெறுபவற்றை ஆராய வேண்டும். இல்லாவிட்டால் தொழில் அழிந்துவிடும். நாளைக்குக் கட்டாயம் வா" என்று செல்வராசா சொன்னபோது முகுந்தன் சொன்னான்,

"**நா**ளைக்குச் சனிக்கிழமை. சரவணன் மச்சான் விருந்து தருவதாகக் கூறியுள்ளார். அதற்குப் போக வேண்டும். திங்கட்கிழமை வருகிறேன்".

"**வி**ருந்துக்கு மத்தியானம் போகலாம். காலை எட்டு மணிக்கு வந்துவிட்டுப் பன்னிரண்டு மணிக்குப் போ" என்றார் செல்வராசா.

**மு**குந்தன் பகீரதியைப் பார்த்தான். அவள் வேண்டாம் என்று அழகாகத் தலையை அசைத்து கீழுதட்டைப் பற்களால் கடித்தாள்.

**அ**தைக் கவனித்த செல்வராசா சொன்னார், "மகனே, தொழில் தான் எம்மை வாழ்விப்பது. காப்பது. முன்பு விரத்தியினால் தொழிலைக் கைவிட்டாய். இப்போ சோம்பலால் கைவிடுகிறாய். இதை நீ மட்டுமல்ல உனது அழகிய மனைவியும் உணர வேண்டும். எதற்காகத்தன்னும்

சோம்பல் வந்தால் அது தொழிலைச் செய்யவிடாது. உன்னிடம் ஏராளமான பணம் இருக்கிறது என்று எண்ணாதே. பணம் எப்படி வந்ததோ அப்படிப் போயும்விடும். அதனால் உடலில் வலு உள்ளவரை தொழில் செய்ய வேண்டும். சோம்பற்பட்டால் முயற்சி தடைப்படும். அதனால் செய்ய வேண்டியவற்றைத் தாமதமாகச் செய்யவேண்டிய நிலை உருவாகும். மறதி தானாக வந்து சேரும். அளவுக்கதிகமாக நித்திரை செய்பவன் தனது தொழிலை முற்றாக மறந்தவனாகிவிடுவான். பணம் கோடி கோடியாக இருந்தாலும் சோம்பற்பட்டால் அப் பணத்தால் பயன் இல்லாது போய்விடும். திறமையான தொழில் செய்பவனுக்குச் சோம்பல் இல்லாதிருந்தால் உலகையே விலைக்கு வாங்கி விடுவான். இவ்வாறு நான் சொல்லவில்லை கற்ற அறிஞர்கள் சொல்கிறார்கள். அதனால் யோசித்து நட" என்று கூறிவிட்டுத் தந்தை சென்றுவிட்டார்.

"**உ**ங்களுடைய வியாபாரநிலையத்தைப் பார்க்க எனக்கும் ஆசையாக உள்ளது. அதனால் நானும் வருகிறேன். மதியநேரம் விருந்திற்குச் செல்வோம்" என்றாள் பகீரதி.

**அ**தைக்கேட்ட முகுந்தன் அதற்கு ஒப்புக்கொண்டான். தோழியின் மருந்து நன்றாக வேலை செய்கின்றது என்று நினைத்துப் பூரிப்புடன் சிரித்தாள் பகீரதி.

"**இ**ப்ப ஏன் சிரிக்கிறீர்" என்று கேட்டான் முகுந்தன்.

"**இ**னிமேல் உங்களைக் கேட்டுவிட்டுச் சிரிக்கிறேன்" என்றாள் பகீரதி. முகுந்தனுக்கு மகிழ்ச்சியைத் தாங்க முடியவில்லை. அவளது கையைப் பிடித்தான். அவள் இறுக்கமாக அவனது கையைப் பிடித்துக் கொண்டாள். முகுந்தனின் மகிழ்விற்கு அளவே இருக்கவில்லை.

## 19. மோகித்தால் முகமை கெடும்

**ப**லநாட்களுக்குப் பின் வியாபாரத்தலத்திற்கு வந்த முகுந்தனையும் பகீரதியையும் ஊழியர்கள் மிகுந்த மகிழ்ச்சியுடன் அவர்களுக்கு மாலைகள் அணிவித்து வரவேற்றனர். அதை எதிர்பாராது முகுந்தன் கேட்டான், "என்றுமில்லாதவாறு இன்று தடல்புடலாக வரவேற்கிறீர்கள். ரதி வருவதாக யார் சொன்னது?"

"**உ**ங்கள் அப்பா தான் சொன்னவர்" என்றார் முகாமையாளர். தனது போனைக் கொடுத்து அக் காட்சிகளை வீடியோவிலும், படத்திலும் பதிவு செய்யுமாறு சொன்னான். சொல்லிவிட்டு அவன் உள்ளே சென்றதும் பகீரதி தனியறைக்கு ஊழியர்களால் அழைத்துச் செல்லப்பட்டாள். அங்கிருந்து அவள் தனது தோழிக்குக் கோல் எடுத்தாள்.

"**நா**ன் நலமடி. எப்படி முகுந்தனைக் கைக்குள்ப் போட்டுவிட்டாயா?"

“நீ சொன்னபடி செய்ததமையால் இப்ப அவர் என்னைவிட்டுப் பிரியமாட்டேன் என்கிறார். பல நாட்களாக வேலைக்குச் செல்லவில்லை. இன்று நானும் வருகிறேன் என்று சொன்னதால் வந்திருக்கிறார். தாங்ஸ்எடி”.

“சொன்னது குறைவு. இதையும் கேள்...” என்று தோழி சொல்ல, “இப்பவே தாங்க முடியவில்லை. நீ சொல்வதையும் செய்து அவதிப்பட முடியாதம்மா. போதும்” என்று தொடர்பைத் துண்டித்தாள் பகீரதி.

பன்னிரண்டு மணிக்கு முகுந்தன் அவள் எதிரில் வந்து நின்று, “வா போவோம்” என்றான். சரவணனும் மனைவியும் கஜேந்திரனும் வாசலில் நின்று வரவேற்றனர். முகுந்தனின் முகத்தில் இருந்த பூரிப்பைக் கண்டுவிட்டு சரவணன் சொன்னான், “இப்ப மச்சான் வேலையையே மறந்துவிட்டாராம். முன்பென்றால் அதாவது கலியாணமான புதிதில் இரவு பகலாகப் பணம் தேடிய மச்சான், இப்ப அதை மறந்து இரவு பகலாக...”.

“உங்களுக்குக் கதைக்கப் பேசத் தெரியாது. முன்னால் நிற்பவர்களை அறியாது பேசுகிறீர்கள். மச்சானை உள்ளே கூட்டிச் சென்று கதையுங்கள்” என்றாள் மாலதி.

“இப்ப மச்சான் திருந்திவிட்டான். பணம் தேடுவதை விட பகீரதியோடு கூடியிருப்பதைத் தான் விரும்புகிறான்”.

“போடா முன்பென்றால் குடும்பக் கதையே கதைக்கமாட்டாய். இப்ப குடும்பத்தை மோகிப்பவனாகிவிட்டாய். மச்சான், மனைவி மீது அன்பு வை, பாசம் வை, பற்று வை, ஆசை வை, அக்கறை கொள் ஆனால் மோகிக்காதை. மோகித்தால் எதையும் செய்ய முடியாது. அவளின் நெருக்கம் தான் வாழ்வு என்றாகிவிடும். முன்பு தொழிலை மோகித்தமையால் உலகில் இருக்கும் எவையும் உனக்குத் தோன்றவில்லை. பணம் பணம் என்று அலைந்தாய். சரியாகச் சாப்பிடுவது கூட இல்லை உனது தாயார், அதாவது எனது மாமி குறைப்படுவா..?”.

“தாய் என்றால் அப்படித்தானே. அளவுக்கதிகமாக உண்டால் தனது மகன் தைரியசாலி என்ற நம்பிக்கையில் சொன்னா. காலையில் சரியாகச் சாப்பிடாது புறப்படவார். மத்தியானம் அவா பல கறிகளைச் சுவையாகச் சமைத்துவைத்துவிட்டு இவர் வருவார் எனக் காத்திருந்தால் இவர் வரார். கடைகளில் சாப்பிட்டுவிடுவார். இரவு பத்துப் பதினொரு மணிக்கு வந்து சாப்பிட்டால் எந்தத் தாய்க்குத் தான் கோபம் வராது” என்றாள் மாலதி.

அது இப்ப தலை கீழாக மாறிவிட்டது. பதினைந்து நாட்களாகப் பகீரதியுடன் ஒரு நிமிடம் கூடப் பிரியாது கூடியிருக்கிறார். இது மோகம் முன்பு உலகை மறைத்தது. இப்போ மனைவி மீது கொண்ட மோகம் உன்னைப் பித்தனாக்கி விட்டது” சரவணன் சொல்ல முகுந்தன்

சிரித்துக் கொண்டிருந்தான். அவனது சொற்கள் முகுந்தனைப் பரவசப்படுத்தியது. பகீரதிக்கு வெட்கமாக இருந்தது. அவள் கஜேந்திரனை அழைத்துக் கொண்டு உள்ளே சென்றாள்.

“**ம**ச்சான், மோகம் அனைத்தையும் கெடுத்துவிடும். அதனால் மோகங்கொள்ளாதே. பாசம் கொள். பாசம் என்பது அளவற்ற அன்பு. மோகம் என்பது அளவற்ற காமம், பேராசை, அதீத விருப்பம் என்று பெரியவர்கள் சொல்வார்கள். பல நாட்களாக காமத்தைப் புரியாது இருந்த உன்னை நான் தான் கெடுத்துவிட்டேன்” என்றான் சரவணன்.

“**ம**ச்சான் மோகம் நல்லவற்றையும் செய்யும். முன்பு ஒருநாள் வீடுதேடி வந்த கோவில் தலைவருடன் முரணாகப்பேசி, அவரினதும், ஊரவரினதும் குறைகளைக் கேட்டேன். பகீரதி கோவிலுக்குக் கட்டாயம் பணம் கொடுக்க வேண்டும் என்று கூறி என்னையும் அழைத்துச் சென்று ஐந்து இலட்ச ரூபா கொடுக்கச் சொன்னாள். மறு பேச்சின்றிக் கொடுத்துவிட்டேன். அதை ஊரே புகழ்கிறது. இது மோகத்தால் வந்தது தானே” என்றான் முகுந்தன்.

**ச**ரவணன் சிரித்தான். பின் எதையோ சொல்ல விரும்பினான். அதனால் பேச்சை மாற்ற எண்ணிய முகுந்தன், “எனக்குப் பசிக்கிறது” என்று கூறிவிட்டு எழுந்து சென்றான்.

## 20. அச்சத்தால் வீரம் கெடும்

**அ**ன்று இரவு செல்வராசா மகனிடம் வந்து சொன்னார், “முகுந்தா, சிவபாலன் தனது இருநூறு ஏக்கர் வயலைக் கடன் காரணமாக விற்க விரும்புகிறான். அதை நீ வாங்கு. தேவையானளவு பணம் நான் தருகிறேன்”.

**மு**குந்தன் யோசித்துக் கொண்டே இருந்தான். பதில் சொல்லவில்லை. “அது நல்ல விளைச்சலைத் தரும் வயல். அதை வாங்கினால் நெல் விதைக்கலாம். நெல்லை அறுவடை செய்துவிட்டுப் பயறு, உழுந்து, எள், நிலக்கடலை என்பவற்றை விதைக்கலாம். அதை அறுவடை செய்துவிட்டு மீண்டும் நெல் விதைக்கலாம். குளத்திற்கு அருகே வயல் இருப்பதால் வருடம் முழுவதும் பயிர் செய்யலாம்” என்றார் செல்வராசா.

“**அ**ப்பா, அளவுக்கு மிஞ்சினால் அமிர்தமும் நஞ்சு என்பார்கள். எம்மிடம் பத்து வியாபார நிலையங்கள் உள்ளன. அதைவிடத் தென்னந்தோப்பு, மாந்தோப்பு, வாழைத்தோப்பு என்பனவும் உண்டு. இவற்றையே கண்காணிக்க முடியவில்லை…” என்று முகுந்தன் கூறிக்கொண்டிருக்கையில் செல்வராசா குறுக்கிட்டுச் சொன்னார், “இவற்றையெல்லாம் நீயா செய்கிறாய். எல்லாவற்றையும் கூலியாட்கள் செய்தாலும் மேற்பார்வையிடுவதும், கண்காணிப்பதும் நாம்தானே. இருக்கிற பணம் போதுமப்பா. பணம் தான் வாழ்க்கை அல்ல.

இப்பொழுது எனக்கொரு மகன் பிறந்திருக்கிறான். அவனைப் பார்த்துக் கொண்டிருக்க வேண்டும் போல உள்ளது".

"இரண்டு வருடங்களுக்கு முன்பு நீ அந்த வயலின் மீது ஆசைப்பட்டுச் சிவபாலனைக் கேட்டனீ. அப்போது அவன் மறுத்துவிட்டான். இப்போது அவன் வலிய வந்து கேட்கிறான். ஏன் அதை வாங்க மறுக்கிறாய்".

"செய்யும் தொழில் போதும் என்று நினைக்கிறேன். வேண்டுமானால் அதை வாங்கிச் சரவணன் மச்சானிடம் குத்தகைக்குக் கொடுப்போம். அவர் ஆசிரியர் வேலையைத் தவிர வேறு எதுவும் செய்வதில்லை. வயல் வாங்க வேண்டும் என்று அடிக்கடி சொல்வார்" என்றான் முகுந்தன்.

"நீ பழைய ஆள் இல்லை. இப்போது எதைச் சொன்னாலும் அதற்கொரு காரணம் சொல்கிறாய். அதற்குக் காரணம் நீ பயப்படுகிறாய். பயம் தைரியத்தையும், வீரத்தையும், பொறுப்புக்களையும் அழித்துவிடும்"

"எனக்கு உள்ள சொத்துப் போதும். பணத்தின் மீது மோகங் கொண்டு இரவு பகலாய் உண்ணாமல், உறங்காமல் தேடிய சொத்துப் போதும். உங்களுக்கு நான் ஒரு மகன். எனக்கொரு மகன் பிறந்திருக்கிறான். இன்னும் ஆறேழு பிள்ளைகளைப் பெற வேண்டும். எமது வம்சம் தழைக்க வேண்டும். அதுதான் இப்போது எனது நோக்கம். அது நடைபெற வேண்டும் என்று நான் தினமும் கடவுளை பிரார்த்திக்கிறேன். அது நடக்காது விட்டுவிடுமோ என்று பயப்படுகிறேன். சென்ற வாரம் கணேசனின் மகன் விபத்தில் இறந்து விட்டான். ரவிந்திரனின் மகன் கடும் நோயுற்று வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளான். அவர்களுக்கு நாலைந்து பிள்ளைகள் உண்டு" என்று முகுந்தன் கூறும் போது செல்வராசா சொன்னார், "வீணாகக் கற்பனை செய்து வாழ்க்கையை நாசமாக்காதே. எது விதியோ அதுதான் நடக்கும்".

"விதி என்று எதுவுமில்லை. எமது செயல்கள் தான் விதியை உருவாக்குகின்றன. நல்லவற்றைச் செய்தால் நல்லதே நடக்கும் என்று கதிரேசன் தாத்தா கோவிலில் உரையாற்றும் போது சொல்வார். அதை நான் நம்புகிறேன். அளவுக்கதிகமாகச் சொத்துச் சேர்த்த பின்பும் சொத்தைத் தேடுவது பாவமானது. தேடிய சொத்தைத்தான் தர்மம் செய்தால், அது திரும்பிக் கொடுத்தவரை வந்தடையும் என்றும் கதிரேசன் தாத்தா சொல்வார். அதனால் மேலதிகமான தொழில் எதுவும் தேவையில்லை. உள்ள தொழிலை நல்ல முறையில் செய்தால் போதும்" என்றான் முகுந்தன்.

**செ**ல்வராசா சில கணங்கள் பேசாது நின்றார். அவர் அவ் வயலை வாங்கும் எண்ணத்துடன் இருந்தால் முகுந்தன் சொன்னதை அவர் ஏற்கவில்லை. அந்த வயலை அவர் வாங்கினார். அதை முகுந்தன் சரவணனுக்குக் குத்தகைக்குக் கொடுத்தான்.

“**நீ** அளவுக்கதிகமாகப் பயந்தமையால் தான் இவ்வாறு நடக்கிறாய். சரவணன் எனது சகோதரியின் மகன். அவன் செய்யட்டும்” என்று கூறிப் பெருமூச்சு விட்டார் செல்வராசா.

## 21. அறியாமையால் முடிவு கெடும்

**அ**ன்று இரவு முகுந்தன் பகீரதியின் அருகில் வந்து இருந்து அவளது கையைப் பிடித்தான். அதை அவள் விரும்பாதவள் போல விலக்கி விட்டுச் சற்றுத் தள்ளியிருந்தாள்.

“**ர**தி, என்னில் கோபமிருந்தால் நீர் கோபிப்பது சரி. அப்பா ஏதேதோ கூறிவிட்டார் என்று என்னை ஒதுக்கினால் எனது திட்டம் தோல்வியடைந்துவிடும்” சிரித்தான் முகுந்தன்.

“**ப**கீரதியின் முகம் வெக்கத்தால் சிவந்தபோதும், அவள் தனது பிடிவாதத்தைக் கைவிடவில்லை. அவன் அருகில் வர வர அவள் விலகினாள், “பத்துப் பிள்ளைகளைப் பெறுவது தான் எனது திட்டம். ஒன்றுடன் இப்படி விலகினால், எப்படிப் பத்துப் பெறுவது” சிரித்தான் முகுந்தன். அவள் சிணுங்கியவாறு அவனின் நெஞ்சில் சாய்ந்தாள்.

**அ**ம்மா எனது திட்டத்திற்குப் பச்சைக் கொடி காட்டிவிட்டா. அப்பா கோபிப்பார். பலமாகப் பேசுவார். அதற்கு இடங்கொடாதை. எனக்குப் பல பேரப்பிள்ளைகள் வேண்டும் என்று சொல்லிவிட்டா. பிறகேன் பயப்படுகிறீர்”.

“**மா**மாவுக்குக் கோபம் வந்தால் நல்ல வார்த்தைகள் பேசத் தெரியாது. நான் உங்களை மயக்கி எனது சொற்படி நடக்க வைக்கிறேனாம்”.

“**உ**ண்மை தானே” சிரித்தான் முகுந்தன்.

“**இ**ப்ப உங்களுக்கு வெட்கம், ரோசம், மானம், மரியாதை எதுவும் இல்லை”.

“**உ**ண்மைதான். அவற்றைப் பார்த்தால் மகிழ்ச்சியாக வாழ முடியாது” கண்ணடித்தான் முகுந்தன்.

“**எ**தையும் பேசாது செயலால் என்னை அடக்கி மயக்கி விடுவீர்கள். என்னைப் பேசவிடுவதில்லை” சிணுங்கினாள்.

**அ**வளை இறுகக் கட்டியணைத்தான் முகுந்தன். இருப்பினும் அவள் சொன்னாள், “மடையன், அறியாமையாலும், பெண்மோகத்தாலும் தவறான முடிவுகளை இப்போது எடுக்கிறான். இதை இப்படியே விடக்கூடாது. அவனுக்குப் புத்திமதி கூறிப் பிரயோசனமில்லை. ரதியைக் கண்டிக்க வேண்டும். அவள் தான் எல்லாவற்றிற்கும் காரணமாக இருக்கிறாள் என்று உங்களது அப்பா சொன்னதை நினைக்க வேதனையாக உள்ளது” விம்மினாள் பகீரதி.

“**இ**தென்ன குழந்தைப் பிள்ளை மாதிரி. யார் எதைச் சொன்னாலும் அதைக் கேட்க வேண்டுமே தவிர அவர்கள் கூறியபடி நடந்தால் எமக்கென்று அறிவுள்ளதில் அர்த்தமில்லாமற் போய்விடும். நான் இந்த முடிவைக் கதிரேசன் தாத்தாவுடனும் அதிபருடனும் சேர்ந்து தான் எடுத்தேன். அவர்களது வார்த்தை தெய்வ வாக்கு என்பதை நீர் மறுக்கிறீரா..” என்று கூறியவாறு கைத்தொலைபேசியை இயக்கினான்.

“**ரா**சா சொல்லு” என்று கதிரேசன் கூறினார், “தாத்தா, ரதி அப்பாவின் பேச்சை நினைத்து வேதனைப்படுகிறாள். எனது முடிவு பிழையாம். ஆராயாது எடுத்து விட்டோம். இதைப்பற்றி ரதிக்கு விபரமாகக் கூறுங்கள்” என்று கூறிவிட்டு ரெலிபோனைப் பகீரதியிடம் கொடுத்தான்.

“**எ**னது பேர்த்தியே என்னுடனும், அதிபருடனும் பேசித்தான் இம் முடிவை முகுந்தன் எடுத்தவன். இது நல்ல முடிவு. பலர் பணம் பணம் என்று அவதிப்பட்டு வாழ்க்கையைத் தொலைக்கிறார்கள். அதற்குப் பெரும் உதாரண புரிசர் உனது மாமா. நீ வாழ்க்கையை நன்றாக அனுபவி. முகுந்தனின் ஆசையை நிறைவேற்று”. தாத்தா சில நிமிடங்கள் பேசினார்.

“**வ**யது போனாலும் தாத்தாவுக்கு அந்த நினைவு இருக்கிறது” என்றாள் பகீரதி.

“**நீ** தவறாக நினைக்கிறாய் தாத்தா உண்மையான வாழ்க்கையைப் பற்றிச் சொன்னவர். அப்பா இளமைக்காலத்தில் பணம் தேடும் ஆசையால் பல ஊர்களுக்கும் சென்றவர். அதனால் தான் ஒரு பிள்ளை. பெரும் சொத்துள்ள எமக்குப் பல குழந்தைகள் வேண்டும். என்று அவளைக் இறுக்க கட்டியணைத்தான். ஆத்திர உணர்வு படிப்படியாகக் குறைந்து அற்றுப் போக அந்த இடத்தை மோக உணர்வு பற்றிக் கொண்டது.

## 22. உழாத நிலம் கெடும்

**ச**ரவணனிடம் வந்த முகுந்தன் சொன்னான், "சிவபாலனின் வயல் நிலத்தை அப்பா வாங்கிவிட்டார். அது உனக்குத் தெரியும். என்னால் அந்நிலத்தில் பயிர் செய்ய முடியாது. உனக்குக் கொடுக்க விரும்புகிறேன் என்றேன். சம்மதித்துவிட்டார். அதனால் அந்நிலத்தைப் பொறுப்பேர் மறுத்தால் என்பாடு பெரும் கஷ்டமாகிவிடும்".

"**அ**து பெரும் நிலம். அவ்வளவையும் செய்ய என்னால் முடியுமா..? பல வருட காலமாகச் செய்கையின்றி தரிசாக இருக்கிறது. சரியான முறையில் உழவே பல இலட்சம் ரூபா தேவை".

"**உ**னக்காக நான் எதையும் செய்வன். தேவையான பணத்தை நான் தருகிறேன்" என்றான் முகுந்தன்.

"**எ**ம் முன்னோர் உலகில் செய்யவேண்டிய விடயங்கள், செய்யத்தகாத விடயங்கள் பற்றி பல ஆயிரம் வருடங்களுக்கு முன்பே கூறிவிட்டனர். அது இக்காலத்திற்கு மட்டுமல்ல எதிர்காலத்திற்கும் பொருந்தும். வள்ளுவர், "ஒரு பலம் புழுதி கால் பலம் ஆகும் படி நன்றாக உழுது காயவிட்டால் ஒருபிடி எருக்கூடப் போடாவிட்டாலும் பயிர் செழித்து வளர்ந்து நல்ல பயனைத் தரும் என்றும், உழுதலை விட எருவிடல் முக்கியமானது என்றும் களை எடுத்த பின்பு நீர் பாய்ச்சுவதை விடப் பயிருக்குக் காவல் காத்தல் முக்கியம். அத்துடன் நிலத்துக்குரியவன் தினமும் சென்று வயலைப் பார்த்து அதன் குறைநிறைகளை நிவர்த்தி செய்யாவிட்டால் நிலமகள் மனைமகளைப் போல பிணங்கிவிடுவாள்" என்றும் சொல்கிறார். எதற்கெடுத்தாலும் பெண்ணை உதாரணத்துக்குக் கூறுவது வள்ளுவனது வழியாகும்" சிரித்தான் சரவணன்.

"**வ**ள்ளுவர் அறத்துப் பாலையும், பொருட்பாலையும் எவ்வளவு சிறப்பாகக் கூறினாரோ, அதைவிடப் பலமடங்கு சிறப்பாகக் காமத்துப் பாலைக் கூறியுள்ளார். அதைக் கதை வடிவாக இலங்கை நாட்டில் உள்ள யாழ்ப்பாணத்தில் உள்ள ஒருவர் எழுதியுள்ளார். அதைத்தான் நான் திரும்பத் திரும்பப் படிக்கிறேன். நீயும் படித்துப் பார்".

"**நா**ன் எப்பவோ படித்துவிட்டேன். இந்த விஷயத்தைப் பற்றி மாலதியோடும் பேச வேண்டும்" என்று சரவணன் கூறியபோது முகுந்தன் சற்றுக் கோபமாகக் கூறினான், "வீடும் வேண்டாம் வாசலும் வேண்டாம். மனைவி என்பவள் யமனின் மறு உருவம் என்று கூறி எனது மனதையும் கெடுத்த நீ இப்போது மனைவி சொல்லே மந்திரம் என்று நினைக்கிறாய். உன்னோடு சேர்ந்ததால் தான் ஆரம்பத்தில் நான் மனைவியை வெறுத்தேன்" என்றான் முகுந்தன்.

“**எ**தையும் அனுபவித்தால் தான் தெரியும். கதிரேசன் தாத்தாவும் அதிபரும் தான் எனக்குப் புத்திமதிகள் கூறி மாலதியுடன் சேர்த்து வைத்தார்கள். இப்போது அவளை எனது தோழியாகவும், மந்திரியாகவும் நினைக்கிறேன். அதனால் வாழ்வு வசந்தமாகிவிட்டது. அவளுக்குச் சொல்லாது தொழிலைத் தொடங்கினால் அவள் நிலத்தைப் போலப் பிணங்கிவிடுவாள். அவளை உயர்வாகப் பேசினால், பேச்சில் மயங்கி நான் சொல்பவற்றை ஆராயாமல் ஏற்றுக் கொள்வாள். இவ்வாறு வள்ளுவன் கூறக் கேட்டும் அதன்படி நடவா விட்டால் வாழ்க்கை கசந்து விடும். அது உனக்கும் தெரியும்” என்றான் சரவணன்.

“**உ**டனே சென்று அக்காவுக்குச் சொல்லி அனுமதியைப் பெறு. எம்மிடம் பொருட்களை ஏற்றி இறக்குவதற்கு ஒரு உழவு இயந்திரம் இருக்கிறது. இரண்டு கலப்பை வாங்கினால் வயலை விரும்பியவாறு உழலாம். எதற்கும் நீ கவலைப்படாதே” என்றான் முகுந்தன்.

“**கோ**டீஸ்வரனாக மச்சான் இருக்கும் போது எனக்கு என்ன கவலை. எந்த ஒரு செயலையும் முறைப்படி செய்யாது விட்டால் அந்தொழிலைச் செய்ய உதவி செய்யும் ஆயுதங்கள் மழுங்கி செயலிழத்து விடும்” கண்சிமிட்டினான் சரவணன்.

## 23. உழைக்காவிடில் உறவு கெடும்

**ம**யூரன், முகுந்தனின் வியாபாரத்தலத்தில் தொழிலாழியாக வேலை செய்து வந்தான். அவனுக்கென்று ஒரு வேலை கொடுக்கப்படவில்லை. வேலையாட்கள் யாராவது வேலைக்கு வராவிட்டால் அந்த வேலையை முகுந்தன் மயூரனிடம் ஒப்படைப்பான். முகுந்தனிடம் பதினைந்து லொறிகள் நின்றன. அவற்றைப் பராமரிப்பதும் முகுந்தனது வேலை. லொறிச் சக்கரங்களுக்கு காற்றுக் குறைவாக இருந்தால் உரியளவு காற்றை நிரப்புவது, எண்ணெய் வகைகளை நிரப்புவது இவ்வாறு சிறு சிறு வேலைகளானாலும் இரவும் வேலை செய்தல் வேண்டும். அவனுக்கு இருபத்தைந்து வயது. ஏனைய தொழிலாளர்களைவிடச் சம்பளம் அதிகம்.

**அ**ண்மையில் அவன் மைதிலியைக் காதலித்துத் திருமணம் செய்தான். அவள் வசதியான வீட்டுப் பெண். சாதாரணமான கூலிவேலை செய்யும் ஒருவனைத் தீவிரமாகக் காதலித்துப் பெற்றோரின் எதிர்ப்புக்கு மத்தியில் அவளை அழைத்து வந்திருந்தான். அவனது திருமணத்திற்குச் சென்ற முகுந்தன் பெரியதொரு பணப்பரிசைக் கொடுத்துவிட்டு அவனை வாழ்த்திவிட்டு வந்தான். அவன் திருமணம் செய்தமையால் அவனது மாதச் சம்பளத்தை ஐயாயிரம் ரூபா அதிகரித்தான். குடும்பம் நடத்தப் போதுமான சம்பளம் கொடுக்கப்பட்டதால் குடும்பம் மிகவும் சந்தோசமாக வாழ்ந்தது.

**தி**ருமணத்தின் பின்பு அவன் இரவு நேர வேலைய விரும்பவில்லை. அதை முகுந்தனிடம் சொன்ன போது முகுந்தன் சொன்னான், “திருமணமான புதிதில் இரவு வேலை செய்வது சிரமமானது தான். உனது வேலை அப்படியானது. பொருத்தமான ஒருவர் உனது வேலையைச் செய்ய அகப்பட்டால் உன்னை விடுவிக்கிறேன். அதுவரை தொடர்ந்து வேலையைச் செய்”.

**மூ**ன்று மாதங்கள் கழிந்தும் முகுந்தனுக்குப் பொருத்தமான வேலையாள் கிடைக்கவில்லை. அதனால் வேறு ஓர் இடத்தில் வேலைக்குச் சேர்வோம் என நினைத்து வேலைக்குச் செல்லாது விட்டுவிட்டான்.

**மே**லும் மூன்று மாதங்கள் கழிந்தன. மயூரனுக்கு நிரந்தரமாக ஒரு வேலை கிடைக்கவில்லை. அன்றன்று கிடைக்கும் தொழிலைச் செய்து வந்தான். அதில் சம்பளம் மிகக் குறைவு. அத்துடன் வேலை முடிந்த பின் சில சமயம் சம்பளம் கொடுபடாது.

**வ**சதியாக வாழ்ந்த மைதிலிக்குக் கஷ்ட காலம் ஆரம்பித்தது. அதனால் மயூரனின் மீது வெறுப்புண்டானது. தினமும் காலை முதல் மாலை வரை ஏதோ ஒரு வகையில் இருவருக்குமிடையில் பிரச்சினை தொடங்கி அது சண்டையாக மாறும்.

**அ**ன்று மைதிலி சமைக்கவில்லை. வேலையால் பசியோடு வந்த மயூரன், “ஏன் சமைக்கவில்லை” என்று கேட்டதும், மைதிலி ஆத்திரத்துடன் சொன்னாள், “அரிசி இல்லை. காய் கறிகள் இல்லை. மூன்று நாட்களாய் நீ வேலைக்குச் செல்லாததால் சமையற் பொருட்களெல்லாம் முடிந்துவிட்டன. நான் என்ன செய்வது. அப்பாவும் அம்மாவும் உன்னைத் திருமணம் செய்தால் இவ்வாறுதான் கஷ்டப்படுவாய். அதனால் அவனை மறந்துவிடு என்றவை. நான் தான் அவற்றை நம்பாமல் இப்போ சீரழிந்து போனேன்” என்று அழுதாள்.

**ம**யூரனுக்கு வேதனையாக இருந்தது. பெற்றோரும் வசதியற்றவர்கள். அவர்களே அன்றன்று வாழத்திண்டாடுகிறார்கள். என்று நினைத்தவாறு கதிரேசனிடம் சென்று அழுதான்.

**தி**ருமணமான புதிதில் மனைவியைப் பிரிந்து வாழ்வது பெரும் துன்பம். ஆனால் நீ அவசரப்பட்டுவிட்டாய். முகுந்தன் பொருத்தமான ஒரு தொழிலாளியை நியமிக்கும் வரை பொறுமையாகக் காத்திருக்க வேண்டும். அவனுக்கு ஏராளமான பிரச்சினைகள். அதனால் பொறுமையாக இரு. நான் அவனுடன் கதைக்கிறேன்” என்று கூறிவிட்டு ஐயாயிரம் ரூபா கொடுத்தார்.

**ம**றுநாள் மயூரனையும் அழைத்துக் கொண்டு முகுந்தனிடம் சென்றார் கதிரேசன். அவரைக் கண்ட முகுந்தன், “தாத்தா, என்ன எதற்காக என்னைத் தேடி வந்தீர்கள்? போனில்

சொல்லியிருக்கலாம்” என்று கூறியவாறு அவரை வணங்கி வரவேற்று ஆசனத்தில் அமரத்தினான்.

“**நா**ன் மயூரனைப் பற்றி உனக்குச் சொல்லத் தேவையில்லை. பல வருடங்களாக ஒழுக்கமாக வேலை செய்கிறான்” என்று கதிரேசன் கூறிக் கொண்டிருந்த போது முகுந்தன் குறுக்கிட்டுச் சொன்னான், “தாத்தா மயூரன் நல்ல நேர்மையான தொழிலாளி பொருத்தமான ஒருவர் கிடைத்ததும் வேலையை மாற்றித் தருகிறேன் என்று கூறினேன்”.

“**எ**ன்னில் தான் ஐயா பிழை என்னை மன்னித்துக் கொள்ளுங்கள்” என்றான் மயூரன்

“**தி**ருமணமானால் மனைவியை விட்டுப் பிரிவது கஷ்டம் தான். அதுவும் இரவில் பிரிவதென்பது பெரும் துன்பம். எல்லாம் எனக்குத் தெரியும். பொருத்தமான ஒருவர் கிடைத்துவிட்டார். அதனால் நீ பகலில் வேலை செய்” என்றான் முகுந்தன்.

“**மி**கவும் நன்றி ஐயா. உழைக்காததால் எனது மனைவி மட்டும் என்னை வெறுக்கவில்லை. பலர் வெறுத்தனர். ஒவ்வொரும் தம்மிடம் நான் உதவிகோரி வந்து விடுவேன் என்று நினைத்தே வெறுத்தனர். உத்தியோகம் புருஷ லட்சணம். என்பதை உணர்ந்து கொண்டேன்” என்றான் முகுந்தன்.

“**ம**யூரா, தாத்தா நடக்கக் கஷ்டப்படுவார். எனது மோட்டார் வண்டியில் தாத்தாவைக் கொண்டு சென்று அவரது வீட்டில் விட்டு விட்டு வந்து வேலையைச் செய். இனிமேல் தேவையேற்பட்டால் மட்டும் இரவு நேரங்களில் வேலை செய்” என்றான் முகுந்தன். மிகுந்த மகிழ்வுடன் தாத்தாவை ஏற்றிக்கொண்டு புறப்பட்டான் மயூரன்.

## 24. இறைக்காத கிணறும் கெடும்

**க**திரேசனைச் சிவன் கோவில் மட வாசலில் இறக்கிவிட்டுப் புறப்படத் தயாரான மயூரனுக்குக் கதிரேசன் சொன்னார், “மகனே, உத்தியோகம் புரிஷ லட்சணம் என்று பெரியவர்கள் கூறியுள்ளனர். அதனால் வரும் சிரமங்களைச் சிரமமென்று பாராது மனதைத் திடப்படுத்திக் கொண்டு வேலை செய். திருமணமான புதிதில் இரவில் வேலை செய்வது கடினம் தான். இருப்பினும் வாழவேண்டுமானால் மனம் கலங்காது தொழில் செய்தல் வேண்டும். நீ நல்ல தொழிலாளி, பண்பானவன், கடினமான வேலைகளையும் செய்யக் கூடியவன். பலசாலி. இருந்தாலும் வேலை செய்யாதிருந்தால் குடும்பமே உன்னை வெறுத்தொதுக்கும். ஒரு நல்ல நீர்க்கிணறு உள்ளது. அதை இறைத்துச் சுத்தப்படுத்தாது விட்டால் அந்த நீர் பாவனைக்குதவாது. அது போல நல்ல திடகாத்திரமான உடல்

இருந்தாலும், நல்லொழுக்கம் இருந்தாலும் வேலை செய்யாவிட்டால் மதிப்பு இராது. பொருள் இல்லாதவனைப் பெற்ற தாயும் விரும்பமாட்டாள் என்று பெரியோர் சொல்வார்கள். உனக்கு இரவில் வேலை செய்ய இப்போது சிரமமாக இருக்கும். காலப்போக்கில் அது சரிவந்துவிடும். ஆசை அறுபது நாட்கள், மோகம் முப்பது நாட்கள் என்றும் பெரியவர்கள் கூறியுள்ளனர். செய்யும் தொழில்தான் தெய்வமாகும். அதனால் செய்யும் தொழிலைத் தெய்வமாக மதித்துப் போற்ற வேண்டும். தொழில் ஸ்தானம் தான் தொழிலாளியின் கோவிலாகும். நீ தனக்கு அறிவிக்காது வேலையால் நின்றதால் தான் பெரும் கஷ்டத்துக்குள்ளானதாக முகுந்தன் சொன்னான். "நீங்கள் ஏன் தாத்தா இவனுக்காகப் பரிந்து பேச வந்தீர்கள். நீங்கள் கேட்பதை என்னால் செய்ய முடியாது என எப்படிச் சொல்வது? ஒருவாரமாக வாகனங்களுக்கு எண்ணெய், ஓயில் என்பன விடத் தொழிலாளர்கள் பெரும் சிரமப்பட்டனர். அதனால் அவன் இனிமேல் வேலையை விட்டு நின்றால் தயவு செய்து அவனுக்காகப் பரிந்து பேச நீங்கள் வரவேண்டாம்" என்றவன். அவன் சொல்வதிலும் நியாயம் இருக்கிறது. நன்னீர்க்கிணறு அழுக்கடைந்தால் அது கிணற்றின் குற்றமல்ல. கிணத்தின் சொந்தக்காரனின் குற்றம். அதுபோல ஒரு நல்ல தொழிலாளியானாலும் அறிவிக்காது நின்றால் அது முதலாளியின் குற்றமல்ல. அது தொழிலாளியின் குற்றமாகும். அத்துடன் அவசியமேற்பட்டால் இரவிலும் வேலை செய்ய வேண்டும் என்று முகுந்தன் சொன்னதை நீயும் கேட்டனிதானே. முகுந்தன் நல்லவன். வல்லவன். தொழிலாளர்களது மனநிலையை அறிந்தவன். ஆனால் குற்றம் செய்பவர்களை மன்னிக்காதவன். இது எல்லாத் தொழிலாளர்களுக்கும் தெரிந்த விடயம். இதை ஏன் நீ உணர மறந்தாய்? இனிமேலாவது இவற்றையெல்லாம் சிந்தித்து நட" என்றார்.

**ம**யூரன் வீட்டுக்கு வந்து நடந்தவற்றைக் கூறியபோது மைதிலி சொன்னாள், "மிகுந்த செல்வத்துடன் வாழ்ந்த நான் மிகுந்த கஷ்டம் வந்தபோது மனம் குழம்பி விட்டேன். எனது காதல் தெய்வீகமானது அதனால் யாராலும் அழிக்க முடியாதது என்று நினைத்துத் தான் உங்களுடன் வந்தேன். வறுமை எனது மனதை மாற்றிவிட்டது. இனிமேல் அவ்வாறு நான் நடந்து கொள்ள மாட்டேன். எனது பெற்றோர் இதை அறிந்து எம்மைக் கேலி செய்தார்களாம்" விம்மி விம்மி அழுதாள்.

"**மை**திலி அழாதை எனக்கு வேலை கிடைத்துவிட்டது. எனது வேலை சற்றுச் சிரமமானது என்று தான் முதலாளி அதிக சம்பளம் தந்தார். நான் அந்த வேலையைக் கேட்டுச் செய்யப் போகிறேன். நான் காதலித்தவளின் மகிழ்வுக்காகத் தினமும் இரவில் வேலை செய்ய வேண்டி வந்தாலும் செய்வேன்" என்றான். அவனது குரலில் வன்மம் எதிரொலித்தது.

"**நா**ன் இனி நீங்கள் இரவில் வேலைக்குப் போக வேண்டாம் என்று சொல்லமாட்டேன். நான் அப்படிச் சொல்லியதால் தான் இவ்வளவு பிரச்சினைகளும் உண்டாயின" என்றாள் மைதிலி.

## 25. இரக்கமில்லா மனிதம் கெடும்

**க**திரேசன், மைதிலியின் தந்தையான இராமலிங்கத்திடம் சென்று சொன்னார், "இராமலிங்கம், உனது மகள் மைதிலி மிகவும் செல்லமாக வளர்ந்தவள். அவள் உனக்கு ஒரே ஒரு பிள்ளை. காதல் என்பது உயிர்களுக்கு வரும் இயல்பான உணர்வு. அத்துடன் காதல் என்பது ஏதோ ஒருவகையில் இருவருடனும் தொடர்புடையது. தொடர்பு இல்லாதிருந்தால் உனது மகளுடன் இருபத்திற்கு மேற்பட்ட மாணவர்கள் கல்வி கற்றனர். கிராமத்தில் நூற்றுக்கணக்கான வாலிபர்கள் இருக்கிறார்கள். அத்துடன் அவள் கற்பதற்காகப் பட்டணத்தில் உள்ள தனியார் கல்வி நிறுவனத்திற்குச் சென்றவள். அங்கு அவளுடன் நூற்றுக்கணக்கான வாலிபர்கள் கற்றனர். இவர்களையெல்லாம் விட்டு விட்டு அவள் மயூரனை விரும்பக் காரணம் என்ன"?

"**இ**ராமலிங்கம் எதுவும் பேசவில்லை. அவருக்கு கதிரேசன் வந்தது பிடிக்கவில்லை. அதனால் எதுவும் பேசாதிருந்தார். அவரது மனைவி கஜலட்சுமி, கதிரேசன் வீட்டுக்கு வந்தால் விழுந்து விழுந்து உபசரிப்பாள். அன்று அவள் அந்தப் பக்கம் வரவில்லை. கஜலட்சுமி இரண்டு தினங்களுக்கு முன் சிவன் கோவிலில் கதிரேசனைக் கண்டு தனது மகள் படும் கஷ்டத்தைத் தீர்த்துவைக்குமாறு கூறி அழுததால் தான் அவர் அங்கு வந்திருந்தார். அதை இராமலிங்கம் அறிந்தால் பிரச்சினைகள் பலவும் வரும் என்பதால் அவள் அங்கு வரவில்லை.

"**இ**ராமலிங்கம், மயூரன் நல்லவன். பண்பாளன். ஒழுக்கமுள்ளவன். ஊரவரால் மதிக்கப்படுபவன். நன்கு கற்றவன். ஏஎல்லில் கணிதப் பிரிவில் மூன்று சீ பெற்றுள்ளான். கட்டாயம் அவனுக்கு ஒரு நல்ல தொழில் கிடைக்கும். இப்போதும் அவன் நல்ல சம்பளம் எடுக்கிறான். அவனது வேலையை முகுந்தன் பெரிதும் விரும்புகிறான். அவன் ஒரு விழியில் உனது உறவுக்காரன். அவனின் தந்தை அதிகமாக மது அருந்துவதால் தான் அவனது குடும்பம் வறுமைக்குட்பட்டது. அவனது மூத்த சகோதரி பட்டதாரி ஆசிரியை. இளைய சகோதரி முகாமைத்துவ உதவியாளர். முன்புபோலல்ல இப்போது அவனது குடும்பம் மதிப்புக்குரிய குடும்பமாகிவிட்டது. இரு சகோதரிகள் திருமணமாகாதிருக்க இவன் திருமணம் செய்துவிட்டான் என்று தான் குடும்பத்தினர் வேதனைப்படுகிறார்கள்".

"**அ**வை என்ன வேற்றூரவரா. எல்லாம் எனக்குத் தெரியும். நான் மதிப்போடும் மரியாதையோடும் இக்கிராமத்தில் வாழ்ந்து வருகிறேன். அவள் அதைக் கெடுத்துவிட்டாள்" கோபத்துடன் சொன்னார் இராமலிங்கம்.

"**ந**டந்தது நடந்து முடிந்து விட்டது. அவள் ஒரு சாதி குறைந்தவனை அல்லது கற்காதவனை விரும்பியிருந்தால் நீங்கள் கோபிப்பது நியாயமானது. அவனுக்குக் கட்டாயம்

தொழில் கிடைக்கும். அவன் வெளிவாரியாகப் பல்கலைக்கழகத்தில் விஞ்ஞானதுறையில் கல்விகற்கிறான். முதலாம் ஆண்டுப் பரீட்சையில் சித்தியடைந்துவிட்டான். இறுதிப்பரீட்சையை அடுத்த மாதம் எழுதவுள்ளான். அதில் சித்தியடைந்தால் அவன் ஒரு விஞ்ஞானப் பட்டதாரி. இப்படியிருக்க குடும்பக்கஷ்டம் காரணமாக அவன் ஒரு வியாபாரத்தலத்தில் வேலை செய்வது அவமானமா…?"

**இ**ராமலிங்கம் சற்று சாந்தமானார். அதை உணர்ந்து கொண்ட கதிரேசன் சொன்னார், "இரக்கமில்லாத மனிதர்கள் மிகவும் கொடுமையானவர்கள். வாழ்க்கை மேன்மையானது. அன்புமயமானது. இரக்கம் தான் மனதில் அன்பை உருவாக்குகிறது. உயிருக்கும் உடலுக்கும் உள்ள தொடர்பு அன்புள்ளவர்களாக வாழும் வாழ்க்கை என்று பெரியவர்கள் கூறுவார்கள். அன்பு எல்லோர் மீதும் விருப்பம் உடையவராக வாழ வழிவகுக்கும். உலகத்தில் இன்பமாக வாழ வேண்டும் என்று நினைப்பவர்கள் முதலில் தம் குடும்பத்தைப் பின் சமூகத்தை நேசிக்க வேண்டும். அதிபரைப் பாருங்கள் அவர் தனது வாழ்நாளில் எச் சந்தர்ப்பத்திலாவது சினந்திருப்பாரா…? அன்பால் சினத்தவரையும் கவர்வார். அவருக்கு என்ன குறை?" கதிரேசன் கேட்டார்.

"**அ**வள் அவசரப்பட்டு எமது குடும்ப மானத்தைக் கப்பலேற்றி விட்டாள். அவளின் உறவே வேண்டாம்" என்றார் இராமலிங்கம்.

"**அ**வள் இப்போது கர்ப்பமாக இருக்கிறாள். இந்த நேரத்தில் நீங்களும் மயூரனது பெற்றோரும் எதிர்த்தால் அவர்கள் என்ன செய்வார்கள். நீங்கள் இப்போது வீரமாகப் பேசலாம். உள் மனதில் அவளைப் பற்றிய எண்ணங்கள் இல்லை என்று சொல்லுங்கள் பார்ப்போம்".

**அ**ப்போது அங்கு வந்த கஜலட்சுமி சொன்னாள், "இவர் எப்பொழுதும் எம்மை வெருட்டித் தனது எண்ணங்களை நிறைவேற்றி வந்துள்ளார். இவரால் இறங்கிப் போக முடியாது. இரக்கமில்லா மனிதரோடு இனியும் வாழ முடியாது. நான் எனது மகளுடன் சென்று வாழப் போகிறேன்" என்று கூறிவிட்டு வெளியே சென்றுவிட்டாள். கதிரேசன் எழுந்தார். இராமலிங்கம் எதுவும் பேசவில்லை, "நானும் செல்கிறேன் உனக்கேதாவது உதவி தேவைப்பட்டால் சொல்லி அனுப்பு என்று கூறிவிட்டுப் புறப்பட்டார். வெளியே அவரின் வருகைக்காகக் கஜலட்சுமி காத்திருந்தாள். அவரைக் கண்டதும், அவரின் அருகே வந்தாள்.

"**இ**ராமலிங்கம் எதுவும் பேசவில்லை. அவரால் தனித்து வாழ முடியாது. விரைவில் உங்களைத்தேடி வருவார்" என்று கூறிவிட்டு அவளை அழைத்துச் சென்று மைதிலியிடம் ஒப்படைத்தார். மைதிலி அதை எதிர்பாராததால் அவள் பேச முடியாது அவதிப்பட்டாள்.

## 26. துணையில்லா வாழ்வு கெடும்

**சி**வன் கோவிலுக்கு வந்த இராமலிங்கம் சிவனை வணங்கிவிட்டுச் சிறிது நேரம் வெளி மண்டபத்தில் இருந்தார். குளிர் காற்று மேற்சட்டை அணியாத அவரின் மேனியில் பட்டு ஒரு விதமான கிளர்ச்சியைக் கொடுத்தது. இலிங்கத்தைப் பார்த்தார். அவரது கண்கள் கலங்கின.

**அ**ப்போது அதிபரும் கதிரேசனும் கோவிலுக்கு வந்தனர். கால்களைக் கழுவி விட்டு வந்த இருவரும் இராமலிங்கத்தைப் பார்த்தனர். கதிரேசன் அவரைக் காணாதவர் போல் உள்ளே சென்றுவிட்டார். அதிபர் அவரின் அருகில் வந்தார். இராமலிங்கம், பொன்னுத்துரை அதிபராக இருந்த காலத்தில் அவர் அதிபராக இருந்த ஊர்ப் பாடசாலையில் தமிழ் ஆசிரியராகக் கடமையாற்றியவர். எப்பொழுதும் முரண்பட்ட கதைகளையே கதைப்பார். மாணவர்களுடனும், ஆசிரியர்களுடனும், தேவையில்லாத விடயங்களுக்கெல்லாம் முரண்படுவார். அவரை ஒரு மாதிரிச் சமாளித்துவைத்திருந்தார் பொன்னுத்துரை. பொன்னுத்துரை ஓய்வு பெற்றதும், பாடசாலைக்குப் புதிதாக நியமிக்கப்பட்ட அதிபர் அவரை வேறு பாடசாலைக்கு மாற்றிவிட்டார். அதனால் பொன்னுத்துரை அதிபர் மீது ஓர் இனம் புரியாத பற்று இராமலிங்கத்தின் இதயத்தின் ஒரு மூலையில் ஒட்டிக் கொண்டிருந்தது.

“**எ**ப்படிச் சுகமாக இருக்கிறீர்களா..? தர்மலிங்கம் உங்களுக்கு உணவு தர மறுத்துவிட்டானாம். இப்ப யாரிடம் உணவை வாங்குகிறீர்கள். உங்களுக்கு விருப்பமானால் என்னுடன் வந்து மடத்தில் தங்கியிருங்கள்” என்றார் பொன்னுத்துரை.

**அ**ன்பான அவரது வார்த்தைகள் இராமலிங்கத்தின் மனதை நெகிழப்பண்ணின. அதனால் அவரின் கண்கள் கலங்கின. அதைக் கண்டு பரபரப்படைந்த அதிபர், “ஏன், நான் ஏதாவது தவறாகச் சொல்லிவிட்டேனா…?” என்று கேட்டார்.

“**இ**ல்லை இல்லை மனிதர்களுடைய வாழ்வு எப்படியெல்லாம் மாறுகிறது” என்றார் இராமலிங்கம் பவிரத்தியாக.

“**ம**னிதரை வாழ்வு ஒரு போதும் மாற்றுவதில்லை. மனிதர் தான் வாழ்வை மாற்றியமைக்கின்றனர். நான் பேசினால் நீங்கள் ஓரளவாவது கேட்பீர்கள் என்று நினைத்துத்தான் கதிரேசன் உங்களோடு என்னைப் பேசுமாறு கூறிவிட்டு கோவிலுக்குள்ச் சென்றவர். நீங்கள் விரும்பினால் சில விடயங்களை நாம் மனம் விட்டுப் பேசலாம். பின் குறைநினைக்கக் கூடாது” என்றார் அதிபர்.

“**சொ**ல்லுங்கோ எனது வாழ்க்கையில் உங்களை நான் மறக்க மாட்டன். எனக்கு எவ்வளவோ நன்மைகளை நீங்கள் செய்தீர்கள்” என்றார் இராமலிங்கம்.

“**ந**ன்றும் தீதும் பிறர் தர வாரா” என்று நீங்கள் ஏ-எல் மாணவர்களுக்குக் கற்பிக்கும் போது நான் கேட்டு ரசித்துள்ளேன். மிகமிக அருமையாக பெரிய விளக்கங்களுடன் நீங்கள் கற்பிப்பதால் மாணவர்கள் தமிழ்ப் பாடத்தை விரும்பிக் கற்றனர். நல்ல பெறுபேற்றையும் பெற்றனர். இலக்கியங்கள் சொல்வது சுவைக்காக அல்ல. வாழ்க்கையை உணர்ந்து வாழ்வதற்காக என்பதை ஏற்றுக் கொள்கிறீர்கள் தானே”.

**இ**ராமலிங்கம் எதுவும் பேசாது மௌனமாக இருந்தார். அதனால் அதிபர் சொன்னார், “ஒருவருக்கு வரும் நன்மை தீமைகள் அவரின் செயல்களால் தான் வருகிறது. விதியோ, கடவுளோ, வேறு யாருமோ தருவதில்லை என்று கற்பித்தீர்கள். இப்போ அதை நீங்கள் மீறுவதாக உங்களுக்குத் தெரியவில்லையா…?”

**இ**ராமலிங்கம் அப்போதும் பேசவில்லை, “நீங்கள் கஜலட்சுமி மீது ஒருதலையாகக் காதல் கொண்டு, அவளைப் பலமுறை இரந்து கேட்டும் அவள் உங்களைத் திருமணம் செய்யச் சம்மதிக்கவில்லை. உங்களது பெற்றோரது வேண்டுகோளுக்காகக் கதிரேசன் சென்று கஜலட்சுமியோடும் அவளது பெற்றோரோடும் கதைத்த போதும் அவள் ஒப்புக் கொள்ளவில்லை. அதன்பின் அவளது பெற்றோர் அவளை வற்புறுத்தி உங்களுக்குத் திருமணம் செய்து வைத்தனர். அவ்வாறு நீங்கள் உயிருக்குயிராகக் காதலித்த பெண்ணை நீங்கள் பூப்போலப் பாதுகாத்திருத்தல் வேண்டும். நீங்கள் ஒருபோதும் அவளது விருப்பத்தைப் பூர்த்தி செய்ய முயலவில்லை. ஒரு சேலை அல்லது சட்டை எடுப்பதானாலும் கூட அவளின் விருப்பத்தை அறியாது நீங்கள் விரும்பிய சேலையையோ அல்லது சட்டையையோ வாங்கிக் கொடுப்பீர்கள். அத்துடன் அவளது பெற்றோர், உறவினர்களுடன் உறவாட நீங்கள் விடுவதில்லை. இது சரியா…? அதனால் தான் மைதிலி மயூரனைக் காதலித்து அவனோடு சென்றவள்”.

**அ**ப்போதும் இராமலிங்கம் எதுவும் சொல்லவில்லை. அதனால் அதிபர் தொடர்ந்து சொன்னார், “லட்சுமி, விருப்பமில்லாமல் உங்களைத் திருமணம் செய்தபோதும் உங்களுக்கு விருப்பமில்லாத செயல்களை ஒருபோதும் செய்ததில்லை. ஒரு குற்றவாளியைப் போலத் தனது தாயை நடத்தியதால் தான் மைதிலி அன்புக்காக ஏங்கி மயூரனைக் காதலித்தவள். உங்களுக்கு விருப்பமில்லாத ஒரு செயலை, உங்களில் விருப்பமில்லாததால் தான் அவள் செய்தவள். ஒரு பெண்ணுக்குத் திருமணமாகும் வரை தான் அவள் பெற்றோரை நேசிப்பாள். திருமணமான பின் கணவனையும், பிள்ளை பிறந்தபின் பிள்ளையையும் விரும்புவது தான் உலக நடைமுறை. தமிழைக் கற்றும், கற்பித்தும் உங்களுக்கு இது புரியவில்லையே. திருக்குறள் என்ன சொல்கிறது. அதைப் படிக்காது பண்டிதராக முடியாது கற்ற கல்வி

வாழ்க்கைக்கு உதவ வேண்டும். வாழ்க்கையை மேம்படுத்த வேண்டும். இது உங்களளவில் செயற்படுகிறதா…? எனது மனைவியின் பிரிவை இன்னும் என்னால் தாங்க முடியவில்லை. பல வருடங்களுக்கு முன்பு அவள் இறந்தாலும் அவள் என்னுள் மகிழ்வுடன் வாழ்கிறான்" அதிபரால் பேச முடியவில்லை. சால்வையால் கண்களால் வழிந்த கண்ணீரைத் துடைத்தார். அதைப் பார்த்து இராமலிங்கம் உருகிப்போனார்.

**இ**ராமலிங்கம் பொன்னுத்துரை அதிபரின் மனைவியை நினைத்துப் பார்த்தார். கண்டவுடன் கையெடுத்துக் கும்பிட வேண்டும் என்ற நினைவு தன்னை அறியாமல் வரும். அவர் கை கூப்பி அவளை வணங்குவார். அதை அதிபர் விரும்புவதில்லை.

"**ந**ல்ல பண்பான மனைவி வாய்த்தால், அவனுக்கு உலகில் உள்ள அனைத்து இன்பங்களும் வந்து சேரும். எனது மனைவியைப் போன்றவள் தான் உனது மனைவியும் அவளின் மீது அன்பு செலுத்திப்பார். அதன்பின் சொல்" என்று அதிபர் பல வருடங்களுக்கு முன் சொன்னது இராமலிங்கத்தின் நினைவுக்கு வந்தது.

"**நா**ன் தான் தவறாக நடந்து கொண்டேன். அவள் இல்லாததால் நான் வெயிலில் கிடக்கும் புழுப்போலத் துடி துடிக்கிறேன். யாராவது சேர்த்துவிடமாட்டார்களா என்று தினமும் சிவனைப் பிரார்த்திப்பேன். அது இன்று நடந்து விட்டது" என்றார் இராமலிங்கம். கதிரேசனும் பொன்றுத்துரை அதிபரும் இராமலிங்கத்தை அழைத்துக் கொண்டு மயூரனின் வீட்டுக்குச் சென்றனர்.

## 27. ஒழுக்கமில்லாம வாழ்வு கெடும்

**இ**ராமலிங்கம் மயூரனின் வீட்டுக்கு வந்தபோது, "வாருங்கோ மாமா… வாருங்கோ…" என்று மிக்க மகிழ்வுடன் மயூரன் வரவேற்றான். கஜலட்சுமியும் மைதிலியும் வெளியே வரவில்லை. பின் பக்கத்தால் சென்ற கதிரேசன் கஜலட்சுமியைக் சந்தித்தார். அவள் அழுதபடி இருந்தாள். ஏன் அவள் அழுகிறாள் என்று கதிரேசனுக்குப் புரியவில்லை. எந்நேரமும் மிகுந்த மகிழ்வுடன் காணும் மைதிலியும் தாயுடன் சேர்ந்து அழுது கொண்டிருந்தாள்.

**க**திரேசன் கஜலட்சுமிக்கு அருகிற் சென்று, "லட்சுமி, இராமலிங்கம் மனம் மாறி உன்னோடு சேர்ந்து வாழ வந்திருக்கிறார். இந்த நேரம் அவரை மகிழ்வுடன் வரவேற்காது ஏன் வேதனைப்பட்டு அழுகிறாய். நீ அழுவதால் உனது மகளும் அழுகிறாள். வா வந்து உனது கணவரை அழைத்து வா…"

“**நா**ன் வரமாட்டன். அவர் தனது வீட்டுக்குச் சென்று வாழட்டும். மூன்று நேரமும் நேரம் தவறாது அவருக்கு நான் சாப்பாடு கொண்டு சென்று கொடுக்கிறேன். பல வருடகாலமாக இவரை விட்டுப் பிரிந்து வாழ வேண்டும் என்று நினைத்தபோதும், வருமானம் இல்லாததாலும், மானம் போய்விடக் கூடாது என்பதற்காகவும் ஒற்றுமையாக வாழ்வது போல இருவரும் பல வருடங்களாக நடித்து வந்தோம். இவரைப் பிரிந்து வந்த பின்பு இங்கு நான் நிம்மதியாகவும், மகிழ்ச்சியாகவும் வாழ்ந்து வருகிறேன். அதுவும் பிழைத்து விட்டது”.

“**எ**ன்ன? பல வருடங்களாகப் பிரிந்து வாழ்கிறீர்களா…? இது யாருக்கும் தெரியாத விஷயமாயிற்றே” என்றார் கதிரேசன்.

“**இ**வர் ஒரு முன்கோபி, கொதியன், முட்டாள் யோசிக்காது முடிவெடுக்கும் மூடன்” என்று அழுதாள் கஜலட்சுமி.

“**அ**ப்பா, அம்மாவுக்குச் செய்யும் கொடுமை காரணமாகத் தான் என்னால் படிக்க முடியவில்லை. அத்துடன் மயூரனுடன் சென்றதற்கும் காரணம் அதுதான்” என்றாள் மைதிலி.

**க**திரேசன் பேசவில்லை. அவரால் பேசமுடியவில்லை. அதனால் பேசாது இருந்தார். குடும்பங்களிடையே இரகசியமாக எத்தனை விஷயங்கள் நடைபெறுகின்றன. அவற்றை நினைத்தால் வியப்பாக இருக்கிறது என்று நினைத்த கதிரேசன், “லட்சுமி, நான் அடுத்து என்ன செய்ய வேண்டும் என்று சொல்…” என்றார்.

**அ**ழுவதை நிறுத்திய கஜலட்சுமி சிறிது நேரம் மௌனமாக இருந்து விட்டுச் சொன்னாள், “தாத்தா, நீங்கள் ஊருக்குப் பெரியவர். உங்களது வாய்ச் சொல்லுக்கு ஊரே கட்டுப்பட்டு நடக்கும். அதிபர் உத்தமர்களை விட உத்தமமான மனிதன். அப்படிப் பலர் வாழ்கின்றனர். இவர் என்னை விரும்பியவர். ஆனால் நான் விரும்பவில்லை. காதல் என்பது நினைத்தவர் தான் நினைத்தவரை விரும்புவதா? இருவரின் மனமும் விரும்பவேண்டும். நாம் ஆயிரக்கணக்கான மனிதர்களைக் காண்கிறோம். எல்லோரையும் விரும்ப முடியுமா…? ஏனோ தெரியவில்லை இவரை எனக்குப் பிடிக்கவே இல்லை. என்னிடம் பல முறை கேட்டும் நான் விரும்பாததால் அவர் உங்களின் மூலம் கல்யாணப் பேச்சை ஆரம்பித்தார்” பேசுவதை நிறுத்திவிட்டு மூச்சுவிட்டாள் கஜலட்சுமி.

“**அ**ப்போ விருப்பமில்லாமலா திருமணத்திற்கு ஒப்புக் கொண்டனீ. ஏன் அப்படிச் செய்தாய்?” கதிரேசன் கேட்டார்.

“**த**மிழ்ப் பெண்களைப் பொறுத்தவரை பெற்றோரின் தலையீடுதான் அவர்களது தலைவிதியை நிர்ணயிக்கிறது. அப்பா விவசாயி வசதி குறைந்தவர். ஏழை அவர் ஆசிரியர்

என்றதும் சம்மதித்துவிட்டார். இவருக்கு நான் யாரையோ காதலிப்பதால் தான் தன்னை வெறுக்கிறாள் என்று நினைத்துவிட்டார். திருமணம் முடிந்துவிட்டது. எமது ஊரில் வசிக்கும் பிரணவன் வெளிநாடு செல்ல விரும்பினான். அவன் எனக்கு முறை மச்சான். எனினும் நான் அவனை விரும்பவில்லை. அதுபோல அவனும் என்னை விரும்பவில்லை. வெளிநாடு போவது தான் தனது இலட்சியம் என்று சொல்லி அதற்காகக் கடும் முயற்சியை மேற்கொண்டான். அவன் வெளிநாட்டுக்குச் செல்லும் நாள் வந்தது. அவன் எனக்குச் சொல்வதற்காக வீட்டுக்கு வந்தபோது இவர் இருக்கவில்லை. அவன் புறப்படும்போது தான் இவர் வந்தார். அவனைக் கண்டதும் அவரின் மனதில் இருந்த சந்தேகம் வலுத்தது. நான் போனில் பேசினால் அது அவனோடு தான் பேசுகிறேன் என்று சந்தேகப்பட்டு ஒருநாள் வெளிப்படையாகக் கூறிவிட்டார்".

"**பி**ரணவன் சிவகுருவின் மகளோடு படிக்கும் போதே காதல் கொண்டவன். அவன் வெளிநாட்டுக்குச் செல்லுமுன் பதிவுத் திருமணமும் செய்தவன். அவனை எப்படி இவர் சந்தேகப்பட்டார்?" என்று கதிரேசன் கேட்டார்.

"**கா**மாளைக் கண்ணனுக்குப் பார்ப்பதெல்லாம் மஞ்சள்நிறமாய்த் தெரியுமாம். அதுபோல நான் யாராவது ஓர் ஆணுடன் சிரித்துக் கதைத்தால் அது தவறான உறவென்று முடிவெடுத்துச் சண்டைக்கு வருவாள். அதனால் அவரின் உறவைவிட்டதோடு உறவினர்கள், நண்பர்கள், அயலவர்கள், எல்லோரினதும் உறவையும் விட்டு விட்டேன். இல்லாத ஓர் உறவை இருக்கிறது என்று சாதிக்கும் ஒரு மிருகத்தோடு வாழ விருப்பமில்லாததால் வாழ்க்கையில் இருந்து ஒதுங்கிவிட்டேன். இதைப் பற்றி நீங்கள் யாருக்கும் கூறமாட்டீர்கள் என்ற தைரியத்தால் தான் உங்களுக்குக் கூறினேன். ஒழுக்கமாக வாழ்ந்த என்னைக் குற்றம் சொன்னதால் அவரின் வாழ்வு முழுமையாகக் கெட்டுவிட்டது. பெண்களுக்கு ஒருபிள்ளை பிறந்தால், அது வாழ்வின் முழுமையாகும். அதனால் நான் பாதிக்கப்படவில்லை. ஏனென்றால் இந்த முடிவை. நான்தான் விரும்பி எடுத்தேன். அவரை வீட்டுக்கு அழைத்துச் செல்லுங்கள். மூன்று நேரமும் நேரம் தவறாது உணவை அனுப்புகிறேன். நான் அங்கு வருவதானால் எனது மகளும், மருமகனும், பேரனும் அங்கு வந்து வாழ அவர் சம்மதிக்க வேண்டும்".

**க**திரேசன் அதைச் சொன்னபோது இராமலிங்கம் அதையே எதிர்பார்த்ததால் அவர், "சரி" என்றார். கஜலட்சுமி மகளையும், மருமகனையும், பேரனையும் அழைத்துக் கொண்டு இராமலிங்கத்தின் வீட்டுக்குச் சென்றாள்.

## 28. கருத்தில்லா எழுத்துக் கெடும்

**ப**ண்டிதர் பரஞ்சோதி அவ்வூர்ப் பாடசாலையில் கற்பித்தவர். பண்டிதர் பரீட்சையைச் சித்தியடைந்தாரே தவிர வேறு எதையும் கற்கவில்லை. ஆனால் பெரும் பெரும்

பிரமுகர்களுடன் எப்படியோ நட்புப் பூண்டு அவர்களைக் காரணமின்றிப் புகழ்பவர். அதனால் பிரமுகர்களின் விழாக்களில் பேசுவதற்காக அழைப்பார்கள். அண்மையில் ஒரு பிரபலமான ஒருவரின் ஐம்பதாவது பிறந்ததின விழா நடைபெற்றது. அவர் வெளிநாடுகளில் இருந்து நிதியுதவி பெற்று சமயத்தை வளர்ப்பவர். ஏழை எளியவர்களுக்கு உதவுபவர். அவரின் விழாவுக்குப் பிரதான பேச்சாளர் பண்டிதர் பரஞ்சோதி தான்.

**அ**து பிறந்ததின விழாவாக இருந்தாலும் பேச்சாளர்களுக்குச் சமயம் சம்பந்தமாகவும், பொது வாழ்வு சம்பந்தமாகவுமே தலைப்புக்கள் கொடுக்கப்பட்டிருந்தன. பண்டிதருக்குத் திருவாசகம் என்னும் தேன் என்ற தலைப்புக் கொடுக்கப்பட்டிருந்தது.

“**ப**ண்டிதர் பேசுவதற்காக மேடைக்கு வந்தபோது அவர் வாங்கிக் கொடுத்த மாலைகளைப் பலர் கொண்டு வந்து அவருக்குப் போட்டனர். ஒவ்வொருவரும் மாலை போடும் போது சபையினர் மகிழ்ச்சி ஆரவாரம் செய்தனர், “தலைவர் அவர்களே, இன்றைய விழா நாயகனான அமிர்தலிங்கன் அவர்களே, சபையோரே எனது அன்பான வணக்கம். அருள் அருவி அமிர்தலில்கத்தின் ஐம்பதாவது பிறந்ததினத்தைக் கொண்டாட வந்துள்ளோம். மக்களுக்கும், சமயத்திற்கும் சேவை செய்வதில் தன்நிகரற்று விளங்கும் அருள் அருவி அமிர்தலிங்கத்திற்கு மாலை அணிவித்துப் பொன்னாடை போர்த்திக் கௌரவித்துவிட்டுத் தான் எனது பேச்சை ஆரம்பிப்பேன். அவர் அருள்வள்ளல், அருட்பெரும் சோதி, அருளாளர் என்றெல்லாம் மக்கள் புகழ்கின்றனர். அது உண்மை. அவர் ஏழை எளிய மக்களுக்காகவும் சமயத்திற்காகவும் தினமும் ஆற்றும் தொண்டு மேலானது” என்றவாறு அருள் அவருக்கு மாலை போட்டுவிட்டு பொன்னாடை போர்த்தினார். பின் அவரது பாதங்களைத் தொட்டு வணங்கினார். அதன்பின் பேச ஆரம்பித்தார். பேச்சு முழுவதும் அமிர்தலிங்கத்தைப் புகழ்வதாகவே இருந்தது. இறுதியாக, “திருவாசகம் என்னும் தேன்” என்பது தான் எனக்குத் தந்த தலைப்பு. திருவாசகத்தைப் பற்றித் தெரியாதவர்கள் தமிழராக ஒரு போதும் இருக்க முடியாது. திருவாசகத்தை படித்தால் இனிக்கும். நினைத்தால் இனிக்கும். நினைத்தால் மெய்சிலிர்க்கும். அப்படியான திருவாசகத்தின் ஐம்பத்தொரு பகுதிகளையும் அதன் உரையையும் இன்று அமிர்தலிங்கம் வெளியிட்டு அதை மக்களுக்கு உதவி செய்வதற்காக விற்பனை செய்யவுள்ளார். அதன் மூலம் வரும் பணத்தை அவர்பின்தங்கிய ஒரு பாடசாலையின் அபிவிருத்திக்காகக் கொடுக்கவுள்ளார். நான் அந் நூலை ஐயாயிரம் ரூபா கொடுத்துப் பெற்றுள்ளேன். நீங்களும் உங்களாலான பணத்தை வழங்கி இத் தொண்டுக்கு உதவி செய்யவும். தேன் துளிகளைப் போல் சுவைக்கும் திருவாசகத்தை வீட்டில் வைத்திருந்தால் செல்வம் பெருகும். சிவனின் அருள் கிட்டும். இன்னும் பலர் பேசவிருப்பதால் எனது உரையை இத்துடன் முடித்துக் கொள்கிறேன்” என்றபோது சபையினரின் ஆரவாரம் வானைப் பிளந்தது.

**இ**ரண்டு தினங்கள் கழியப் பண்டிதர் பரஞ்சோதி சிவன் கோவில் மடத்திற்கு வந்தார். இப்போது இராமலிங்கமும் தினமும் தவறாது மடத்திற்கு வந்து கதிரேசனுடனும்,

அதிபருடனும் அங்கு தங்கியுள்ளவர்களுடனும் உரையாடுவார். அதனால் அவருக்கு நிம்மதியும் ஆறுதலும் கிடைத்தது.

"**அ**ன்று அருளருவியின் ஐம்பதாவது பிறந்ததின விழா வெகு விமர்சையாக நடந்தது. ஊரே திரண்டு வந்து அவரை வாழ்த்தியது. பேரும் புகழும் பெற்ற உயர்ந்த மனிதன் அவர்" என்றார் பரஞ்சோதி.

**யா**ரும் அபிப்பிராயம் கூறவில்லை. கதிரேசனும் அதிபரும் விழாவுக்கு வருமாறு அமிர்தலிங்கம் நேரில் வந்து அழைத்தமையால் மாலையும் அணிவித்துப் பொன்னாடையும் போர்த்திவிட்டு வந்து விட்டனர். இராமலிங்கம் விழா ஆரம்பமானது முதல் முடியும் வரை ஆறுதலாக இருந்து கேட்டவர்.

"**ப**ண்டிதர் ஐயா சொல்லுங்கோ எப்படி விழா..." பரஞ்சோதி கேட்டார்.

**ப**ண்டிதரைப் பார்த்துக் கேலியாகச் சிரித்த இராமலிங்கம் சொன்னார், "பணத்தைப் பார்த்துப் பாராது செலவு செய்தால் பணம் வாங்கியவர்கள் விழாவுக்கு வரத்தானே வேண்டும். அவர் என்ன செய்கிறார் என்று எல்லோருக்கும் தெரியும். பிறகேன் விழா. சங்ககாலத்தில் இருந்து இன்று வரை இது தான் நடைபெறுகிறது. சங்ககாலம் முதல் அரசர்கள் தமது புகழுக்காக பெரும் செலவு செய்து விழாக்களைக் கொண்டாடினர். இப்ப பணம் உள்ளவர்கள் புகழுக்காகப் பணத்தைச் செலவு செய்து பெரும் விழாக்களைக் கொண்டாடுகின்றனர். அவர்களின் விருப்பத்திற்கேற்பத்தான் விருதுகளும் வழங்கப்படுகின்றன. முன்பு அரசனைப் புகழ்ந்தவர்களும், புகழந்து செய்யுள்களைப் பாடியோரும் பெருந்தொகையாகப் பொன்னையும், மணியையும் பெற்று துதிபாடியபடி வசதியாக வாழ்ந்தனர். இப்போதும் துதிபாடுபவர்கள்தான் வசதியாக வாழ்கின்றனர்" இராமலிங்கம் மூச்சுவிட்டார்.

"**எ**னக்கு ஓர் அலுவல் இருக்கிறது" என்று பரஞ்சோதி சொல்ல இராமலிங்கம் சொன்னார், "இதையும் கேட்டுவிட்டுப் போ, "திருவாசகம் என்னும் தேன்" என்பது தான் உமக்குத்தரப்பட்ட தலைப்பு. அதைப்பற்றி ஒருவரி கூட நீர் பேசவில்லை. ஏனைய பேச்சாளர்களும் அமிர்தலிங்கத்தைப் புகழ்ந்தார்களே தவிரக் கொடுத்த தலைப்பைப் பற்றிப் பேசவில்லை. சங்ககாலம் முதல் இன்றுவரை கருத்தில்லாப் பேச்சும் எழுத்தும் தான் முதன்மை பெற்றன. ஆனால் அவையாவும் பின் நாளில் காணாமல்போய்விட்டன. அமிர்தலிங்கம் அன்று வெளியிட்ட நூலுக்குப் பல விருதுகள் கிடைக்கும். ஏனென்றால் அவர் பணக்காரன். செல்வாக்குள்ளவன். தேவையானவர்களை விழுந்தும் கும்பிடுவான்" என்று இராமலிங்கம் சொல்லிக் கொண்டிருந்தபோது பரஞ்சோதி சென்றுவிட்டார்.

“**நா**ங்கள் கதிரேசன் தாத்தாவுக்கும் அதிபருக்கும் ஒரு விழா எடுக்க வேண்டும்” என்றான் தர்மலிங்கம்.

**அ**திபர் சிரித்தார். கதிரேசன் சொன்னார், “ஒருவரது எழுத்துத் தரமானதாக இருந்தால் அதை யாரும் பாராட்டாவிட்டாலும் அது பெரும் சிறப்பைப் பெறும். தரமில்லாத எழுத்தும் பேச்சும் எழுதுபவரினதும் பேசுபவர்களினதும் செல்வம் செல்வாக்கைப் பொறுத்து அந்த நேரம் மத்தாப்புப் போல அழகாக இருந்தாலும் சில கணங்களில் மத்தாப்பு அணைவது போல அவையும் அழிந்துவிடும். விழா எடுத்துத்தான் ஒருவர் தனது சிறப்பை வெளிப்படுத்த வேண்டும் என்று இல்லை. அதிபரது புகழ் அவரது மாணவர்கள் உள்ள இடமெங்கும் பரவியுள்ளது. என்னைப்பற்றித் தெரியாத ஊரவர் யாரும் இல்லை. பிறகேன் விளம்பரம், விழா” என்றார்.

## 29. கவனமில்லாச் செயலும் கெடும்

**அ**ன்று காலை நேரத்துடன் எழுந்த செல்வராசா முகுந்தனுக்குச் சொன்னார், “எனக்கு வெகுநாட்களாகக் கமம் செய்ய வேண்டும் என்று ஆசை. தாவரங்கள் மீதுள்ள பற்றால் தான் வீட்டின் பின் பக்கத்தில் மா, பலா, தோடை, எலுமிச்சை போன்ற மரங்களை நட்டுப் பராமரித்தேன். அதிலிருந்து சுத்தமான மருந்து, இரசாயணக் கலவைகள் கலக்காத பழங்களைப் பெற்று உண்டு வருகிறோம். அதுபோல பயிர் செய்யவும் விரும்புகிறேன். நாம் விரும்பிய இன நல்ல இன நெல்லை விதைத்து அதையே உண்ண வேண்டும். காய்கறிச் செடிகளையும் நட்டு அவற்றிலிருந்து தூய்மையான மரக்கறி வகைகளைப் பெற வேண்டும் என்றும் விரும்புகிறேன். அதனால் சரவணனுக்குக் கொடுத்த வயல் நிலத்தில் ஒரு பத்து ஏக்கரை வாங்கி நாம் விதைப்போம்” என்றார்.

**மு**குந்தனுக்கு அது விருப்பமில்லை. இருப்பினும் எதைச் சொன்னாலும் அவர் கேட்கமாட்டார் என்பது அவனுக்குத் தெரியும். அவர் காலையில் வீட்டை விட்டுப் புறப்பட்டுச் சென்றால் நள்ளிரவிலும் வீடு திரும்ப மாட்டார். அதுபோலத்தான் முகுந்தனும் வாழ்ந்து வந்தவன். அதனால் தான் அவன் ஆரம்பத்தில் பகீரதியைப் பெரிதாக மதிக்காது பணம் சம்பாதிப்பதிலேயே முழு மூச்சாக ஈடுபட்டிருந்தான். அவன் ஒரு பணம் அச்சடிக்கும் இயந்திரம் போல் இருந்தமையால், அவளது பெண்மை அவனைக் கவரவில்லை. அதன்பின் பகீரதியினது தோழியின் சொற்படி அவள் நடந்து கொண்டமையால் இப்போது அவளைப் பிரிந்திருப்பது நரகலோகத்தில் இருப்பதைப் போல அவனுக்கு இருந்தது.

**அ**வளது இனிமையான பேச்சை விடப் புதுமையான செயல்கள் தான் அவனுக்கு மோகத்தைக் கொடுத்தன. அதனால் சரவணனிடம் சென்று சொன்னான், “மச்சான், மூன்று தலைமுறைக்குத் தேவையான சொத்தை அப்பா தேடி வைத்திருக்கிறார். இப்போது அவருக்கு

நெல் விதைக்க வேண்டும் என்ற ஆசை வந்துவிட்டது. நாம் உனக்குத் தந்த வயலில் பத்து ஏக்கரைப் பெற்று நெல் விதைக்குமாறு வற்புறுத்துகிறார். இப்பொழுது நான் செய்யும் தொழில்களையே சரியாக நிர்வகிக்க முடியவில்லை. இருபது மைல்களுக்கு அப்பால் உள்ள திருவாரூக்கோட்டை என்ற பட்டணத்தில் உள்ள பலபோடி ரூபா மதிப்புள்ள பிடைவைக் கடைக்குச் செல்லவே மனம் இல்லாமல் இருக்கிறது. அந்த நிலையில் என்னால் நெல்விதைக்க முடியுமா? ஒரு செயலைத் தொடங்கினால் அதை நல்ல முறையில் செய்தல் வேண்டும். ஈர உழவு இரண்டூரில் வெள்ளாமை என்பன தனக்குப் பகையானவை என்று முன்னோர் கூறியுள்ளனர். பல பட்டணங்களில் வியாபாரத் தலங்கள் இருப்பதால் என்னால் முன்புபோல வேலை செய்ய முடியவில்லை" என்று முகுந்தன் கூறிக்கொண்டிருக்கையில் சரவணன் சொன்னான், "உண்மை தான். என்னாலும் இரண்டு தொழில்களைச் செய்வது கஷ்டமாக உள்ளது. நீ எப்படிப் பல தொழில்களைச் செய்வாய்?. இப்போ எந்நேரமும் பகீரதியுடன் கழித்த நேரங்கள்தான் மனதில் தோன்றும் இல்லையா…?"

"**ஒ**ரு தொழிலைத் தொடங்கினால் திட்டமிட்டுக் கவனமாகச் செய்ய வேண்டும். எப்படித்தான் திட்டமிட்டாலும் கவனக் குறைவாக இருந்தால் அச் செயலால் பாரிய நட்டமேற்படும். தொடங்கப்பட்டு கைவிடப்படும் தொழிலும் நீங்காத பகையும் அணைக்காமல் விடப்பட்ட நெருப்புப் போல இருந்து பின் பெரும் நட்டத்தை விளைவிக்கும் என்று படித்திருக்கிறேன். அதனால் நீ முழு வயலையும் செய். அறுவடையின் போது நெல்லைத் தா. நான் பணம் தருகிறேன்" என்றான் முகுந்தன். அதற்குச் சரவணன் ஒப்புக்கொண்டான்.

**அ**தைக்கேட்ட பகீரதிக்கு மகிழ்ச்சியாக இருந்தது, "சத்தமான மரக்கறிக் கன்றுகளை நான் சாடியில் வைத்து வயலில் நட்ட மரக்கறி வகை என்று கூறி மாமாவைச் சமாளிக்கிறேன்" என்றாள் பகீரதி.

## 30. துடிப்பில்லத இளமை கெடும்

**ப**கீரதியின் நெருங்கிய தோழியான கல்பனா, அன்று கணவனுடனும் மூன்று பிள்ளைகளுடனும் பகீரதியின் வீட்டுக்கு வந்தாள். அப்போது முகுந்தன் வீட்டில் இருக்கவில்லை. கல்பனாவின் மூத்த மகன் கஜமுகன் முற்றத்தில் நின்ற மாமரத்தில் ஏறி நின்றான். மகள் வித்தியா சகோதரனுடன் மரத்தில் இருக்க விரும்பி ஏறுவதற்கு முயற்சித்துக் கொண்டிருந்தாள். அதைப் பார்த்துப் பரபரத்த பகீரதி பயத்துடன் மகளுக்கு அருகில் இருந்தாள்.

"**உ**ன்னை மாதிரித்தான் உனது மகளும்…" என்று பகீரதி கூறச் சிரித்த கல்பனா சொன்னாள், "அந்தந்த வயதில் வயதிற்கேற்ற துடிப்பில்லாவிட்டால் வாழ்க்கை நரகமாகிவிடும்.

மகனுக்கு ஏழுவயது. வீட்டிலும் மரங்களில் ஏறுவான். யன்னலில் ஏறுவான். இவரின் மோட்டார்சைக்கிலில் ஏறுவான். அவனை அன்பாகக் கண்டிப்பன். அவன் அதை ஏற்றுக் கொள்வான். காலையில் வந்தவுடன், 'மரத்தில் ஏறவேண்டும்' என்று கேட்டான். அதனால் தான் நான் பாதுகாப்புக்காக வந்தேன். நான் செய்வது சரியென்று சொல்லவில்லை. ஆசைப்படும் பிள்ளையின் விருப்பத்தை நிபந்தனையுடன் பூர்த்தி செய்தல் வேண்டும், "ஒருமுறை ஏறிவிட்டு இறங்கு" என்று சொல்லி அனுமதி கொடுத்தேன். அவன் ஏறிப்பார்த்துவிட்டு இறங்கிவிட்டான். நாம் கண்டிப்புடன் மறுத்தால் நாம் காணாதவேளையில் ஏறி விழுந்தாலும் விழுந்துவிடுவான். அந்தந்த வயதில் ஏற்படும் துடிப்பை அடக்கக் கூடாது".

**ப**கீரதி சிரித்தாளே தவிரப் பேசவில்லை. ஒரு வாலிபனுக்கு அழகான பெண்ணைக் கண்டால் ஒரு மோகமான துடிப்பு வரும். அதைச் சிலர் சிரித்து விடகமாகப் பேசித் தீர்த்துக் கொள்வர். சிலர் செயலில் காட்டுவர். புளியங்கொட்டை, சிறுகற்களை எடுத்து பெண்மீது வீசுவர். உனக்கு எத்தனைபேர் வீசியிருப்பர். அருணன் உன்னையே வட்டமிட்டுக் கொண்டு திரிந்தவன். நீ அவனைக் கண்டால் மறைந்து கொள்வாய். அவன் ஏதாவது சொன்னால் அழுவாய். நான் அப்படியல்ல சண்டைக்குப் போவன், செருப்பைக் கழற்றிக் காட்டுவன், அதிபருக்குச் சொல்வேன் என மிரட்டுவன்".

"**எ**ன்னால் இதெல்லாம் செய்ய முடியாது அவர்களை நினைத்தாலே பயம்" என்றாள் பகீரதி.

"**ப**ள்ளிப் பருவத்தில் பயப்படக்கூடாது. பள்ளிப் பருவத்தில் துடிப்பாக இருந்ததால் தான் நான் சம்பந்தனைத் திருமணம் செய்தேன். இருவரும் காதலித்தமையால் மனதில் எழுந்த துடிப்புகள் யாவும் அடங்கிவிட்டன. அதனால் வெட்கம் மறைந்துவிட்டது. திருமணமான பின்பு உனது மனதில், உடலில் அந்த நேரத்திற்குரிய துடிப்பு இல்லாததால் தான் முகுந்தன் உனது நினைப்பே இல்லாமல் பணம்தேடும் முயற்சியில் முழுமையாக ஈடுபட்டிருந்தான். எனது கணவனும் வர்த்தகத்தான். அவன் திருமணமாகி ஒருமாதம் வரை தொழிலுக்குப் போகவில்லை. பின் நான் அவர் மீது பெருங்கோபம் கொள்வதுபோல நடித்து வேலைத்தலத்திற்கு அனுப்பினேன். பெண்கள் ஒவ்வொரு வேளையிலும் சந்தர்ப்பத்திற்கேற்றவாறு துடிப்புடன் நடந்து கொள்ள வேண்டும். இப்போது அப்படி நீ நடப்பதால் உனது கணவன் உனது கைக்குள்ளேயே இருக்கிறார்".

**ப**கீரதிக்கு வெட்கமாக இருந்தது. அவள் நாணிக்கோணினாள். அதைப் பார்த்துச் சிரித்த கல்பனா சொன்னாள், "ரதி, நாம் ஒவ்வொருவர் முன்பும் ஒவ்வொருவராக நடந்து கொள்ள வேண்டும். தாத்தாவுடனும் பாட்டியுடனும் நடப்பது போலத் தாய், தந்தையருடன் நடக்க முடியாது. அதுபோலச் சகோதரர்களுடனும் இனத்தவர்களுடனும் நடக்க முடியாது".

**ப**கீரதி உதட்டைப் பிரிக்காது சிரித்தாள். அவள் சில விடயங்களைத் தனது விருப்புக்குரியவர்களுடன் பச்சையாகவே கதைப்பாள். ஆரம்பத்தில் அவள் சொன்னவற்றை நினைக்க அவளுக்கு இப்போதும் வெட்கமாக இருந்தது.

"**ப**யம், அச்சம், தாமதம் என்பன உறவைப் பிரிப்பவையாகும். திருமணமான பெண் தன்மை முழுமையாகக் கணவனிடத்தில் ஒப்படைக்க வேண்டும். அதற்கு உடலில் துடிப்பேற்பட வேண்டும். துடிப்பில்லாத உடல் மரக்கட்டைக்குச் சமமானது. சில விடயங்களை ஆண் கேட்க கூச்சப்படுவான், அல்லது அஞ்சுவான். அவரின் மன நோக்கத்தை அவரது முகமும் செயல்களும், பேச்சும் எடுத்துக்காட்டும். அதைப் பெண் புரிந்து கொண்டால் தான் இன்பம் தோன்றும். அதுபோலப் பெண் வெளிப்படுத்தாத உணர்வுகளை ஆண் உணர்ந்து கொள்ள வேண்டும். இதெல்லாம் எனக்கு எப்படித் தெரியும் என்று யோசிக்கிறாயா…?" என்று கூறிவிட்டு நிறுத்திய கல்பனா சொன்னாள்,.

"**இ**தற்கெல்லாம் தேடியலையத் தேவையில்லை. தமிழ் இலக்கியம், சமயபாட நூல்களை எடுத்து வாசித்தால் இவையாவும் விபரமாக எழுதப்பட்டுள்ளமை தெரியவரும். திருமந்திரத்தில் சில பாடல்களில் கரு உற்பத்தி பற்றித் திருமூலர் கூறுகிறார். ஆசாரக் கோவை, இனியவை நாற்பது போன்ற இலக்கியங்கள் காமத்தை சாதாரணமாகச் சொல்லியுள்ளன. கோவில் கோபுரச் சிற்பங்களைப் பார் புராணங்களை இதிகாசங்களை வாசித்துப் பார் வெளிப்படையாகக் கூறப்பட்டுள்ளன. இப்போ உன்னைப் பார்த்த பின் சகலவிதமான துடிப்புக்களும் உனது உடலில் இருந்து வெளிப்பட்டு உன்னை மகிழ்ச்சிக்குட்படுத்தியது தெரிகிறது" என்று சிரித்தாள் கல்பனா.

## 31. பொய்யுரைத்தால் உறவு கெடும்

**செ**ல்வராசா தனது மகனுக்குச் சொன்னார், "இப்போது நீ முற்றாக மாறிவிட்டாய். தொழிலில் பெரிதாக அக்கறை காட்டுவதில்லை. நாலு ஊர்களில் எமது வியாபாரம் ஓகோ என்று நடைபெறுகிறது. ஆனால் நீ அவற்றை இப்போது அக்கறையுடன் சென்று பார்வையிடுவதில்லை. முன்பு என்றால் தமிழ்நாட்டிற்கு உற்சாகமாகச் சென்று விதம் விதமான புடைவை வகைகளை வாங்கி வருவாய். இப்போது உலகநாதனை அனுப்பி வாங்குகிறாய். இந்த உலகில் நேர்மையானவர் என்று சொல்ல யாரும் இல்லை. உலகநாதன் நல்ல புத்திசாலி அவன் மிக மிக இனிமையாகவும் தந்திரமாகவும் மொத்த வியாபாரிகளுடன் பேசி தனது லாபத்தைப் பெருக்கிக் கொள்கிறான். மூன்று மாதங்களுக்கு முன்பு சென்று பத்தாயிரம் ரூபாப்படி ஐந்நூறு காஞ்சிபுரம் சேலைகள் வாங்கி வந்தாய். அவன் அதே இனச் சேலையை பதினோராயிரத்து ஐந்நூறு ரூபாவுக்கு வாங்கி வந்துள்ளான். ஒரு சேலைக்கு ஐந்நூறு ரூபாவைத்தாலும் ஐந்து இலட்ச ரூபா இலாபமாகப் பெற்றிருப்பான்…" என்றபோது.

**மு**குந்தன் சொன்னான், "நீங்கள் ஒரு வியாபாரி. பொருட்களின் விலை நாளுக்கு நாள் மாறும். மொத்த வியாபாரியான செல்லையாபிள்ளைக் கவுண்டரோடு ரெலிபோனில் நான் விலைபற்றிக் கதைத்தனான். கவுண்டரிடம் இருபது வருடங்களாகக் கொள்வனவு செய்கிறோம். அவர் விசுவாசமானவர் நம்பிக்கைக்குரியவர்.

"**வி**யாபாரத்தில் நம்பிக்கைக்கும் விசுவாசத்துக்கும் இடமில்லை. உலகநாதன் சாதுரியமாகப் பேசி தனது எண்ணத்தை நிறைவேற்றுவான்".

**எ**தைச் சொன்னாலும் தந்தை ஏற்கமாட்டார் என்று அவனுக்குத் தெரியும். அதனால் அவன், "அப்பா இப்போ உடல்நலமில்லாதிருக்கிறது டாக்டரிடம் மருந்திற்குப் போனேன் அவர் "ஓய்வு எடுக்குமாறு" கூறுகிறார் கொஞ்ச நாட்களுக்கு நீங்கள் வியாபாரத்தைக் கவனித்துக் கொள்ளுங்கள்" என்றான்.

**செ**ல்வராசாவிற்கு அளவுக்கதிகமான கோபம் வந்தது. நீ இப்போது பொய்சொல்லவும் ஆரம்பித்து விட்டாய். உனக்கு எந்த நோயும் இல்லை. அத்துடன் சரவணனுக்குக் கொடுத்த வயலை நீ திரும்பப் பெற்று விதைக்கவில்லை. அவனிடம் தேவையானவளவு நெல்லை பணம் கொடுத்து வாங்கியுள்ளாய். அதுதான் மெய்".

**மு**குந்தன் எதுவும் பேசாததால் செல்வராசா சொன்னார், "தேகத்தில் வலு உள்ளபோது தேடக்கூடிய பொருளை முயற்சித்துத் தேட வேண்டும். இப்போ உனது மனம் வேறு பலவற்றில் மோகங்கொண்டுள்ளது. அதனால் நீ பொய் சொல்லப் பழகிவிட்டாய். அதனால் நீ இனி என்னுடன் வியாபாரநிலையங்களுக்கு வரவேண்டாம். எல்லாவற்றையும் நான் பார்த்துக் கொள்கிறேன். பெத்த கடனுக்கு உனக்கும் உன்னுடைய மனைவிக்கும், பிள்ளைக்கும் சோறு போடுகிறேன். இனிமேல் என்னுடன் நீ கதைக்க வேண்டாம்" என்று கூறிவிட்டுச் சென்றுவிட்டார்.

**மு**குந்தனுக்கு வேதனையாக இருந்தது. வேதனையுடன் சென்று சரவணனுக்குச் சொன்னான், "மச்சான், உனது தந்தையின் குணம் உனக்குத் தெரியாதா? தான் பிடித்த முயலுக்கு மூன்று கால்கள் என்பார். தான் பிடித்ததை விடவும் மாட்டார். அவர் நேற்று என்னிடம் வந்து, "நீ, முகுந்தனுக்கு புசல் என்ன விலைப்படி நெல்லை விற்றாய்" என்று கேட்டார். நான், "அவன் பத்து ஏக்கர் செய்தவன். அவனே விதைத்தவன். பயிருக்குரியவற்றையெல்லாம் செய்தவன். அறுவடையும் அவன்தான் செய்தவன். எவ்வளவு புசல் நெல் விளைந்தது என்று எனக்குத் தெரியாது" என்றேன்.

"**அ**வனோடு சேர்ந்து நீயும் பொய்யும் புரட்டும் பேசத்தொடங்கிவிட்டாய். நீ சொன்னது உண்மை என்று உனது மகன் மீது சத்தியம் செய்" என்றார்.

“**எ**ப்படிப் பொய்ச் சத்தியம் செய்வது. ஒரே ஒரு மகன் பொய்ச்சத்தியம் செய்தால் அவனுக்கு ஏதாவது நேர்ந்து விடுமோ எனப் பயந்து உண்மையைக் கூறிவிட்டேன். அவர் எனக்கு அடியாத குறை. என்னை வீட்டுப்பக்கம் வரக்கூடாது என்று சொன்னார்”.

“**அ**வர் தான் பிடித்ததை விடமாட்டார். திருமணம் செய்து ஒரு வருடம். ஒரு பிள்ளையும் இருக்கு. எப்படி மனைவியையும் பிள்ளையையும் பிரிந்து தமிழ் நாட்டிற்குச் செல்வது. அங்கு சென்றால் இரண்டு மாதங்களாவது தங்கிநின்று புடைவைகளை வாங்க வேண்டும். இரண்டு மாதங்கள் எப்படிப் பிரிந்திருப்பது” கலங்கினான் முகுந்தன்.

“**அ**வருக்கு சொல்லிப் புரியவைக்க முடியாது. அத்துடன் அவர் ஒரு முடிவை எடுத்தால் அதை மாற்றமாட்டாரென்று உனக்குத் தெரியாதா”? சரவணன் கேட்டான்.

“**எ**ன்ன செய்வதென்று எனக்குப் புரியவில்லை. இனிமேல் வியாபாரத்தலங்களுக்கும் போக முடியாது. போனால் பலர் இருந்தாலும் அவர்களை மதியாது என்னைக் கண்டபடி ஏசுவார்” என்றான் முகுந்தன்.

“**ம**ன்னிப்புக் கேட்டு அழு மனைவியையும் பிள்ளையையும் விட்டுப் பிரியக் கஷ்டமாக இருக்கிறது என்று சொல்”.

**மு**குந்தன் சிரித்தான் உனது திருமணத்திற்கே அவர் வரவில்லை. பிடைவை வாங்கத் தமிழ்நாட்டுக்குச் சென்றுவிட்டார். தமிழ்நாட்டிற்குச் செல்லுமுன் உன்னை வாழ்த்தி இருபத்தையாயிரம் ரூபா தந்தவர். அப்படியானவர் இவற்றையெல்லாம் கேட்பாரா. பொய் சொன்னது தான் அவருக்குக் கோபம். வேறு வழியில்லாமல் தானே நான் பொய் சொன்னனான்”.

“**அ**தைவிடு மாமி என்ன சொன்னவா…?”

“**கொ**ப்பற்ரை குணம் உனக்குத் தெரியும் தானே. அவருக்குப் பேரன் மீது பாசம் அதிகம். காலையில் பேரனைத் தூக்கி முத்தமிட்டுவிட்டுச் சென்றால் செய்யும் காரியங்கள் யாவும் சிறப்பாக முடியும் என்று தினமும் சொல்வார். கொஞ்ச நாளைக்கு ரதியையும் பிள்ளையையும் தாய்வீட்டுக்கனுப்பு. நீயும் அங்கே போயிரு. அவர்கள் வீடு தந்தவர்கள். அது பாழடைகிறது என்று ரதியின் பெற்றோர் அடிக்கடி கவலைப்படுவார்கள். நீங்கள் அங்கு சென்றால் எல்லாம் சரிவரும்” என்று சொன்னவா. நாளைக்கு போகப் போகிறேன்” என்றான் முகுந்தன்.

**ஒ**ருவாரம் கழிந்தது அதிகாலையில் எழுந்து செல்லும் செல்வராசாவால் அன்று எழுந்து செல்ல முடியவில்லை. ஒருவாரமாகப் பேரனைக் காணாமையால் அவரது மனம் சோர்ந்து

விட்டது. வீட்டுக்கு வரவோர் போவோரெல்லாம் பேரன் செல்வராசாவைப் போலவே இருக்கிறான் என்று சொல்லிவிட்டுச் செல்வர். அதனால் மனம் அவனைக் காணவேண்டும் என்று பரபரத்தது. அதனால் அவர் புறப்பட்டுச் சிவன் கோவிலுக்கு வந்தார்.

**சி**வன் கோவிலில் அன்று ஏராளமான மக்கள் கூடிநின்றனர். மக்கள் கூட்டமாக நிற்பதைக் கண்ட செல்வராசா உள்ளே சென்றார். சுமார் எண்பது வயது மதிக்கத்தக்க சிவனடியார் ஒருவர் கதிரேசனுடனும் அதிபருடனும் கதைத்துக் கொண்டிருந்தார். அவர் செல்வராசாவைக் கண்டதும் சொன்னார், "சாப்பாட்டைக் கூடச் சுவைத்து உண்ணாமல் பலர் பணம் பணம் என்று அலைகின்றனர். அவர்கள் பிணமானால் எதுவும் கூடச்செல்லாது. அதனால் இறைவனை வேண்டுங்கள். நீங்கள் விரும்பிய யாவும் கிடைக்கும்".

"**மா**மா" என்று யாரோ அழைக்கும் சத்தம் கேட்டது. திரும்பிப் பார்த்தார். பகீரதி தனது குழந்தையுடன் கோவிலுக்கு வந்த சிவனடியாரைப் பார்க்க வந்திருந்தாள். நடந்தவை யாவற்றையும் மறந்து அவர் மருமகளின் அருகே சென்று பேரனை வாங்கி முத்தமிட்டார். அவரின் உடலில் இருந்த களைப்பு அகன்று விட்டது. "ஒருவாரமாக உன்னைக் காணாது தவித்துப் போனேன். வா வீட்டுக்குச் செல்வோம்" என்று கூறிவிட்டு நடந்தார். முகுந்தனும் பகீரதியும் அவரின் பின்னால் சென்றனர்.

## 32. பொய்யான அழகும் கெடும்

**ச**ரவணின் சகோதரன் ஐங்கரன். அவனுக்கு முப்பத்தைந்து வயது பொறியியலாளராகக் கடமை புரிகிறான். அவனுக்குத் திருமணம் செய்ய விருப்பமில்லை. தாய் தன்னால் முடிந்தளவு வற்புறுத்திப் பார்ர்த்தாள். அவன் சம்மதிக்கவில்லை. அதனால் அவள் உணவை வெறுத்தாள். இரண்டு நாட்களாக அவள் உணவு உண்ணவில்லை. தனது மகன் தனக்கு உறுதியான பதிலைச் சொன்னால் தான் சாப்பிடுவேன் என்று அடம்பிடித்தாள். எல்லோரும் வற்புறுத்தியும் அவள் உணவை உண்ணச் சம்மதிக்கவில்லை.

**க**திரேசனும் பொன்னுத்துரை அதிபரும் ஐங்கரனது வீட்டுக்கு வந்தனர். ஐங்கரனது தாய் காமாட்சி எழுந்து நடமாட முடியாது படுத்திருந்தாள்.

"**அ**ம்மா, ஐங்கரனுக்கு திருமணம் செய்ய விருப்பமில்லை. அதற்கான காரணத்தையும் சொல்கிறானில்லை. சொன்னாலாவது தீர்வு காணலாம். அவன் படித்தவன் உயர்ந்த உத்தியோகத்தில் இருப்பவன் அதனால் அவனுக்கு எப்படி ஆலோசனை கூற முடியும். ஒருவரை வற்புறுத்தியோ, தெண்டித்தோ சம்மதிக்க வைக்க முடியாது. திருமணம் ஆயிரங்காலத்துப் பயிர். அவன் வேண்டாம் என்று சொல்லும் போது வற்புறுத்தித்

திருமணத்தைச் செய்து வைத்தால் அவன் வாழ்வான் என்று எப்படிச் சொல்வது?. நாகநாதன் சிவனடியாராக இருந்த தனது மகன் தான் திருமணம் செய்யாது சிவனுக்குச் சேவை செய்ய விரும்புகிறேன் என்று கூறியவன். அதனால் நாகநாதன் தற்கொலை செய்ய முயற்சித்தான். அதன்பின் ஊரவரது ஆலோசனைக்கேற்ப அவனுக்கு ஊரவர் திருமணம் செய்து வைத்தனர். இரவு படுக்கைக்குப் போனவன். இன்றுவரை அவனை யாரும் காணவில்லை. அவன் கதிர்காமத்தில் இருக்கிறான் என்று சிலரும், காசியில் இருக்கிறான் என்று சிலரும் பேசிக்கொள்கிறார்கள். அந்தப் பெண் பாவம். அப்பெண்ணின் தாய் சிவன்கோவிலுக்குத் தினமும் வந்து சிலரை மண் அள்ளிப்போட்டுத் திட்டுகிறாள். இது தெரிந்துமா நீ உண்ணாவிரதம் இருக்கிறாய்" என்றார் கதிரேசன்.

**அ**ன்று காலை ஐங்கரன் தாயிடம் வந்து, "அம்மா, எனக்குச் சிங்கப்பூரில் வேலை கிடைத்துள்ளது. இன்று மாலை புறப்படுகிறேன். சாப்பிடுங்கோ..." என்று கூறிவிட்டுச் சென்றுவிட்டான்.

**ச**ரவணன் வந்து தாய்க்குச் சொன்னான், "அம்மா, உனது பிடிவாதம் தான் தம்பிக்குள்ளது. அவன் உன்னைச் சாப்பிடச்சொல்லி விட்டுச் சிங்கப்பூருக்குச் சென்றுவிட்டான். இனி எப்போது வருவான் என்று சொல்ல முடியாது. அதனால் சாப்பிடுவது தான் புத்திசாலித்தனம்".

"**கொ**ம்மாவாவது உண்ணா நோன்பு இருப்பதாவது. சிவன்கோவில் கொடியேறினால் விரதம் பிடிப்பா. சாப்பிட முன்னம் இரண்டுமுறைய பால் குடிப்பா. இது ஐங்கரனுக்குத் தெரியும். அதனால் தான் ஐங்கரன் கவலைப்படாமல் சிங்கப்பூருக்குச் சென்றவன். தாயைப் போல பிள்ளை, நூலைப்போல சேலை என்று பெரியவர்கள் சும்மாவா கூறினர்" என்றார் தந்தை.

"**ஆ**று மாதங்களின் பின் ஊருக்கு வந்த ஐங்கரன் மாலதிக்குச் சொன்னான், "அண்ணி, நான் எங்கு சென்றாலும் திருமணம் செய், திருமணம் செய் என்று வற்புறுத்துகின்றனர். நான் உங்களை எனது தாயைப்போலத் தான் மதிக்கிறேன். அதனால் என்னுடைய வாழ்வில் நடந்தவற்றை உங்களுக்குச் சொல்கிறேன். அதை யாருக்கும் கூறாதீர்கள்" என்று கூறிய ஐங்கரனின் கண்கள் கலங்கின.

**சி**றிது நேரம் கழித்துச் சொன்னான், "படிக்கும் போது நான் ஒரு பெண்ணை விரும்பினேன். அவள் என்மீது தன் உயிரை வைத்திருப்பவள் போல நடந்தாள். அது தெரியாத நாம் ஊரவர்களுக்குத் தெரியாது படங்கள் பார்த்தோம். பல இடங்களுக்குச் சென்றோம். அப்போது வெளிநாட்டில் இருந்து அவளது இனத்தவன் ஒருவன் வந்தான். அவள் அவனை விரும்பி அவனுடன் சென்றுவிட்டாள். பின்பு தான் அறிந்தேன் அவள் என்னைக் காதலிக்கும்போதே அவனுடன் கடிதத்தொடர்பு வைத்திருந்தவள் என்று. அதனால் தான் நான் திருமணம் செய்ய

விரும்பவில்லை. சென்ற மாதம் அவளும் கணவனும் பிள்ளைகளும் சிங்கப்பூருக்குச் சுற்றுலாவுக்கு வந்தனர். அவள் பூரிப்புடனும் மகிழ்வுடனும் உலாவுவதைக் கண்டேன். அவள் அவ்வாறு இன்பமாக வாழும் போது நான் ஏன் துன்பப்படுவான் என்று நினைத்துத் தான் திருமணத்திற்குச் சம்மதிக்கிறேன்".

**மா**லதிக்கு மிக்க மகிழ்ச்சியாக இருந்தது, "எனது ஒன்றுவிட்ட சகோதரி ஒருத்தி ஆசிரியையாக இருக்கிறாள் அவளுக்கு உங்களுடைய சாதகத்தைப் பார்த்தபோது நல்ல பொருத்தம் என்று சிவன்கோவில் குருக்கள் சொன்னவர்" என்று மாலதி கூறும்போது ஐங்கரன் சொன்னான், "எனக்குப் பணம், பொருள், அழகு என்பன முக்கியமானதல்ல நல்ல குணமுள்ள பெண்ணாக இருக்க வேண்டும். உடல் அழகு பொய்யானது. மிகவும் அவலட்சணமான பெண்ணும் ஆடை அலங்காரங்களால் பேரழகியாக்கப்படுகிறாள். நான் காதலித்த பெண்ணுக்கு மூன்று சகோதரர்கள் வெளிநாட்டில் இருக்கின்றனர். அவள் பெரும் அழகி அல்ல. அழகுசாதனப் பொருட்கள் அவளை அழகியாக்கின".

"**நீ**ங்கள் என்ன சொல்ல விரும்புகிறீர்கள்" என்று கேட்டாள் மாலதி.

"**க**டவுள் படைத்த அழகு போதும் நான் பெண்பார்க்கச் சொல்லும் போது சாதாரணமான உடையில் தனது இயல்பான அழகுடன் இருந்தால் போதும். உடலை விட மனம் அழகாக இருத்தல் வேண்டும்" என்றான் ஐங்கரன்.

**அ**ன்று வெள்ளிக்கிழமை கார்த்தியாயினி சிவன்கோவிலுக்கு வந்திருந்தாள். சாதாரணமான நூற்சேலை ஒன்றைக்கட்டியிருந்தால். நெற்றியில் நீறணிந்திருந்தால். காதில் ஒரு தோடு. கழுத்தில் ஒரு சங்கிலி. கையில் ஒரு சோடி காப்பு. இருவரும் ஒருவரை ஒருவர் இதற்கு முன் கண்டதில்லை. அத்துடன் இருவரும் அன்று கோவிலுக்கு வருவார்களென யாரும் எண்ணவில்லை.

**அ**ப்போது அங்கே வந்த சரவணன் இருவரையும் கண்டுவிட்டு ஆச்சரியத்துடன் வந்து ஐங்கரனுக்குச் சொன்னான், "தம்பி, இது தான் மாலதி சொன்ன பெண். உனக்குப் பிடித்தால் சொல்".

**ஏ**ற்கனவே கார்த்திகாயினியின் உருவம் அவனின் மனதில் நிழலாகப் பதிந்திருந்ததால் அவளைச் சில கணம் அவன் உற்றுப் பார்த்தான். பின், "எனக்கு விருப்பம் அண்ணா" என்றான்.

**தி**ருமணம் முடிந்த பின்பும் இயற்கையான, இயல்பான அழகுடன் கார்த்திகாயினி சிங்கப்பூருக்குப் பயணமானாள்.

## 33. அழகில்லா ஆசை கெடும்

**மு**குந்தனுடன் ஒன்றாகக் கற்றவன் சிவரூபன். பாடசாலையில் கற்கும் போது கல்வியில் அக்கறை காட்டாதவன். இரவு நண்பர்களுடன் சேர்ந்து படிக்கப் போகிறேன் என்று பெற்றாருக்குச் சொல்லி விட்டு, நண்பர்களுடன் சேர்ந்து படத்திற்குச் சென்று விடுவான். பிரபல நட்சத்திரங்களின் படங்கள் திரைக்கு வந்தால் முதல்நாள், முதல்காட்சியை அவனும் நண்பர்களும் சென்று பார்த்து விடுவார்கள். அண்மையில் ஒரு பிரபலமான திரைப்படம் திரைக்கு வந்தபோது மறுநாள் காலை பத்துமுப்பது மணிக் காட்சிக்கு முதல் நாள் இரவு எட்டு மணிக்கு அவனும் நண்பர்களும் சென்றுவிட்டனர். மறுநாள் அவன் பாடசாலைக்குச் செல்லாததால் அதிபர் அவனைப் பாடசாலையில் சேர்ப்பதாக இருந்தால் அவனது தந்தையை அழைத்து வருமாறு கூறினர். அந்த விஷயம் தந்தைக்குத் தெரிந்தால் தண்டிப்பார் என்ற பயத்தில் அவன் இன்னொருவரைத் தந்தை என்று அழைத்துச் சென்றவன்.

**இ**ப்பொழுது சிவரூபனுக்கு இருபத்தேழு வயது. முகுந்தன் பெரும் முதலாளியாக இருந்தமையால் பல பணக்கார இடங்களில் இருந்து திருமணம் பேசி வந்தனர். சிவரூபன் ஓ எல் சித்தியடையவில்லை. திருமணம் செய்ய முன் மதிப்புக்குறைவான வேலைகளைச் செய்தால் தன்னைத் திருமணம் செய்ய யாரும் விரும்பமாட்டார்கள் என்பதற்காக அவன் எந்தத் தொழிலையும் செய்யவில்லை. தந்தை பெரும் விவசாயி. விவசாயத்தை நல்ல முறையில் செய்தாலாவது அவனுக்குத் திருமணம் பேசிச் செய்யலாமென்று தந்தை நினைத்துத் தன்னுடன் தோட்ட வேலைக்கு வருமாறு வற்புறுத்தினால் அவன் சாட்டுப்போக்குச் சொல்லி மறுத்துவிடுவான்.

**அ**வனது மாமனின் மகள் சதுர்த்திகா, நல்ல அழகி, பட்டதாரி. வேலைகளுக்கு விண்ணப்பங்களை அனுப்பிவிட்டுக் காத்திருக்கிறாள். அவளது தந்தையும் தாயும் பட்டதாரி ஆசிரியர்கள். அவளுக்கு மூன்று மூத்த சகோதரர்கள் இருக்கிறார்கள். அவர்கள் நல்ல உத்தியோகத்தில் இருக்கின்றனர். அவளுக்குத் தங்கை ஒருத்தி இருக்கிறாள். அவள் ஏ. எல் படிக்கிறாள்.

**சி**வரூபன் சதுர்த்திகாவைக் காதலித்தான். அவளில்லாவிட்டால் தற்கொலை செய்வேன் என்று நண்பர்களுக்கு அடிக்கடி சிவரூபன் சொல்வான் அதைக்கேட்டுச் சிலர் சிரிப்பார்கள். சிலர் உற்சாகப்படுத்துவார்கள்.

**ச**துர்த்திகாவுக்கு முகாமைத்துவ உதவியாளர் பதவி கிடைத்தது. அதைத் தனது நண்பியான தாட்சாயனிக்குச் சொல்ல அவர்களது வீட்டிற்கு இனிப்புடன் சென்றாள் சதுர்த்திகா. சதுர்த்திகா அழகானவள் மட்டுமல்ல. வசதியானவள். கற்றவள். பண்பானவள்.

தாட்சாயனியுடன் சதுர்த்திகா நெருங்கிப் பழகுவதால் இரு வீட்டுகாரரும் இனத்தவர்கள் போல அளவில்லாத அன்புடன் பழகிவந்தனர்.

**தா**ட்சாயனியின் மூத்த சகோதரன் ஈஸ்வரநாதன். சதுர்த்திகா அவர்களது வீட்டுக்கு வந்து மகிழ்வுடன் உறவாடும்போது அவனும் அவளுடன் மகிழ்வுடன் உரையாடுவான். அந்த உறவு காதலாக மலர்ந்து விட்டது. அன்று சதுர்த்திகா இனிப்புடன் தாட்சாயனியின் வீட்டுக்கு வந்தபோது சிங்கப்பூரில் பொறியியலாளராகப் பணியாற்றும் ஈஸ்வரநாதன் வீட்டிற்கு வந்திருந்தான்.

**ச**துர்த்திகா அவனை அங்கு எதிர்பாராததால் அதிர்ந்து போனாள். அவன் வருவதாக இருந்தால் வீட்டாருக்கு அறிவிப்பான். அவன் அறிவித்தால் தாட்சாயனி கட்டாயம் அவளுக்குச் சொல்வாள். தனது சகோதரன் அவளைத் திருமணம் செய்வதை தாட்சாயனி மிகவும் விரும்பி வரவேற்றிருந்தாள். அவள் மூலம் ஈஸ்வரநாதனின் பெற்றோருக்கும் அது தெரியும். தாட்சாயனியின் தந்தைக்குச் சோதிடம் தெரியும். சதுர்த்திகாவின் தாய் அவளது சாதகக் குறிப்பைக் கொண்டு வந்து அவரிடம் கொடுத்துப் பலனைக் கேட்டபோது அவர் ஈஸ்வரநாதனது சாதகக்குறிப்பைப் பார்த்தார். அவை இரண்டும் தொண்ணூறு வீதம் பொருந்தியிருந்தன.

**அ**திர்ச்சியுடன் சிலையாக நின்ற சதுர்த்திகாவின் அருகில் வந்து, "இனிப்போடு வந்திருக்கிறீர், இனிப்பான செய்தி சொல்லவா?" என்று சிரித்தான். எப்பொழுதும் அவன் கலகலப்பாகப் பேசுவான். "தமிழ் நாட்டிற்கு தொழில் நிமிர்த்தம் வரவேண்டிய தேவை இருந்தது. பொருட்களைக் கொள்வனவு செய்ய மூன்று நாட்கள் செல்லும். அதனால் உதவியாட்களை விட்டு விட்டு உம்மை பார்த்து விட்டுப் போகலாமென்று வந்தேன்".

"**எ**னக்கு முகாமைத்துவ உதவியாளர் பதவி கிடைத்துள்ளது. தாட்சாயனிக்குச் சொல்லி இனிப்புக் கொடுக்க வந்தேன்".

"**அ**ப்ப எனக்கில்லை" என்றான். அப்போது தாட்சாயனியும் அவளது பெற்றோரும் அங்கு வந்தனர். அவர்கள் சதுர்த்திகாவை மகிழ்வுடன் வரவேற்றனர்.

**ஈ**ஸ்வரநாதன் லீவில் வரும்போதெல்லாம் சதுர்த்திகாவின் வீட்டுக்கு வருவான். அவன் ஒழுக்கமானவன். புண்பாளன் என்று ஊரே பேசுவதால் சதுர்த்திகாவின் பெற்றோர் அவனை மிகவும் விரும்பினர்.

**சி**வரூபன் தனது நண்பனான முகுந்தனைச் சந்திக்கப் பலமுறை முயன்றும், முகுந்தனைச் சந்திக்க முடியவில்லை. அதனால் அவன் அன்று மாலை ஐந்து மணிக்கு முகுந்தனின்

வீட்டுக்கு வந்தான், 'எந்நேரமானாலும் அவனைச் சந்திக்காது செல்வதில்லை' என்ற முடிவோடு காத்திருந்தான். அன்று அவன் வீட்டுக்கு வர இரவு பத்துமணியாகிவிட்டது. மிகுந்த களைப்புடன் வந்த முகுந்தன் குளித்துவிட்டு வந்து, "வா, சாப்பிட்டுக்கொண்டே பேசுவோம்" என்றான். பலர் முன் தனது காதல் விஷயத்தைப் பேச வெட்கப்பட்ட சிவரூபன், "உன்னோடு தனிமையில் பேச வேண்டும்" என்றான்.

**இ**ருவரும் சாப்பிட்டு விட்டு முற்றத்தில் இருந்த மாமரத்தின் கீழ் வந்து அமர்ந்தனர், "சொல்" என்றான் முகுந்தன்.

"**எ**ன்னுடைய காதல் விஷயம் உனக்குத் தெரியும். சதுர்த்திகா பிறக்கும் போதே எனக்கென இரு வீட்டாராலும் நியமிக்கப்பட்டவள். இப்ப அவளின் பெற்றோர் அவளை ஈஸ்வரநாதனுக்குத் திருமணம் செய்து கொடுக்கப் போகிறார்களாம். இது நியாயமா…?" கலங்கினான் சிவரூபன்.

"**சி**வரூபா, பெற்றோர் நிட்சயித்துத் திருமண நாளும் குறித்த பெண், தனது காதலுடன் சென்ற வரலாறு உனக்குத் தெரியும். பெற்றோரின் விருப்பத்தை ஏற்று நடக்கும் பிள்ளைகளும் உண்டு. உதாசீனம் செய்யும் பிள்ளைகளும் உண்டு. சகோதர பாசத்தால் அவள் பிறக்கும்போது அவளது பெற்றோர் விரும்பியிருக்கக் கூடும். அதை அவளும் விரும்ப வேண்டும். அதைவிட அவள் விரும்புமாறு நீ நடந்திருக்க வேண்டும். நீ ஒரு தொழிலும் செய்யாதிருக்கிறாய். எனது கடையில் சேர்ந்தாலாவது பிற்காலத்தில் வர்த்தகனாகி இருக்கலாம். அவள் பட்டதாரி. ஒரு பெண் காதலிக்க வேண்டுமானால் காதலிப்பவன் மேலானவனாக இருத்தல் வேண்டும். உனது தேவைகளையே பெற்றோர் நிறைவேற்றும் போது உன்னால் எப்படி அவளின் தேவைகளை நிறைவேற்ற முடியும்".

**சி**வரூபன் எதுவும் பேசவில்லை. அதனால் முகுந்தன் சொன்னான், "ஏதோ ஒரு வகையில் ஏற்படும் ஈர்ப்புத் தான் காதல். காதல் என்பது காந்தத்தையும் இரும்பையும் போன்றது. இரும்பைக் கண்டதும் காந்தம் இழுக்கும். காந்தத்தைக் கண்டதும் இரும்பு இழுக்கும். அந்த ஈர்ப்பு ஆணுக்கும் பெண்ணுக்குமிடையே இருந்தால் தான் காதல் வெற்றியடையும். நீ தீவிரமாக விரும்புகிறாய். அவள் உன்னை ஏறெடுத்தும் பார்த்ததில்லை. வீணாக அழகில்லாத அதாவது பொருத்தமில்லாத ஆசையை மறந்துவி. பொருத்தமில்லாத ஆசை ஒருபோதும் நிறைவேறாது. எனது நண்பர்கள் தான் சதுர்த்திகாவின் குடும்பத்தினர் அவர்களுடன் நான் எப்படிக் கதைப்பது. அவள் நீ தொழிலில்லாவிட்டாலும் உன்னை விரும்பியிருந்தால் கதைக்கலாம். இல்லாவிட்டால் அவள் விரும்பிப் பெற்றோர் விரும்பாவிட்டால் அவளை அழைத்து வரலாம். ஆனால் இரண்டும் இல்லாத நிலையில் எப்படி நான் கதைப்பது. கதைத்தாலும் அவள் ஏற்றுக்கொள்ள மாட்டாள்" என்றான் முகுந்தன்.

சிவரூபன் வெகுநேரம் அங்கு இருந்துவிட்டு எழுந்து சென்றான்.

## 34. தூங்கினால் பகலும் கெடும்

**சி**வரூபனுக்கு வாழ்க்கை வெறுத்துவிட்டது அதனால் செய்வதறியாது கால் போன திசையில் நடந்து வந்து சிவன் கோவில் வெளி மண்டபத்தில் இருந்தான். அவனது மனதில் சதுர்த்திகாவின் அழகிய உருவம் ஓவியமாகப் பதிந்திருந்து அவனைத் துன்புறுத்திக் கொண்டிருந்தது. சிறு வயதில் இருந்து அவள் தான் எனது மனைவி என்று நினைத்து அளவில்லாத ஆனந்தமடைந்த அவனது மனம் இப்பொழுது வரண்ட பாலைநிலமாகி விட்டது. எண்ணங்கள் முளை விட மறுத்தன. கற்பனைகள் எல்லாம் வாடி உதிர்ந்துவிட்டன.

"**நீ** ஒரு சரியான ஆம்பிளையாக இருந்திருந்தால் உன்னை அவள் வெறுத்திருக்கமாட்டாள். தொழில் என்பது புருஷ லட்சணம் வருவாயில்லாத ஒருவனை பெற்ற தாய் கூட விரும்பமாட்டாள் என்று இலக்கியங்கள் கூறுகின்றன. அப்படியிருக்க ஒரு கன்னிப் பெண் உன்னை விரும்புவாளா? காதலிக்காத ஒரு கன்னிப் பெண்ணின் மனதிலும் தனது எதிர்காலத்தைப் பற்றிய இனிமையான கற்பனைகள் இருக்கும். அவள் படிக்கும் போது நான் டொக்ரராக வரவேண்டும், எஞ்ஜினியராக வர வேண்டும், ஆசிரியராக வர வேண்டும் என்று ஒரு திட்டம் மனதில் இருக்கும். அதைச் செயற்படுத்த அவள் முயற்சித்துக் கொண்டிருப்பாள். உனது மைத்துனியான சதுர்த்திகா படிக்கும்போதே பல கனவுகள் கண்டவள் அதை வெளிப்படையாகவும் சொன்னவள். முதலாவது முறை அவள் ஏ.எல் எடுத்த போது மூன்று பாடங்களிலும் சித்தியடையவில்லை. அப்போது என்ன சொன்னவள் என்று யோசித்துப்பார், "நான் சித்தியடைந்து பல்கலைக்கழகத்திற்குச் சென்று கற்பன். அதில் எந்தமாற்றமும் இல்லை…" என்றாள் உனக்கு நினைவிருக்கா?" அவனது தோழன் ஆதவன் கேட்டான்.

**யோ**சிப்பதை நிறுத்திய சிவரூபன் சிவனைப் பார்த்தான். கண்கள் கலங்கி கண்ணீர் நிறைந்திருந்தால் அவனுக்குச் சிவனைத் தெரியவில்லை.

"**அ**வள் பிடிச்சிராவி. நினைத்ததைச் செய்து முடிப்பவள். இரண்டாவது தடவை அவள் மூன்று சீக்களைப் பெறுபேறாகப் பெற்றாள், "முதல் தரம் எந்தப் பாடமும் சித்தியடையவில்லை இரண்டாம் தரம் மூன்று 'சீ' பெற்றுள்ளேன். அடுத்த தடவை மூன்று 'A' பெறுவேன் என்றவள் அதன்படி மூன்று 'A' பெற்றுப் பல்கலைக்கழகம் சென்று படிப்பை முடித்துவிட்டு நல்லதொரு தொழிலைப் பெற்றுவிட்டாள். அவள் ஒரு பெண். அவளே நினைத்ததைச் சாதித்துவிட்டாளென்றால் பலமுள்ள உன்னால் ஏன் முயற்சி செய்ய முடியாது?" ஆதவன் மனதுள் இருந்து கத்திக் கொண்டிருந்தான்.

“**நா**ன் வாழ்வதில் அர்த்தமில்லை. நான் சாக வேண்டும்” அந்த நினைவு மனதில் எழுந்தபோது மனதுள் இருந்த ஆதவன் சொன்னான், “அவள் உனக்கு என்ன சொன்னவள், “வாழ்க்கை என்பது முயற்சியில் தான் தங்கியுள்ளது. முயற்சி செய்யாது தூங்குபவன் தன்னையும் கெடுத்துத் தன்னைச் சேர்ந்தவர்களையும் கெடுக்கிறான். நீ ஓ எல்லில் ஒரு பாடமும் சித்தியடையவில்லை. அங்கக் குறையாடுள்ள ஒருவர் சித்தியடையாவிட்டால் அது அறிவின்மை அல்ல. சகல அங்கங்களையும் நிறைவாகப் பெற்ற நீ ஒழுங்காகப் படிக்காது தீய நண்பர்களுடன் சேர்ந்து பாடசாலைக்கு வருவதில்லை. ஒரு பாடத்தைப் பன்னிரண்டு வருடங்கள் படித்தும் நீ அதில் சித்தியடையவில்லையானால் உன்னை நம்பி வரும் பெண் போதிய உணவில்லாமல் சாகத்தான் வேண்டும். நீ எனது முறை மச்சான். இரு வீட்டுப் பெற்றோரும் எதிர்காலத்தைப் பற்றிச் சிந்தியாது முடிவெடுத்துவிட்டனர். அதற்கு நான் கட்டுப்பட வேண்டியதில்லை. அதனால் நீ படித்து ஒரு நல்ல உத்தியோகம் பார்த்தால் தான் நான் உன்னை விரும்புவேன். உன்மீது எனக்குக் காதல் இல்லை. அனுதாபம் தான் இருக்கிறது. அதைக் காதலாக மாற்றுவது உனது திறமை” என்றவள். நீ அதைப்பற்றிச் சிந்திக்காது, “மாமாவும் மாமியும் உறவை அழிய விடாமாட்டார்கள்” என்று சொன்னாய். இரவில் தான் தூங்க வேண்டும். பகலில் முயற்சிக்க வேண்டும். நீ பகலிலும் அறியாமையால் ஊர்சுற்றினாய். பகலில் முயற்சி செய்யாமல் இருப்பவன் பகலிலும் தூங்குகிறான் என்று பெரியவர்கள் கூறியுள்ளனர். உனது சோம்பேறித்தனம் உன்னை எங்கே கொண்டு சென்று நிறுத்தியுள்ளதைப் பார்த்தாயா?” ஆதவன் மீண்டும் மனதுள் இருந்து கத்தினான்.

**அ**ப்போது சிவன் கோவிலுக்கு வந்த கதிரேசன் சொன்னார், “மகனே, தூங்குகின்றவனை எழுப்பலாம். தூங்குபவன் போலப் பாசாங்கு செய்பவனை எழுப்ப முடியாது. நீ தூங்கிவிட்டாய். தூக்கம் கலைந்து எழுந்து முயற்சி செய். காதலிப்பவர்கள் எல்லோரும் வெற்றியடைவதில்லை. வெற்றியடைந்த பலர் சிறப்பாக வாழ்ந்ததில்லை. காதலிக்கும் போது காதல் கரும்பாக இனிக்கும். கல்யாணமான பின்பு வாழ்வு இனிக்க வேண்டுமானால் தளராத முயற்சி வேண்டும். முகுந்ததனைப் போல இரவு பகல் பாராது உழைத்துப் பணத்தைத் தேட வேண்டும். திருமணமான பின் தேடிவைத்த பணத்திலிருந்து இன்பமாக வாழ வேண்டும். பணமில்லாதவன் பிணம் என்பது உனக்குத் தெரியாதா..?” கேட்டுவிட்டு நிறுத்தினார் கதிரேசன்.

**சி**வரூபனின் கண்களால் கண்ணீர் வடிந்தது, “ஒருவர் இறந்த பின் அழுவதால் அவர் உயிர்பெற்றெழுந்திருக்கப் போவதில்லை. ஒப்புக்காகத் தான் எல்லோரும் அழுகின்றனர். பிரேதத்தை எடுத்ததும் அரைவாசித் துக்கம் போய்விடும். மிகுதியும் சில நாட்களில் போய்விடும். பின் அவர்கள் இயல்பு நிலைக்குத் திரும்பிவிடுவர். இப்போது உனது காதல் செத்துவிட்டது. அழு, நன்றாக அழு. அதன் பின்னாவது வாழ்க்கையின் போக்கை உணர்ந்து செயற்படு” என்று கூறிவிட்டுச் சென்றார் கதிரேசன்.

## 35. குறை அகலா உறவும் கெடும்

**சி**வரூபன் தற்கொலை செய்வதற்காக விஷத்தைக் குடித்ததால், அதைக் கேள்விப்பட்ட முகுந்தன் அவனை வைத்தியசாலைக்குக் கொண்டு சென்றான். வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட சிவரூபனுக்கு மயக்கம் தெளியவில்லை. அதை அறிந்த அர்ச்சகாவின் தந்தை மிக்க வேதனையடைந்தார். தான் அன்போடு தூக்கி வளர்த்த சிவரூபன் சுயநினைவில்லாமல் இருந்தது அவருக்குப் பெருங்கவலையைக் கொடுத்தது. அவரது சகோதரியின் மகன் அவன்.

**ப**த்மநாதன் வேதனையைத் தாங்க முடியாது அவதிப்படுவதைக் கண்ட குடும்பத்தினர் பெரும் வேதனைக்குட்பட்டனர். வீட்டில் இருக்கப் பிடிக்காததால் அவர் சிவன்கோவில் மடத்திற்கு வந்தார். அங்கு எவ்வேளையிலும் கதிரேசனும் அதிபரும் வேறு சிலரும் இருப்பார்கள்.

**ப**த்மநாதன் ஒழுக்கமானவர் புழுப்பூச்சிகளைக் கூடத் துன்புறுத்தாதவர் அர்ப்பணிப்பு மிக்க நல்லாசிரியர். அவர் பொன்னுத்துரை அதிபருக்குக் கீழ் பத்து வருடங்கள் ஆசிரியராகக் கடமையாற்றியவர். அதனால் அதிபர் பத்மநாதன் மீது பேரன்பு வைத்திருந்தார். கதிரேசனும் பத்மநாதன் மீது பெருமதிப்பு வைத்திருந்தார்.

**ப**த்மநாதன் தனது குடும்ப வரலாற்றின் சில பகுதிகளை அதிபருக்கும், கதிரேசனுக்கும் கூறியிருந்தார். இரண்டு வருடங்களுக்கு முன்பு சிவரூபன் சதுர்த்திகாவை வீதியில் கண்டு விட்டு அவளிடம் தன்னைத் திருமணம் செய்யும் படி வற்புறுத்தியதால் அவள் அவனைக் கண்டபடி ஏசிவிட்டு, “உன்னை நான் திருமணம் செய்வது தற்கொலை செய்வதற்குச் சமனானது” என்று ஏசிவிட்டு வந்துவிட்டாள். அதை அறிந்த சிவரூபனின் தாய் பாடசாலைக்கு வந்து பத்மநாதனின் மனைவியையும், சதுர்த்திகாவையும் ஏசிவிட்டுச் சென்றாள்.

**அ**வள் சென்ற பின்பு பத்மநாதன் சிவன்கோவில் மடத்திற்கு வந்து சொன்னார், “கதிரேசண்ணை, சேர் என்னுடைய வாழ்க்கை வரலாறு முழுவதும் உங்கள் இருவருக்கும் தெரியும். எனது சகோதரியை நான் உயிருக்குயிராக நேசித்தமையால் தான் அவள் பிறந்தன்று அவளைச் சிவரூபனுக்குத் திருமணம் செய்வேன் என்று சொன்னேன்” மூச்சுவிட்டார் பத்மநாதன்.

**சி**றிது நேரங் கழித்துப் பத்மநாதன் சொன்னார், “என்னால் முடிந்தளவு புத்திமதிகள் அவர்களுக்குச் சொன்னனான். அவர்கள் கேக்கிறதாக இல்லை. பெற்றோரையும் சகோதரர்களையும் நேசிக்கும் ஓர் ஆண், திருமணம் செய்தால் மனைவியையும் நேசிக்க

வேண்டும். பிள்ளைகள் பிறந்தால் அவர்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்த வேண்டும். சிவரூபனின் நடத்தை உங்களுக்கு மட்டுமல்ல ஊருக்கே தெரியும். நான் ஒரு வறிய விவசாயியின் மகன். எனது தந்தை ஒரு நோயாளி. அப்படி இருந்தும் எம்மை உயர்த்த வேண்டும், தான்பட்ட கஷ்டத்தைத் தனது பிள்ளைகள் படக்கூடாதென்று எண்ணி எமக்குப் புத்திமதிகள் சொல்லிக் கற்பித்தவர். அவர் சொல்வார், "எனது பிள்ளைகளை ஒழுக்கமாக வளர்த்து, கற்பித்து ஆளாக்கிவிட்டேன். அதுபோல நீங்கள் உங்கள் பிள்ளைகளை நன்றாகக் கற்பிக்க வேண்டும்" என்று தினமும் சொல்வார். எனது சகோதரி நல்ல உத்தியோகத்தில் இருந்தும் தனது மகனைக் கற்பிக்காதது எனது பிழையா?" கலங்கினார்.

"**பி**ள்ளைகள் தலைக்கு மேல் வளர்ந்துவிட்டார்கள். அவர்கள் நன்றாகக் கற்றும் விட்டனர். அதனால் அவர்கள் சொல்வதை நான் கேட்டேயாக வேண்டும். மூத்தவன் சொல்கிறான், "அப்பா, நீங்கள் உங்களின் தங்கை மீது வைத்த பாசத்தைத் தான் நாங்களும் எமது தங்கை மீது வைத்திருக்கிறோம். அவள் கஷ்டப்படுவதை எம்மால் தாங்க முடியாது. அதனால் தங்கையைச் சிவரூபனுக்குத் திருமணம் செய்து கொடுக்க நான் விடமாட்டேன். அம்மாவும் விரும்பமாட்டா".

**ப**த்மநாதன் சொன்னது கதிரேசனும் அதிபரினதும் காதில் ஒலித்தது. அதனால் அவர்கள் இருவரும் எழுந்து சென்று பத்மநாதனின் கைகளைப் பிடித்து அழைத்து வந்து ஆவனத்தில் இருந்தினர். பத்மநாதன் விம்மி விம்மி அழுதார். அவரால் தூக்கத்தை அடக்க முடியவில்லை. அப்போது அங்கு வந்த தர்மலிங்கம், "இப்ப சிவரூபனுக்குச் சுகம். எழுந்திருந்து கதைக்கிறான்" என்றான்.

**அ**தைக் கேட்ட பத்மநாதனுக்குப் போன உயிர் மீண்டும் வந்தது. கதிரேசனும் அதிபரும், "சிவனே" என்றனர்.

"**எ**ன்னால் இப்போது தனித்து முடிவெடுக்க முடியாது. நான் முடிவெடுக்கலாம், என்று எனது சகோதரி சொல்கிறாள். இது நியாயமா…? அவனில் பல குறைகள் இருப்பது உங்களுக்குத் தெரியும். குற்றம் குறை பாவம் பழி என்பவற்றை நாம் தேடிக்கொள்கிறோம். விதி என்று எதுவுமில்லை. நல்லது செய்தால் நன்மையும், தீயதைச் செய்தால் தீமையும் வரும் என்று புரியாதவர்கள் தான் வாய்க்கு வந்தபடி கதைப்பர். குற்றம், குறை, பாவம் ஆகியவற்றைச் செய்யாது வாழ முடியாது. ஆனால் செய்வது தீயசெயல் என்று தெரிந்த பின்பும் செய்வது தான் பாவமானது…" என்றார் பத்மநாதன்.

"**நீ**ங்கள் ஒரு உத்தமமான பண்பாளர். இப்படி நன்மை, தீமைகளை எண்ணிக் கவலைப்படக் கூடாது. குடும்பத்தின் தலைவர் என்ற வகையில் தகப்பன் நீதிக்கு மாறாக நடந்தால் மனைவியும் பிள்ளைகளும் அதை ஏற்றுக் கொள்ளமாட்டார்கள் என்று தெரிந்த

நீங்கள் கவலைப்படக் கூடாது. இது சிவரூபன் தேடிக்கொண்ட முடிவு. இதையிட்டுக் கவலைப்படத் தேவையில்லை" என்றார் அதிபர்.

"பத்மநாதன், ஒருவருக்கு நோய் வந்தால் அவர் தான் மருந்தை உண்ண வேண்டும். அதுபோல ஒருவன் தனது வாழ்க்கையை தானே நல்ல முறையில் அமைத்துக் கொள்ள வேண்டுமே தவிரப் பிறரால் அமைத்துக் கொடுக்க முடியாது. சிவரூபனுக்கு எத்தனை பேர் புத்திமதி சொன்னார்கள். நான் பத்துப் பதினைந்து முறை விபரமாக எடுத்துச் சொல்லியும் அவன் கேட்கவில்லை. இதற்காக நீங்கள் கவலைப்படுவதால் நல்ல பயன் ஏற்படுமா என்ன?" என்றார் கதிரேசன். அவரது பேச்சு பத்மநாதனுக்கு நியாயமாகப்பட்டதால் அவரது வேதனை சற்றுக் குறைந்தது.

## 36. உண்மையில்லாக் காதல் கெடும்

பூரணமாகச் சுகமாகாவிட்டலும் சிவரூபன் எழுந்து நடமாடத் தொடங்கிவிட்டான். அவனை நலம் விசாரிக்க முகுந்தன் வந்தான். தரம் ஒன்றில் இருந்து ஓ.எல் வரை இருவரும் ஒன்றாகப் படித்ததாலும் முகுந்தன் அவனது விருப்புக்குரிய நண்பன் என்று கூற முடியாது. முகுந்தன் ஓ.எல் வரை நன்றாகப் படித்தவன். அவனுக்கு வியாபாரத்தில் மிகுந்த விருப்பம் இருந்தபோதும் அவன் ஓ.எல் சித்தியடையும் வரை அவனது தந்தை அவனை வியாபாரத்தில் ஈடுபடுத்த விரும்பவில்லை. அவர் அவனுக்குச் சொல்வார், "முகுந்தா, கல்விதான் மனிதனின் பூரணமான செல்வம், ஒருவன் அறிவுக்கு மட்டுமல்ல தனது வாழ்க்கையைத் திட்டமிட்டு அமைக்கவும் கல்வித் தான் உதவுகிறது. கற்காதவனால் எந்தத் தொழிலையும் நல்ல முறையில் செய்ய முடியாது. நான் முன்பு எஸ்எஸ்சி சித்தியடைந்தனான். வேலை கிடைக்கவில்லை. அதனால் குடும்பக் கஷ்டத்தைப் போக்க நினைத்து வியாபாரம் செய்ய விரும்பினேன். எனது தந்தை இருபத்தைந்து ரூபா தந்தார். சந்தையில் காய்கறிகள் வாங்கி ஊரில் கொண்டு வந்து விற்றேன். மூன்று ரூபா இலாபம் கிடைத்தது. அதிலிருந்து தான் இவ்வளவு பணத்தையும் சம்பாதித்தேன். வியாபாரம் தொடங்கி ஒரு வருடத்தின் பின் எனக்கு உபதபால் அதிபர் பதவி கிடைத்தது. அதற்கு வேதனம் மாதம் நூற்றிப் பத்து ரூபா. நான் வியாபாரத்தின் மூலம் தினமும் ஆயிரம், இரண்டாயிரம், மூவாயிரம் ரூபா கூட உழைத்தேன். அதனால் அந்த வேலைக்கு நான் செல்லவில்லை. அதனால் தான் சொல்கிறேன் படிக்கும் வயதில் படி. பின்பு யோசிக்கலாம்".

"நீ உன் காதலி மீது அளவுக்கதிகமான அன்பு வைத்திருப்பதை நஞ்சு குடித்து நிரூபிக்கத் தேவையில்லை. அவள் படி படி என்று சொன்னபோது படித்திருக்க வேண்டும். அன்பு, காதல், பாசம் எல்லாம் கடவுள் படைத்த உயிர்கள் அனைத்திற்கும் உண்டு. ஒரு காகம் தனது குஞ்சைப் பொன் குஞ்சாக எண்ணி உணவு ஊட்டிப் பாசத்துடன் வளர்ப்பதை நீ

பார்க்கவில்லையா…?" ஒருவன் ஒருத்தி மீது காதல் கொண்டால் அவள் சொல்வதை ஏற்றுத்தான் ஆக வேண்டும். அப்படி ஏற்காவிட்டால் அவன் தன் மீது அன்பு கொள்ளவில்லை. வேறு ஏதோ ஒரு காரணத்திற்காகக் காதல் கொண்டவர் போல நடிக்கிறார் என்று நினைத்து வெறுப்படைவாள். அது தான் உனது வாழ்க்கையில் நடந்தது" என்றான் முகுந்தன்.

**சி**வரூபன் எதுவும் பேசவில்லை, "எதைச் சொன்னாலும் நீ கேட்கமாட்டாய். நீ நினைத்தபடி தான் நடப்பாய் என்பதை உனது மாமி உணர்ந்தமையால், தனது மகளின் நல்வாழ்விற்காகத் தினமும் புத்திமதி சொல்வாள். அந்த வேளையில் நீ மிகமிக அவதானமாக நடந்திருக்க வேண்டும். நீ சொல்வதை உனது காதலி ஏற்காவிட்டால், உனக்கு வரும் கோபம் தானே அவளுக்கும் வரும். அவளது தாயும், உறவினர்களும், சகோதரர்களும் உன்னைத் திருத்த முடியாது என்று வற்புறுத்திச் சொல்லும் போது அவளால் எப்படி ஏற்காதிருக்க முடியும். கரைப்பார் கரைத்தால் கல்லும் கரையும்" என்பார்கள். பலரும் அவளுக்குப் புத்திமதி கூற அவனது மனம் மாறிவிட்டது. இதற்கு நீ தான் காரணகர்த்தா…" என்றான் முகுந்தன்.

**அ**ப்போதும் சிவரூபன் பேசவில்லை. முகுந்தனுக்குச் சற்றுக் கோபம் வந்தது, "சிவரூபா, காதல், அன்பு, பாசம் என்பவற்றின் கருந்து என்ன? மூன்றும் ஒன்றுதான். ஆனால் ஆராய்ந்து பார்த்தால் அவற்றின் கருத்தில் மாறுபாடு இருப்பது புரியும். ஆறு மாதத்திற்கு முன்பு உருத்திரன் பெருங்கஷ்டப்பட்டு பெற்றாரின் எதிர்ப்பையும் மீறிக் கௌதமியைக் காதலித்துக் கூட்டி வந்தான். இரண்டு மாதம் கழிய கௌதமி விபத்தொன்றில் இறந்துவிட்டாள். அவள் இறந்து மூன்று மாதங்கூடக் கழியவில்லை. உருத்திரன் இன்னொரு பெண்ணைத் திருமணம் செய்துவிட்டான். இதுவும் காதல் தான். பொன்னையா மாமாவின் மனைவி மூன்று பிள்ளைகளைப் பெற்ற பின் நோய்வாய்ப்பட்டு இறந்து போனாள். அவரின் மனைவி இறந்து இருபது வருடங்களாகின்றன. தோட்டமும் செய்து பிள்ளைகளை நல்ல முறையில் கற்பித்து வருகிறார். அவரது மூத்த மகன் வைத்தியர். இதுவும் காதல் தான். இப்படிப் பலவிதமான காதல் எம் மத்தியில் உள்ளது. அதனால் மனதைத் தளரவிடாது சுகமானதும் ஏதாவது ஒரு தொழிலைச் செய்" என்றான் முகுந்தன்.

**வி**ரத்தியாகச் சிரித்தான் சிவரூபன், "இவர்கள் ஏன் என்னைக் காப்பாற்றினார்கள் என்று கவலைப்படுகிறேன். நான் வாழ்வதால் யாருக்கு என்ன பலன்" அழுதான் சிவரூபன்.

"**உ**ன்னுடைய வாழ்க்கையை நீயே பழாக்கிவிட்டு நஞ்சு குடிப்பதாலோ அல்லது தத்துவம் பேசுவதாலோ பயனிருக்காது. உன்னை வேண்டாம் என்று ஒதுக்கியவளை விட நீ சிறப்பாக வாழ்ந்தாயேயானால் அது அவளுக்கொரு பாடமாக அமையலாம்" என்றான் முகுந்தன்.

**அ**ப்போது வேறு சிலர் அவனைப் பார்க்க வந்ததால் முகுந்தன் புறப்பட்டுச் சென்றான். சிவரூபன், முகுந்தன் சொன்னதை நினைத்துப் பார்த்தான், "அவன் சொன்னது அனைத்தும்

உண்மை. யார் சொன்னதைக் கேட்காவிட்டாலும் அவன் சொன்னதைக் கேட்டிருந்தால் எனக்கு இந்தநிலை ஏற்பட்டிராது. உண்மையில்லாத காதல் கெடும். உண்மையான காதல் ஏழேழு பிறப்பிலும் தொடரும் என்று நான் தீவிரமாகச் சதுர்த்திகாவைக் காதலித்து விட்டு அவனுக்கு அவளைப் பற்றிச் சொன்னபோது அவன் சொன்னவையெல்லாம் உண்மை" என்று நினைத்தான். நடப்பவையெல்லாம் நடந்து முடிந்தபின் அதைத் திரும்பவும் நடக்குமென்று எதிர்பார்ப்பது பிணம் உயிர் பெற்று எழுவதற்குச் சமமானது. கதிரேசன் தாத்தா சொன்னது போல, "சிவரூபா, எல்லோரும் காதலிக்கலாம். காதலிப்பது பெரிய வேலையல்ல காதலித்தவளைக் கைப்பிடித்து அவளோடு வசதியாகவும், இன்பமாகவும் வாழ்வது தான் வெற்றிகரமான காதலாகும். நீ உண்மையில் அவளைக் காதலித்திருந்தால் அவள் வசதியாகவும், இன்பமாகவும் வாழ வேண்டும் என்று நினைத்திருப்பாய். அப்படி நினைக்காததால் தான் அவளும், அவளது பெற்றோரும், சகோதரர்களும் அவளது மனதை மாற்றினார். இதை நீ உணர்ந்து கொண்டால் தான் உன்னைப் பற்றிக் கதைக்க முடியும். இன்று வரை அதை உணரவில்லை" என்று கதிரேசன் சொன்னது சரி. நான் தான் புரியாது வாழ்ந்து விட்டேன்" என்று நினைத்தான் சிவரூபன்.

## 37. வறுமை வந்தால் எல்லாம் கெடும்

**அ**ன்று வெள்ளிக்கிழமை. பிரதோஷ விரதநாள். சிவன் கோவிலுக்குப் பக்தர்கள் அதிகமாக வந்திருந்தனர். பூசை முடிந்ததும் கிராமசேவகர் வரதராஜன் கதிரேசனுக்கு அருகில் வந்து சொன்னார், "தாத்தா, உங்களையும், அதிபரையும், முகுந்தனையும், பத்மநாதனையும், சிவரூபனின் தந்தையின் விஷயமாகக் கதைக்கவுள்ளதால் மடத்திற்கு வரவும். பத்து நிமிடங்களில் சென்று விடலாம்" என்று கூறினார். கதிரேசனுக்கு ஆச்சரியமாக இருந்தது. ஊரவரின் விடயமாகத் தன்னுடனும் அதிபருடனும் தேவையேற்பட்டால் மட்டும் கதைக்கும் வரதராஜன் இன்று ஐந்து பேரை மடத்திற்கு வருமாறு கூறியுள்ளார். என்னவாக இருக்கும் என்று யோசித்தபடி மடத்திற்கு வந்தார் கதிரேசன்.

**ம**டத்தில் அதிபரும் முகுந்தனும், பத்மநாதனும், சிவரூபனின் தந்தையான சிவஞானமும் இருந்தனர். கதிரேசனைக் கண்டதும் அவர்கள் எழும்பி நின்று வரவேற்றனர். வரதராஜன் சொன்னார், "இந்தக் கிராமத்தில் இதுவரை நடைபெறாத ஒரு விடயம் தற்பொழுது நடக்கவுள்ளது. இங்குள்ளவர்கள் தமது பெற்றோரை ஒருபோதும் முதியோர் இல்லத்திற்கு அனுப்புவதில்லை. பெற்றோர் பிள்ளைகளுடன் அமைதியாகவும் மகிழ்ச்சியாகவும் வாழ்ந்து வருகின்றனர். நான் இவ்வூரவன். அதிபரின் மாணவன் என்றவகையில் எனது முன்னேற்றத்திற்குக் காரணமானவர்களைக் கேளாமல் பிரச்சினையான விடயங்களுக்கு முடிவெடுப்பதில்லை" என்று கூறிய வரதராஜன் அதிபரைப் பார்த்தாள்.

“**நீ** எனது மாணவன். கற்கும் காலத்தில் மிக்க ஒழுக்கமாக வாழ்ந்தவன். என்னை இன்றும் குருவாக மதித்து நடப்பதால் பிழையான விடயங்களைச் செய்யமாட்டாய் என்று எனக்குத் தெரியும். வந்த விஷயத்தைச் சொல்” என்றார் அதிபர்.

**சி**வஞானம் தன்னால் வறுமையைத் தாங்கிக் கொள்ள முடியவில்லையாம். அத்துடன் வயதுபோன காலத்தில் உழைப்புப் பிழைப்பில்லாத மகனுக்குச் சமைத்துக் கொடுக்கவும் முடியாதுள்ளதாம். அதனால் தன்னை முதியோர் இல்லத்தில் சேர்த்து விடுமாறு கேட்கிறார். நீங்கள் விரும்பினால் நான் அவருக்குச் சிபாரிசு செய்கிறேன்” என்றார் வரதராஜன்

**வ**ந்திருந்தவர்கள் அதைக் கேட்டுத் திகைத்து விட்டனர். சிவஞானம் மிகுந்த வேதனையுடன் சொன்னார், “கதிரேசன்ணைக்கும், அதிபருக்கும் நான் எடுத்த முடிவு பற்றிக் கூறவில்லை. ஏனென்றால் அவர்கள் விடமாட்டார்கள். என்னால் இதைத் தவிர வேறு முடிவை எடுக்க முடியவில்லை. ஒரே ஒரு மகன் என்று செல்லம் கொடுத்து எந்த விதமான குறைகளுமில்லாமல் வளர்த்தேன். எனது சகோதரியின் மகளை அவள் பிறந்த போது அவனுக்குத் திருமணம் செய்து கொடுப்பதாகத் தீர்மானித்தோம். அது நடந்திருந்தால் நான் அவர்களுடன் மகிழ்வாக வாழ்ந்திருப்பேன்” என்ற சிவஞானம் சிறிது நேரம் பேசாது நின்றார். பின் சொன்னார், “எனது சகோதரியும் மைத்துனரும் என்மீதும், மகன்மீதும் பெரும் அன்பு வைத்திருந்தனர். இவன் எல்லாவற்றையும் கெடுத்துவிட்டான். எனது மருமகள் அவனைத் திருமணம் செய்யாது ஒதுக்கியது, எனக்கு மகிழ்ச்சியைக் கொடுத்தது. ஏனென்றால் இன்று நான் படும் கஷ்டங்களை அவளும் அவளது பிள்ளைகளும் அனுபவிக்க வேண்டி வரும். எனது மனைவி இறந்து ஐந்து வருடங்களாகின்றன. அவள் இறக்கக் காரணமும் இவன்தான். இவனை நினைத்து யோசித்து யோசித்து பின் நோயாளியாகிவிட்டாள்” அழுதார் சிவஞானம்.

“**எ**ல்லாம் எமக்குத் தெரியும். உன்னுடைய மகன் கைவிட்டாலும் நாங்கள் கைவிடமாட்டோம். நீ போய் உனது சகோதரியுடன் இரு. பத்மநாதன் உன்னை அழைத்துச் செல்வார்” என்றார் கதிரேசன்.

“**இ**ல்லை அண்ணை. நான் அங்கிருந்தால் சிவரூபனும் அங்கு வருவான் அது எனக்கு விருப்பமில்லை. அவன் தனது தவறுகளை உணர வேண்டுமானால் நான் முதியோர் இல்லத்திற்குச் செல்ல வேண்டும்” என்றார் சிவஞானம்.

“**சொ**ல்வதைக் கேள். உனக்குப் பத்மநாதனின் வீட்டுக்குச் செல்ல விருப்பமில்லாவிட்டால் எனது தென்னந்தோப்பில் உள்ள வீட்டிற்குப் போ. அங்கு வாமதேவனும் அவனது மனைவியும் மட்டும் இருக்கின்றனர். அவனது மகன்மார் மூவரும் திருமணம் செய்து மனைவிமாரோடு வாழ்கின்றனர்” என்றார் கதிரேசன்.

**சி**வஞானம், கதிரேசனைப் பார்த்தார். அவரால் கதிரேசனது கண்களைப் பார்த்துக் கதைக்க முடியவில்லை. ஊரவர் எவரும் அவர் கூறுவதற்கு மறுப்புச் சொல்லமாட்டார்கள். அத்துடன் கதிரேசனிடம் அவர் எவ்வளவோ உதவிகளைப் பெற்றுள்ளார் அதனால் சம்மதித்தார்.

“**நீ** அங்கு எந்த வேலையும் செய்யத் தேவையில்லை. வாமதேவனின் மனைவி உணவு தருவாள். நீ விரும்பிய காலம் வரை இரு. எப்ப உனக்கு மகனுடன் அல்லது சகோதரியுடன் செல்ல விருப்பமோ அப்போது செல்” என்றார் கதிரேசன்.

**சி**வஞானம் கதிரேசனது தென்னந்தோப்பு வீட்டுக்கு வந்து வாமதேவனுடன் தென்னந்தோப்பில் வேலை செய்தார். அதைக் கண்ட வாமதேவன் சொன்னான், “அண்ணா, உங்களைக் கொண்டு எந்த வேலையும் செய்யவிக்கக்கூடாதென்று தாத்தா சொன்னவர்”.

“**வா**மதேவா, நான் நல்ல ஆரோக்கியமாக உள்ளேன். நான் கமம் செய்தவன். இம்முறையும் பல்வேறு விதமான மரக்கறி வகைகளை நட்டிருக்கிறேன். எனது மகன் எந்த வேலையும் செய்யாது சோம்பியிருப்பதால் ஓர் அதிரிச்சி வைத்தியம் கொடுக்கவே அவ்வாறு நடந்தேன். அதனால் பிறருக்குப் பாரமாக இருக்க நான் விரும்பவில்லை. என்னால் முடிந்த வேலைகளையெல்லாம் செய்வேன். எனது மகன் திருந்த வேண்டும். அவன் ஊர் சுற்றிவிட்டு வர நான் அவனுக்குச் சமைத்துக் கொடுத்து அவனைக் கெடுத்துவிட்டேன். அவன் திருந்த வேண்டும். பசி வந்தால் பத்தும் பறந்து விடும். அத்துடன் வறுமை வந்தால் எல்லாம் கெட்டு விடும் என்பதை அவன் உணரவேண்டும்”. என்றார் சிவஞானம். அவர் சொல்வது வாமதேவனுக்கு நியாயமாகத் தெரிந்ததால் அவன் எதுவும் பேசவில்லை.

**ஒ**ருவாரம் கழியச் சிவரூபன் கதிரேசனது தென்னந்தோப்புக்கு வந்தான். சிவஞானம் தோப்பில் ஒரு குழி தோண்டிக் குப்பைகளை அத்துள் போட்டு மூடிக் கொண்டிருந்தார்.

**அ**தைக்கண்ட சிவரூபனுக்கு வாழ்க்கையில் முதன் முதலாக வேதனை பிறந்தது. அவனுக்கு அவனது மாமனான பத்மநாதன் முதல் நான்ச் சந்தித்துச் சொன்னது ஞாபகத்தில் வந்தது, “வாழ்க்கை என்பது ஒரு புனிதமான இடர் மிகுந்த பயணம். பிறந்தவர்கள் அனைவரும் வாழ்க்கையை வாழ்ந்தே தீர வேண்டும்? ஒருவன் திருமணம் செய்து பிள்ளைகளைப் பெறுவது சந்ததியைப் பெருக்க அல்ல. சந்ததியை வாழ்விக்க. எமது ஊரில் யாராவது ஒருவர் தமது பெற்றோரைக் கவனிக்காது முதியோர் இல்லத்தில் சேர்த்திருக்கிறார்களா? உனக்கு ரோசம், மானம், மரியாதை ஏதும் இல்லை. அதனால் எது நடந்தாலும் கவலைப்படமாட்டாய். உனக்காக உனது தந்தை மட்டும் வேதனைப்படவில்லை. எமது குடும்பமும் வேதனைப்படுகிறது. இனத்தவர் ஒருவருக்குத் துன்பமேற்பட்டால், அவரது

துன்பங்களை நீக்குவது உறவினரது கடமை. உனக்கு எத்தனை தரம் உதவியிருப்போம். அதனால் எந்தப் பயனும் ஏற்படவில்லை”.

“**உ**னது தந்தை முதியோர் இல்லத்திற்குச் சென்றால் எமது மானமும் போய்விடும். நீ படிக்கவில்லை. முயற்சி செய்து உழைக்கலாம் தானே. முகுந்தனது தந்தை படிக்கவில்லை. ஆரம்பத்தில் பொருட்களை வாங்கித் தலையில் சுமந்து சென்று விற்பனை செய்தவர். பின் சைக்கிலில் வியாபாரம் செய்தவர். இன்று பல வர்த்தக நிறுவனங்களுக்கு உரிமையாளர். அவரிடம் ரைக்ரர் உண்டு. பல லொறிகள் உண்டு. ஆடம்பரமான சொகுசான பலகோடி மதிப்புள்ள இரண்டு கார்கள் உண்டு. பெரும் பெரும் உத்தியோகத்தனால் இவற்றைத் தேட முடியுமா? உனது நண்பன் முகுந்தன். அவன் தினமும் பல ஆயிரம் ரூபா உழைக்கிறான். அவனோடு சேர்ந்து வியாபாரம் செய்திருந்தாலும் நான் சொன்னபடி உனக்கு எனது மகளைத் திருமணம் செய்து வைத்திருப்பேன்”.

**அ**தை நினைக்க சிவரூபனுக்கு இதயம் வலித்தது. கண்கள் கலங்கின.

“**இ**றந்த பின்பு உடலை உயிர்ப்பிக்க முடியாது. சிவர் உயிரோடு இருந்தும் பிணமாகத் தான் இருக்கிறார்கள். ஒருவன் நினைத்தால் எந்த வயதிலும் எதுவும் செய்யலாம். அதிபர் அறுபத்தைத்தாவது வயதில் தான் கணிதத்ததில் கலாநிதிப்பட்டம் பெற்றவர். அந்த வயதிலும் அந்தப் பட்டத்தால் பயன் இருக்கிறது என்று மக்கள் சொல்கிறார்கள். அவர் கணிதத்தில் பல ஆராய்ச்சிகள் செய்கிறார். நீ முப்பது வயதில் ஊர் சுற்றுகிறாய். அதைவிட்டு விட்டு ஏதாவது தொழில் செய்”.

**சி**வரூபனைக் கண்ட சிவஞானம் அவனின் அருகில் வந்தார், “ஏன் இங்கு வந்தாய். இங்கு நான் நிம்மதியாக இருக்கிறேன். அது உனக்குப் பிடிக்கவில்லையா…?” என்று கேட்டார்.

“**அ**ப்பா, நீங்கள் நட்டுவிட்டு வந்த காய்கறிச் செடிகளுக்கு நீர் பாய்ச்சியுள்ளேன். முற்றிய காய்கறிகளைப் பறித்து விற்றுத்தான் நான் உண்டு வருகிறேன். பசி உயிரைக் கொல்லும் மனதை மாற்றும் என்பர். இனி நான் உழைப்பேன். வீட்டுக்கு வாருங்கள்” என்றான் சிவரூபன்.

**அ**ப்போது அங்கே வந்த கதிரேசன் சொன்னார், “சிவஞானம், இந்த ஒருமுறை மட்டும் அவனை மன்னித்து அவளின் விருப்பப்படி நட. அது பிடிக்கவில்லையானால், திரும்பவும் இங்கு வந்துவிடு” கதிரேசனின் சொல்லை மறுக்க முடியாத சிவஞானம் அவனுடன் புறப்பட்டுச் சென்றார்.

## 38. காய்க்காத மரமும் கெடும்

**சி**வஞானம் தனது தோட்டத்திற்கு வந்தபோது அது பண்படுத்தப்பட்டு நீர் இறைக்கப்பட்டிருந்தது. செடிகள் பூத்துக் காய்த்துக் குலுங்கின. அதைப் பார்க்க அவருக்கு மகிழ்ச்சியாக இருந்தது, “இதை யார் செய்தது? அனுபவமுள்ள ஒரு கமக்காரன் செய்தது போலச் செப்பமாக உள்ளது” என்று சொன்னார்.

“**நா**ன்தானப்பா செய்தனான், அதிபரும், கதிரேசன் தாத்தாவும் என்னுடன் கூட வந்து காட்டித்தந்தவை” என்றான் சிவரூபன்.

**சி**வஞானம் அவனை மகிழ்வுடன் பார்த்தார். இரண்டு தினங்களுக்கு முன்பு அவரது மருமகள் சதுர்த்திகா, கதிரேசனது தோட்டத்திற்கு வந்து சொன்னவை அவருக்கு நினைவுக்கு வந்தது.

“**மா**மா” என்று அன்புடன் அழைத்த சதுர்த்திகா அவர் தேங்காய்களை உரித்துக் கொண்டிருப்பதைக் கண்டு கண்கலங்கினாள், “மாமா, இந்த வயதில் இப்படியான கடினமான வேலைகளையெல்லாம் செய்யத்தான் வேண்டுமா...? நீங்கள் எனது தாயாரின் சகோதரர். அம்மா உங்களின் மீது வைத்த பாசத்திற்கு அளவே இல்லை. அதனால் உங்களை அழைத்து வருமாறு என்னை அனுப்பினா. மாமா, தயவு செய்து என்னுடன் எனது வீட்டுக்கு வாருங்கள் உங்களின் மீதோ சிவரூபனின் மீதோ அம்மாவுக்கு வெறுப்பில்லை. வசதியாக வாழ்ந்த மகள் எதிர்காலத்தில் கஷ்டப்படக்கூடாது என்றுதான் சிவரூபனை வெறுத்தவா. எனக்கும் அதுதான் கவலை. படிக்காவிட்டாலும் ஏதாவது ஒரு தொழில் செய்திருக்கலாம். எனது தோழி பட்டதாரி ஆசிரியை. சவுதியில் வேலை செய்த தனது மைத்துணனை விரும்பித் திருமணம் செய்தவள். இப்போது அவர் சவுதியால் திரும்ப வந்து கமம் செய்கிறார். அண்மையில் நூறு ஏக்கர் நெல்வயல் வாங்கியவர். அத்துடன் ஓர் உழவு இயந்திரமும் வாங்கியவர்” தனது வயல்வேலைகளை முடித்துவிட்டுக் கூலிக்கு உழுகிறார். இதில் என்ன வெட்கம் இருக்கிறது. கை நிறையச் சம்பாதிக்கும் கணவனை மனைவி வெறுக்கமாட்டாள். அவர்கள் இருவரும் மிகமிக மகிழ்வுடன் வாழ்கின்றனர். அப்படியான ஒரு தொழிலைச் சிவரூபன் செய்தாலும் நான் விரும்பியிருப்பேன். உங்களையே கவனிக்காத அவர் எப்படி என்னைக் கவனிப்பார்”.

**அ**தை நினைக்க அவருக்கு அவளின் மீது அன்பு பெருகியது, “என்னப்பா யோசிக்கிறியள்?” சிவரூபன் கேட்டான்.

“**நே**ற்று சதுர்த்திக்கா என்னைச் சந்திக்கத் தென்னந்தோப்புக்கு வந்தவள். அவள் சொன்னதை நினைத்தேன். அவள் ஓர் அருமையான பெண். எனக்குக் கொடுத்து வைக்கவில்லை”.

“**அ**ப்பா, இப்போது தான் நான் உலகைப் புரிந்துள்ளேன். நீங்கள் இங்கு வந்த பின்பு முகுந்தனிடம் சென்றேன். அவனைச் சந்திக்க முடியவில்லை. பல மணிநேரங்கழித்து வந்து சொன்னான், “எனக்கு ஆயிரம் வேலைகள் உண்டு. நீ அடிக்கடி வந்து குழப்புகிறாய். சிவரூபா, பயனில்லாதவவற்றை மனிதர்கள் விலக்கி விடுவார்கள். ஒருவன் மிக அன்பாக ஒரு பசுவை வளர்க்கிறான். அது பல வருடங்களாகக் கன்று ஈனா விட்டால் அவன் அதைத் தொடர்ந்து வளர்க்க மாட்டான். அதைக் கசாப்புக் கடைக்காரனுக்கு விற்றுவிடுவான். அதுபோலப் பல கன்றுகளை ஈன்ற பசுவும் வருமானம் கொடுக்காவிட்டால் அதையும் விற்றுவிடுவான். ஒரு மரம் பல காலம் காய்க்காது விட்டால், அதைத் தறித்து விட்டு வேறு ஒரு மரம் நடுவார்கள். இதுதான் உலகம். நீ புரியாமல் வாழ்கிறாய். பலர் பலமுறை எடுத்துச் சொன்னாலும் உனக்குப் புரிவதாக இல்லை. என்னைத் தயவு செய்து தொந்தரவு செய்யாதை” என்று கூறி பணத்தை எடுத்தான்.

“**நா**ன் பணத்திற்காக வரவில்லை. நான் போறன்” என்று கோபமாகச் சொல்லி விட்டு வந்து விட்டான். அதன்பின் அதை அவன் வந்து கதிரேசனிடம் சொன்னபோது அவர் சொன்னார்,

“**சி**வரூபா, ஒரு மனிதன் எந்த நேரமும் ஒரு மாதிரி இருக்க முடியாது. சந்தர்ப்பங்களுக் கேற்ப மனம் மாறுபடும். முகுந்தனுக்குத் தொழிலில் ஏதாவது பிரச்சினை இருக்கலாம் அல்லது குடும்பத்தில் ஏதாவது நடந்திருக்கலாம். இல்லாவிட்டால் நட்டம் தோல்வி என்பன ஏற்பட்டிருக்கலாம். எமது தெய்வமான சிவபெருமானே பல சந்தர்ப்பங்களில் கோபப்பட்டுள்ளார், தண்டித்துள்ளார். தனது மனைவியான பார்வதி அம்மையாருடன் கூட முரண்பட்டிருக்கிறார். கடவுளே கோபிக்கும் போது மனிதன் கோபிப்பது பற்றிக் கதைக்க என்ன இருக்கிறது. அவன் ஒரு பெருந்தொழிலாழி. நீ அடிக்கடி போய்க் குழப்புவது சரியல்ல. நித்தம் போனால் முற்றம் சலிக்கும் என்பார்கள். அதனால் புத்திசாதூரியமாக நடந்து கொள்” என்றார்.

“**ம**கனே, எம்மிடம் பிழையை வைத்துக் கொண்டு பிறரைக் குறைகூறுவது பலரது வழக்கமாக உள்ளது” உன்னைத் திருத்து. உலகம் திருந்தும். பிறரைத் திருத்த முயலாதே” என்று ஒரு முதுமொழி உள்ளது. நீ சுயமாகச் சம்பாதித்தால் மற்றவர்களிடம் உதவி கேட்க வேண்டிய அவசியமில்லை. முகுந்தனுக்குப் பல லட்சரூபா ஒருமுறை தேவைப்பட்டது. அவன் தனது காணி உறுதியை வங்கியில் அடைமானம் வைத்துப் பெருந்தொகையான பணத்தைப் பெற்றான். அதை அறிந்த கதிரேசன் அவனிடம் சென்று, “ஊரில் உள்ளவர்களிடம் பணத்தை வாங்காது ஏன் வங்கியில் கடன் பட்டாய்?” கேட்க அவன் சொன்னான்,

“**தா**த்தா, ஊரில் பணத்தை வட்டிக்குக் கேட்டாலும் அவர்கள் அதை ஒரு பெரும் உதவியாகத்தான் கருதுவர். வங்கியில் ஒருகோடி ரூபா கடனாகப் பெற்றேன். மாதம் இரண்டு லட்சரூபா கட்டுகிறேன். மொத்தமாக ஒருகோடியைப் பெற்ற நான் தவணை முறையில் திருப்பிக் கட்டுகிறேன். ஊரில் அப்படிக் கொடுத்தால் வாங்குவார்களா…?” என்று கேட்டவன்.

“**பெ**ரும் கோடீஸ்வரனான அவன், வட்டிக்குப் பணம் பெறக்கூடக் கடமைப்பட விரும்பவில்லை. அப்படியான அவனோடு நட்பாயிருக்கும் நீ அவனது செயல்களைப் பின்பற்றாமையால் தான் இந்தநிலையை அடைந்தாய். இப்போதாவது அதை உணர்ந்த நீ எதிர்காலத்தில் ஒரு பணக்காரனாவாய்” என்றார் சிவஞானம். அதைக் கேட்க சிவரூபனுக்கு மகிழ்ச்சியாக இருந்தது.

## 39. குற்றம் பார்க்கின் சுற்றம் கெடும்

**அ**திகாலையில் நித்திரை விட்டெழுந்த முகுந்தன் தனது மகனான உமாகரனுடன் மிக்க மகிழ்வோடு விளையாடிக் கொண்டிருந்தான். அவனோடு விளையாடத் தொடங்கினால் அவனுக்கு நேரம் போவதே தெரியாது.

**அ**ப்போது அங்கு வந்த பகீரதி சொன்னாள், “மாமா இன்று நேரத்துடன் வரச்சொன்னவர். இது நான் சொல்வது மூன்றாவது தடவை” என்று சொல்லிவிட்டுத் தயங்கினாள். அவளைப் பார்த்த முகுந்தன், அவள் எதையோ சொல்ல நினைக்கிறாள் என்று புரிந்து, “சொல்ல விரும்பியதைச் சொல்லும் நான் குளிக்கப் போகிறேன்” என்றான்.

**அ**தன்பின்பும் தயங்கிய பகீரதி, “சிவரூபன் பாவம். அவனோடு கதைத்து ஒரு மாதத்திற்கு மேலாகிறது” ஒருநாளும் இல்லாத மாதிரிக் கோபமாக ஏசிவிட்டேன் என்றீர்கள். “பாவம் அவன். உங்களை விட்டால் அவனுக்கு யார் உதவி அவனோடு கதையுங்கள். இப்போது அவன் தோட்டச் செய்கையில் மும்முரமாக ஈடுபட்டிருக்கிறான். இந்த நேரத்தில் அவனை உற்சாகப்படுத்த வேண்டும்” என்றாள்.

“**நா**ன் இங்கிருந்து புறப்பட்டால் உம்மையே மறந்துவிடுகிறேன். பத்து ஊரில் பத்துக் கடைகள். ஒவ்வொன்றிலும் பத்துப் பதினைந்து பிரச்சினைகள். ஒன்று போக இன்னொன்று வந்துவிடும். இரண்டு நாட்களுக்கு முன்னம் போனில் பேசினேன்” என்று கூறிவிட்டுப் புறப்பட்டான்.

“**எ**ன்ன பேசினீர்கள்? அவன் என்ன சொன்னவன்”.

“அவன் நான் பேசியதை மறந்துவிட்டான். இப்போ வேலை செய்வதால் நேரமில்லையாம். நான் தோட்டம் செய்யும் ஒருவேலை செய்கிறேன். அதில் மாறி மாறி வேலை வருகிறது. காலையில் காய்கறிகளைக் கொண்டு சென்று விற்கிறேன். அதன்பின் செடிகளுக்கு நீர் பாய்ச்சினேன். இப்ப கிருமிநாசினி தெளிக்கிறேன். அதனால் தான் உன்னை வந்து சந்திக்க முடியவில்லை. நேரங்கிடைக்கும் போது வருகிறேன்” என்றான். “அதைக் கேட்க மகிழ்ச்சியாக இருக்கிறது” என்றான். இன்று சிவன்கோவில் மாலை நேரம் பூசைக்கு நானும் மனைவியும் மகனும் வருவதாக இருக்கிறோம். நீ கட்டாயம் வா. முக்கியமான ஒரு விசயம் கதைக்க வேண்டும் என்று கூறினேன் நீரும் வாரும்” என்றான்.

“அப்படி என்ன முக்கியமான விஷயம்” என்ற போது ரெலிபோன் மணி அடித்தது, “அப்பா தான் ஏழு மணிக்கு வரச் சொன்னவர். இப்பவே எட்டு மணியாச்சு” என்றபடி சென்றுவிட்டான்.

சிவன்கோவிலில் மாலை நேரப்பூசை ஆரம்பமான பின்புதான் அவன் வீட்டுக்கு வந்தான், “இனிக் குளித்துவிட்டுக் கோவிலுக்குப் போக, குருக்கள் கதவைச் சாத்திவிடுவார். உங்களுக்கு ஒருநாளும் நேரமில்லை” என்றாள் பகீரதி.

“பேசாதையும், புறப்படும் போது கொழும்பில் இருந்து மூன்று லொறிகள் பொருட்களுடன் வந்துவிட்டன. அப்பாவுக்கு நிலைமையைச் சாதாரணமாக விளக்க முடியுமே. போதும் போதுமென்றாகிவிட்டது. வீட்டில் தான் சோடிபோட்டுக் கொண்டிருக்கிறம். வீட்டில் கார் நிற்கிறது. உமக்கு லைசன்ஸ் இருக்கு. போயிருக்கலாம் தானே…” கோபித்தான் முகுந்தன்.

“கோவிலில் உள்ள கடவுளைப் பார்க்குமுன், எனது இதயத்தில் உள்ள கடவுளைப் பார்க்க வேண்டும் என்று ஆசை” கண்சிமிட்டினாள் பகீரதி.

கோவிலுக்கு அவர்கள் வந்தபோது பூசை முடிந்து நீறும் சந்தனமும் கொடுத்துக் கொண்டிருந்தார் குருக்கள். அதன்பின் பகீரதியிடம் அர்ச்சனைத் தட்டை வாங்கிக் கொண்டுபோய் சிவனுக்கு அர்ச்சனை செய்துவிட்டு அர்ச்சனைத் தட்டையும், பிரசாதத்தையும் கொண்டு வந்து கொடுத்தார்.

அதுவரை கதிரேசனுடன் சிவரூபன் கதைத்துக் கொண்டிருந்தான். முகுந்தன் கதிரேசனுக்கு அருகில் வந்தபோது அவர் சொன்னார், “இப்போது முகுந்தன் முற்றாக மாறிவிட்டான். நீ பேசினாயாம். மாமியார் தமது வீட்டுக்கு வரக்கூடாது என்று கூறியவராம். அதிபர், “உன்னை எனது மாணவன் என்று சொல்ல வெட்கமாக உள்ளது. முகுந்தனும் எனது மாணவன். அவன் வசதி குறைந்த மாணவர்களுக்குக் கொடுப்பதற்காக ஒரு இலட்சம் ரூபாவுக்கான பொருட்களைத் தந்துள்ளான். நீ பிச்சை எடுக்கிறாய். அதனால் என்னுடன் கதைக்காதை என்றவர். இப்ப எல்லோரோடும் அவன் நேசமாக இருக்கிறான்”.

“தாத்தா, குற்றஞ் செய்யாதவர்கள் யாருமில்லை. நானும் பல குற்றங்களையும், பாவங்களையும் அறிந்தோ அறியாமலோ செய்துள்ளேன்” என்று கூறுனீர்கள் அத்துடன், “குற்றம் பார்த்தால் சுற்றம் கெடும்” என்றும் சொல்வீர்கள். அதிபர் ஏன் அப்படிச் சொன்னவர் என்றால் அவர் அதிபர் நாம் படிக்கும்போது அன்பாகவும் பேசுவார், பண்பாகவும் பேசுவார், கண்டித்தும் பேசுவார், தண்டிப்பார் இதெல்லாம் மாணவர்களின் நன்மைக்காகத்தான். மாமி தனது மருமகன் ஏனைய இளைஞர்களைப் போல உழைக்கிறானில்லை என்பதற்காக ஏசினா. முகுந்தனுக்கு வேலைகள் அதிகம். எனக்கு எந்தவேலையும் இல்லை. அவன் வேலைப்பழுவால் அவதிப்படும்போது நான் குழப்பினால் கோபம் வரும்தானே. முன்னுக்குக் கோவிப்பான் பின் சமாதானமடைந்துவிடுவான். இவற்றையெல்லாம் குற்றங் கண்டால் சுற்றம் கெட்டுவிடும். எல்லோரும் எனக்கு உதவி செய்பவர்கள். என்னால் அவர்களுக்கு எந்தப் பயனும் இல்லை. அவர்கள் கோபித்தால் அதில் ஒரு நியாயம் இருக்குமே தவிரப் பாதிப்பிராது” என்றான் சிவரூபன்.

அதிபர் கொடுப்புக்குள்ச் சிரித்தார். கதிரேசன் பொக்கை வாயைத் திறந்து சிரித்தார். முகுந்தன் சொன்னான், “இவனுக்கு வேலை செய்யத்தான் அலுப்பு. கதைக்குப் பஞ்சமில்லை”.

“தாத்தா, இனிச் சிவரூபனை நம்பலாமா…? நம்பிப் பெரும் பொறுப்புக்களை ஒப்படைக்கலாமா…?”.

“அவனுக்குக் கெட்டகாலம். கிரகநிலை சரியில்லை. இப்ப ஏழரைச்சனி நடைபெறுதிறது” என்றார் சிவஞானம்.

அதிபர் சிரித்தார், “சிவஞானம், எங்களைப் பாதிக்கும் கிரகங்கள், சிவனின் கட்டுப்பாட்டில் உள்ளவை. சிவனை வணங்கிவிட்டு அட்டமி நவமியில் மட்டுமல்ல, கரிநாள், அமாவாசையிலும் மங்களகரமான விஷயங்களைச் செய்யலாம். இறைவனின் அருளின் முன்னால் கிரகங்களல்ல, பேய் பிசாசுகளும் நிற்க முடியாது. சைவசமயத்தைப் பொறுத்தவரை உயிர் இரண்டு நிலைக்குட்படுகிறது. முதல்நிலை இறைவனோடு கலக்கும் பற்றற்றநிலை அடுத்த நிலை செய்த வினைக்கேற்ப பிறப்பெடுக்கும் நிலை. முந்தியடைந்த உயிர் இறைவனை விட்டுப் பிரியாது பிறப்பெடுத்த உயிர் பேயாகப், பிசாசாக மாறாது. இதை எத்தனை தரம் சொன்னாலும் கேட்பாரில்லை. இப்போது சிவரூபனை நம்பி எந்தப் பெரிய செயலையும் ஒப்படைக்கலாம்” என்றார் கதிரேசன்.

“எனது மைத்துனர் சரவணன் ஆசிரியப் பணியோடு கமம் செய்ய முடியாதென்று பலமுறை கூறிவிட்டார். அதனால் அவர் செய்யும் நிலம் முழுவதையும் சிவரூபனிடம் ஒப்படைக்கப் போகிறேன். வேண்டிய உதவிகள் எல்லாவற்றையும் செய்து கொடுக்கிறேன், “சிவரூபா, உனக்குச் சம்மதமா” என்று கேட்டான் முகுந்தன்.

“**மு**முழுமையான சம்மதம்”, என்று சிவரூபன் சொல்லக் கதிரேனும் அதிபரும் கைதட்டி ஆரவாரம் செய்து தமது மகிழ்வை வெளிப்படுத்தினர்.

## 40. குறி துறந்தால் வேட்டை கெடும்

**க**திரேசன், சிவரூபனுக்குச் சொன்னார், “சிவனின் அருளால் கிடைத்தற்கரிய ஒரு பெரும் வாய்ப்பு உனக்குக் கிடைத்துள்ளது. பெரும் வயல் நிலத்தையும், அதைப் பண்படுத்திச் செய்கைக்கான பணத்தையும் உனக்கு முகுந்தன் தந்துள்ளான். முகுந்தன் ஒழுக்கமானவன், நற்பண்புகள் நிறைந்தவன், பிறருக்குக் கைம்மாறு கருதாது உதவி செய்பவன். அவன் தனது வருமானத்தின் ஒருபகுதியை பணமின்மையால் தொழில் செய்யத் துன்பப்பட்டுத் தொழிலைக் கைவிட்டவர்களுக்குத் தேவையான பண உதவியையும், ஏனைய பல உதவிகளையும் செய்து வருகிறான். இது அவனின் நல்ல பயன்தரும் குறிக்கோளாகும். அவன் நோயாளருக்கும், இயலாதவர்களுக்கும் தான் தானம் செய்வான். உன்போன்ற வலு உள்ளவர்கள் அவனிடம் பெறும் பணத்தைத் திருப்பிக் கொடுத்தல் வேண்டும். பணம் தான் எல்லா முரண்பாடுகளுக்கும், பிரச்சினைகளுக்கும், பிரிவுகளுக்கும் காரணமாகும். அதனால் அவன் தரும் பணத்தை எழுதிவை. அறுவடை முடிந்த பின்பு அதைத் திரும்பிக் கொடுத்துவிடு. வட்டி கொடுக்கத் தேவையில்லை. நம்பிக்கை தான் பொறுப்பு. கஷ்டப்பட்ட பலர் அவனிடம் பண உதவிபெற்று வசதியான நிலைக்கு வந்துள்ளனர். அதற்கு விடா முயற்சியும், தன்நம்பிக்கையும், குறிக்கோளும் தான் காரணம்”.

“**எ**னக்குத் தெரியும் தாத்தா முன்பு பலமுறை பெருந்தொகைப் பணம் தந்து ஏதாவது ஒரு தொழிலைச் செய். தொழில் செய்யாதிருந்தால் உனது வாழ்வு அழிந்துவிடும். ஒருவன் பெரு வாழ்வு வாழக் குறிக்கோள் முக்கியமானது. உனது மனதை மாற்று, தைரியசாலியாக மாறு, தைரியசாலிகளால் செய்து முடிக்க முடியாத செயல்கள் எதுவுமில்லை என்றவன். நான் தான் பல சந்தர்ப்பங்களைத் தவறவிட்டு விட்டேன்” என்றான் சிவரூபன்.

“**ம**கனே, கடந்த காலங்களை எண்ணிக் கவலைப்படுவதால் மனம் தான் குழம்பும், பேதலிக்கும், பலவீனப்படும். அவற்றையெல்லாம் கெட்ட கனவாக மறந்து உற்சாகத்துடன் தொழிலைச் செய். நீ சரிவரத் தொழிலைச் செய்யாவிட்டால் முகுந்தனுக்கு நட்டமேற்படும். அவன் வழமையாக உதவி செய்வோர்க்கு உதவி செய்ய முடியாமல் போகும். ஒருவரை ஏமாற்றுவதும், பழிவாங்குவதும், திட்டமிட்டுக் கெடுப்பதும் பாவம் மட்டுமல்ல. பழிவாங்கப்பட்டவன் வருந்துவான். பழிவாங்கியவன் உலகினரால் பழிக்கப்படுவான். ஐம்பது நூறு வருடங்களுக்கு முன்பு நடந்த துயரமான சம்பவங்கள் பல இன்றும் பலரால் நினைவுபடுத்தப்படுகின்றன. நாகநாதனின் பூட்டன் ஒருவன் ஒரு பெண்ணைக் காதலித்துவிட்டு அவள் கர்ப்பமான பின் அவளை விட்டு விட்டுச் சென்றுவிட்டான். சனம் சந்தர்ப்பமேற்படும்

போது அதைச் சுட்டிக் காட்டத் தவறுவதில்லை. பழிவாங்கியவன் அந்த நேரம் சந்தோசப்பட்டாலும், அவனது சந்ததி பழிக்ககப்படும் ஆகையால் அயராது முயற்சி செய். தளர்ந்து, மனம் குழம்பித் தொழிலைக் கைவிட்டு விடாதே. எச் செயலுக்கும் குறிக்கோள் முக்கியமானது. காட்டு மிருகங்களை வேட்டைபாடப் போபவனுக்குக் குறி பார்த்து அம்பை விடத் தெரிய வேண்டும். குறி தப்பினால், குறிபார்த்த மிருகம் சினங்கொண்டு தன்னைக் கொல்ல நினைத்தவனைத் தாக்கிவிடும்".

"**தா**த்தா, எனக்குத் தேவையான பணத்தைத் தர நண்பனான முகுந்தன் எனக்குத் துணையாக இருக்கிறான். விவசாயத்தில் பெரும் அனுபவம் பெற்ற விவசாய மன்னனான நீங்கள் இருக்கிறீர்கள். அத்துடன் நீங்கள் சொன்ன வழிமுறைகளை நான் பின்பற்றுவேன்" என்றான் சிவரூபன்.

"**ம**கனே, குறிக்கோள் என்பது திட்டமிடல். பின் திட்டமிட்டதைச் செய்வதற்குப் பயிற்சி வேண்டும். சரியாகத் திட்டமிட்டு உரியமுறையில் பயிற்சி பெற்றுவிட்டால் அது வாழ்நாள் முழுவதும் மேலான வாழ்வு வாழ உதவும்" என்றார் கதிரேசன்.

## 41. அச்சம் புகுந்தால் வாழ்வு கெடும்

**சி**வரூபன், மிகவும் அர்ப்பணிப்புடனும், கவனத்துடனும் வயலில் வேலை செய்து வந்தான். இரவு பகலாக அவன் வயலிலேயே ஒரு சிறுகுடிசையை அமைத்து அதில் இருந்தான். தந்தையான சிவஞானம் மூன்று வேளையும் நல்ல சத்தான உணவு வகைகளைச் சுவையாகச் சமைத்துக் கொடுத்துக் கொண்டிருந்தார்.

**ந**ல்ல விளைச்சல் அறுவடை முடிந்தபின் நெல்லைச் சாக்குகளில் கட்டிவைத்து விட்டு முகுந்தனை அழைத்து வந்து தான் பெற்ற பணத்தைக் கழித்துக் கொண்டு மிகுதிப் பணத்தைத் தரும்படி சிவரூபன் சொன்னான்.

**வ**யலுக்கு அருகில் ஒரு பெரிய வில்வமரம் நின்றது. அதை யாரும் நடவில்லை. வெள்ளத்தோடு தள்ளுப்பட்டு வந்த விதை முளைத்து பெரிய மரமாகிவிட்டது. வெள்ளத்தில் அள்ளுண்டு வரும் விதைகள் முளைத்தால் அவற்றை விவசாயிகள் வெட்டி அழித்து விடுவர். வில்வமரம் சிவன் குடியிருக்கும் மரம் என்று சொல்லிக் கதிரேசன் அதை வெட்டவிடவில்லை. காலப்போக்கில் அம் மரத்தில் முனி குடிகொண்டிருப்பதாக நம்பிய மக்களில் சிலர் மரத்தின் அடியில் மண்சிட்டி விளக்கேற்றினர். பின்பு பிள்ளையாரின் உருவத்தை ஒத்திருக்கிறது என்று சொல்லி ஒரு கல்லை வைத்து வழிபட்டனர். அதனை பொங்கலிட்டு வணங்கினர்.

**மு**குந்தன் கற்பூரத்தைக் கொழுத்தி முனியை வணங்கிவிட்டு வந்து சொன்னான், “நண்பா, நீ நல்ல முறையில் தொழில் செய்வாய் என்று நான் நம்பவில்லை. தாத்தாவும், அதிபரும் நீ நல்லதொரு தொழிலாளியாக மாறுவாய் என்று நம்பி எனக்குச் சொல்லியதால் தான் நான் நம்பிக்கையீனத்துடன் உதவினேன். தாத்தாவும், அதிபரும் நினைத்ததிலும் பார்க்க பல மடங்கு விளைச்சலை நீ பெற்றதால் நான் உன்னை முழுமையாக நம்புகிறேன். அதனால் ஒரு புதிய தொழிலை உனக்கு அறிமுகப்படுத்துகிறேன். அதைத் திறம்படச் செய்வாய் என்ற நம்பிக்கை எனக்கு உண்டு. என்னிடம் பத்துக்கு மேற்பட்ட வியாபாரத்தலங்கள் உண்டு. அவற்றிற்கு அரிசியை மூவர் விநியோகிக்கின்றனர். இருவரின் நடத்தை எனக்குப் பிடிக்கவில்லை. அரிசியில் கலப்படம் செய்கின்றனர். தரமான அரிசியைத் தருவதில்லை. அதனால் எனக்கு வேண்டிய அரிசியை நீ தரவேண்டும். கலப்பில்லாத, சுத்தமான, தரமான அரிசியைத் தர வேண்டும். என்னிடம் நெல்லுக் குற்றும் ஆலை ஒன்று உண்டு. அதைத் திருத்தித் தருகிறேன். ஆரம்பத்தில் தேவையான உதவிகள் அனைத்தையும் செய்து தருகிறேன். பின் நீயே எல்லாவற்றையும் செய்ய வேண்டும்” என்றான் முகுந்தன்.

**அ**ங்கு கூடியிருந்தோர் ஆச்சரியப்பட்டனர். சிவரூபனால் பேசமுடியவில்லை. சிறிது நேரம் கழித்துச் சொன்னான், “நன்றி நண்பா. இம்முறை நெற்செய்கைளில் இரண்டு லட்சரூபா லாபமாகக் கிடைத்தது. முன்பே நான் உனது சொல்லைக் கேட்டிருந்தால், இப்போது நான் குபேரனாய் இருப்பன். எல்லாம் விதிப்பயன்” என்றான்.

**அ**திபரும், கதிரேசனும் சிரித்தனர். அவர்களுக்கு விதியிலும் சோதிடத்திலும் நம்பிக்கையில்லை. முகுந்தன் சொன்னான், “தேவையில்லாமல் கதைக்காதை. இவ்வாறு மூடநம்பிக்கை கொண்டால் முயற்சி செய்ய முடியாது. கடவுளை மட்டும் நம்பு. ஏனைய ஒன்றையும் நம்பாதை. செயல்கள் தான் விதி என்று சொல்லப்படுகிறது. நல்ல செயல்கள் ஒருபோதும் தோல்வியைத் தந்ததில்லை. அதுபோல முயற்சி ஒருபோதும் வீணாவதில்லை. எனது மைத்துனரான சரவணன் வயலில் போதிய கவனம் செலுத்தாமையால் நட்டமடைந்துவிட்டார். அதனால் அது விதியென்று நம்பி வயலைக் கைவிட்டார். நீ கடுமையாக உழைத்தாய். இலாபம் கிடைத்தது. மூடநம்பிக்கைகளை மனதில் வளைர விடாதே”.

**மு**குந்தனின் உதவியுடன் சிவரூபன் அரிசியாலையை இயக்கிக் கடைகளுக்கு அரிசியை விநியோகிக்கத் தொடங்கினான். முகுந்தன் கூறியபடி நெல்லைக் கொள்வனவு செய்து அதை கலப்படமில்லாத சுத்தமான அரிசியாக்கி விற்பனை செய்தமையால் பல கடைகளின் சொந்தக்காரர்கள் அவனிடமே அரிசியைக் கொள்வனவு செய்தனர். அதனால் அரிசியை முன்பு கடைகளுக்கு விநியோகித்தோர் நேரடியாகவும், மறைமுகமாகவும் சிவரூபனுக்குத் தொல்லைகள் கொடுத்துக் கொண்டிருந்தனர். அதனால் சிவரூபனுக்கு அச்சமாக இருந்தது.

**ஒ**ருநாள் அவன் பட்டணத்தில் பிரசித்தி பெற்ற சோதிடரிடம் தனது சாதகக் குறிப்பைக் காட்டிப் பலன் கேட்டான். அதற்கு அவர், "உன்மீது பொறாமைப்படுவோர் அதிகம். அதனால் அவர்கள் உன்னைக் கெடுக்கச் செய்வினை செய்துள்ளனர். அதை நான் எடுப்பேன்" என்று சொன்னான். அதை நம்பிய சிவரூபன் கலக்கமடைந்தான். அச்சம் அவனது மனதில் நுழைந்ததால் அவன் பயப்பட்டான். மாறுபாடாகப் பேசவும் தலைப்பட்டான்.

**க**திரேசன் அவனது நிலையை அறிந்ததால் வந்து சொன்னார், "மகனே, நீ காரணம் இல்லாமல் பயப்படுகிறாய். அதுதான் உன்னை மாறுபாடாகப் பேசவைக்கிறது. உனக்கு எந்த நோயும் இல்லை. யாரோ ஒருவன் செய்வினை செய்துள்ளதாகக் கூறித் தொழிலையும் சரியாகக் கவனிக்கிறாயில்லை. உனது தொழிலைக் குழப்ப நினைத்தவர்கள் தான் செய்வினை செய்துள்ளதாகக் கட்டுக்கதையைக் கட்டிவிட்டுள்ளனர். நீ பட்டணத்தில் உள்ள ஒரு மாந்திரீகனிடம் சென்றது எமக்குத் தெரியும்".

**சி**வரூபன் அதிர்ந்து போனான். மிக மிக இரகசியமாகச் செய்தது இவர்களுக்கு எப்படித் தெரிய வந்தது என்று நினைத்தான். அவர்களுக்குச் சொன்னால் விடமாட்டார்கள் என்பதற்காகவே அவன் யாருக்கும் சொல்லாது சென்றான்.

**க**திரேசன் தொடர்ந்து சொன்னார், "எமக்குத் தெரிந்தும் நாம் என் தடுக்கவில்லை என்று நினைப்பாய். அதைச் செய்தால் எனக்கு ஏற்பட்ட நோய் நீங்கியிருக்கும் என்று நீ நினைப்பாய். நம்பிக்கை தான் வாழ்க்கை. பலர் முழுவியளத்தை நம்புகின்றனர், பலர் சோதிடத்தை நம்புகின்றனர். இவற்றோடு கடவுளையும் சேர்த்து நம்புகின்றனர். உனது நம்பிக்கையின் படி நடக்கட்டும் என்றே நாம் தடுக்கவில்லை. நீ உரிய சடங்குகளைச் செய்த பின்பு உனது மனநிலையில் மாற்றம் ஏற்பட்டிருக்க வேண்டும். அப்படி மாற்றம் ஏற்பட்டிருந்தால் நீ குணமடைந்திருப்பாய். நீ குணமடையாது முன்பு போலத்தானே இருக்கிறாய். அப்ப ஏன் அதைச் செய்தாய்?".

**சி**வரூபன் எதுவும் பேசாததால் கதிரேசன் தொடர்ந்து சொன்னார், "சிவரூபா, கடவுள் ஒருவரைத் தவிர வேறு எவராலும் மனக்குழப்பத்தை நீக்க முடியாது. பலர் உனக்குத் திரும்பத் திரும்ப ஒன்றையே சொன்னதால் உனது மனம் பயங்கரமாகக் குழம்பிவிட்டது. அரிசியைக் கொள்வனவு செய்யாது விட்டவன் முகுந்தன். எனவே அவனுக்கெல்லோ செய்வினை செய்தல் வேண்டும். உனக்குச் செய்வினை செய்து உன்னைக் குழப்பினால் முகுந்தன் இன்னொருவரிடம் அரிசியை வாங்குவானே தவிர முன்பு விநியோகம் செய்தவர்களிடம் வாங்கமாட்டான். எனவே முகுந்தனுக்குச் செய்வினை செய்யச் சொல். அவர்கள் செய்து அவன் கெட்டழிந்தால் செய்வினை உண்மையானது என்று கொள்ளலாம். முதலில் உனது பலவீனப்பட்ட மனதைத் திடப்படுத்து எல்லாம் சரிவரும்".

**அ**ப்போதும் சிவரூபன் பேசவில்லை, “மகனே, உனது நிலைக்கு ஊரவரும் உனது தந்தையும் தான் காரணகர்த்தாக்கள். தெய்வ நம்பிக்கை உள்ளவன் வேறு எதையும் கடைசிவரையும் நம்பமாட்டான். வில்வ மரத்தில் இருக்கும் முனி உன்னைத் தாக்குமென்று உனது தந்தை சொல்ல நீயும் அதை நம்பிப் பயப்படுகிறாய். முனி என்கின்ற முனியப்பர் வேறு யாருமில்லை. சிவபெருமானைத் தான் முனியப்பர் என்கின்றனர். அதனால் நீ வணங்கும் சிவன் உனக்குத் துன்பம் செய்வாரா. பேய், பிசாசு, பூதம், ஆவி என்று எவையுமில்லை. அப்படி இருந்தாலும் வில்வை, ஆல், அரசு, வேம்பு, கொன்றை போன்ற தெய்வங்கள் வாழும் மரங்களில் அவை இராது. எனவே மனக்கலக்கத்தை விட்டு விட்டுத் தொழிலை முன்புபோலச் செய்” என்றார் கதிரேசன்.

“**எ**னது நிலைக்குக் காரணம் அச்சம் தான்” என்று உணர்ந்தான் சிவரூபன். அந்த நினைவு அவனை உற்சாகப்படுத்தியது.

## 42. துவண்டுவிட்டால் வெற்றி கெடும்

**சி**ல நாட்களாக சிவரூபன் மனக் குழப்பம் காரணமாக வேலையில் அக்கறையில்லாமல் இருந்தது முகுந்தனுக்குப் பெருங் கவலையை அளித்தது. எனினும் அவன் சிவரூபனுடன் அது பற்றிக் கதைக்கவில்லை. இரண்டு முறை அவனைச் சந்தித்த போதும், “எப்படிச் சுகமாக இருக்கிறாயா?” என்று கூடக் கேட்காமல் சிரித்துவிட்டுச் சென்றது சிவரூபனுக்கு மனவருத்தத்தைக் கொடுத்தது. அதனால் முகுந்தனின் வீட்டுக்குச் சென்று பகீரதியைச் சந்தித்தான்.

“**மு**குந்தன் என்னுடன் நட்புடன் பழகுவான். நான் நோய்வாய்ப்பட்டிருந்த போது அவன் இருமுறை கண்டும் எதுவும் கதையாமல் சென்றது எனக்குக் கவலையாக இருந்தது. என்னைப் பொறுத்தளவில் நான் யாருடனும் அவனைப்பற்றி எதுவும் கதைப்பதில்லை. நாமிருவரும் நட்புடன் பழகுவது ஊரவர்கள் பலருக்குப் பிடிப்பதில்லை. அதனால் அவர்கள் நான் ஒன்றைக் கதைக்க அவர்கள் அதைத் திரித்துக் கூறிவிட்டார்களோ என்று எனக்குக் கவலையாக உள்ளது” என்றான் சிவரூபன்.

**ப**கீரதி சிரித்தாள். பின் சொன்னாள், “அண்ணா, அவருக்கு வேலைகள் அதிகம் பல்வேறு விதமான தொல்லைகளும், பிரச்சினைகளும் அவருக்கு வரும். சில நாட்களுக்கு முன்பு அப்பா சந்தையில் இவரைக் கண்டுவிட்டு ஏதோ கதைக்க முற்பட்டிருக்கிறார். அவர் அதைக் கவனியாது சென்றுவிட்டார். அப்பா அதை பெரிதாக எண்ணிக் கவலைப்பட்டவர். அதை நான் இவரிடம் கேட்டபோது, “தான் சந்தைக்குச் செல்லவில்லை” என்றார். அத்துடன் ஊரில் உள்ள கடைகளில் வேலை செய்தால் வேலைக்காரர் அவரை மதியச் சாப்பாட்டுக்கு

அனுப்பிவைப்பார்கள். வெளியூர்க் கடைகளில் வேலை செய்தால், நான் அதிகாலையில் எழுந்து கட்டிக் கொடுத்தால் சாப்பாடு காருக்குள் இருக்கும். அதனால் வெளியூருக்கு அவர் சென்றால் நான் கொண்டு சென்று அவர் சாப்பிட்ட பின்பு தான் வருவேன். அதுபோல அவர் உங்களைக் கண்டிருக்கமாட்டார்".

"**இ**ல்லை, அவன் என்னைக் கண்டு சிரித்தவன்" என்றான் சிவரூபன்.

"**தொ**ழிலால் களைத்துப் போய் வந்தால் முக்கியவிடயமானாலும் அவர் மகிழ்வாக மகனைத் தூக்கி விளையாடும்போது தான் கதைப்பேன். கதைத்து முடிந்தபின், "இப்போ நான் என்ன சொன்னேன் என்று கேட்டு உறுதிப்படுத்திக் கொள்வேன். இதுதான் எனது நிலை" என்றாள் பகீரதி.

**சி**வரூபன் சென்றுவிட்டான் "சிவரூபனுக்கு நோய் வந்துவிட்டதாக அறிந்தேன் விசாரித்தீர்களா?" என்று அவள் கேட்டபோது அவன் சொன்னான், "அவனுக்கு எந்த வருத்தமும் இல்லை. மனநோய் அதாவது விசர். அது முற்றிவிட்டது. பேய், பிசாசு, செய்வினை, சூனியம் என்று சொல்லிக் கொண்டு வேலைகளைக் கவனிக்காது அலட்டுகிறான். கதிரேசன் தாத்தாவும் அதிபரும் பேய் பிசாசு இல்லை. செய்வினை சூனியம் செய்து ஒருவரைக் கெடுப்பதானால், முதலில் என்னைத் தான் கெடுப்பார்கள். அவனை நான் சந்தித்தாலும் கதைப்பதில்லை. கதைக்கவும் மாட்டன். ஏனென்றால் பல மூட நம்பிக்கைகள் அவனிடம் இருக்கு. சொன்னாலும் ஏற்கமாட்டான். அவனோடு கதைத்தால் எனக்கும் விசர் பிடித்து விடும்" என்று அவன் சொல்லிச் சிரித்தது ஞாபகத்திற்கு வந்தது.

**இ**ரவு முகுந்தன் வந்ததும் சிவரூபன் வீட்டுக்கு வந்து கூறியவற்றைச் சொன்னாள் பகீரதி.

"**அ**வன் விசரன் எதையெண்டாலும் செய்யட்டும். பாவம் என்று உதவி செய்யப்போக அவன் விசர்பிடித்து ஆடுகிறான்" என்றான் முகுந்தன்.

**ப**கீரதிக்கும் பேய் பிசாசு செய்வினை சூனியத்தில் நம்பிக்கை இருந்தது. ஒருநாள் அங்கு வந்த ஒரு சோதிடர் வீட்டுக்கு வாசல் வைத்தது பிழை. இது வாழவிடாது. இடித்துக் கட்டவேண்டும் என்று சொன்னதை நம்பி அவள் முகுந்தனுக்கு அதைச் சொன்னாள். அதைக் கேட்ட அவன் சொன்னான், "ரதி, இருபது வருடங்களுக்கு முன்பு தற்போது சிவன்கோவிலில் குருக்களாக இருக்கும் குருக்களின் தந்தை பெரும் சோதிடர். அவர் தான் இந்த வீட்டுக்கு நிலையம் எடுத்தது. வீடு கட்டிய நாளில் இருந்து எமக்குச் செல்வம் வந்து கொண்டிருக்கிறதே தவிர நட்டம் வரவில்லை. ஒருவருக்கு நோய் வந்தால், அல்லது பிரிவு ஏற்பட்டால், அல்லது துர்மரணம் நடந்தால் உடனே வீட்டைத் தான் குற்றம் சொல்வர். ஒரு சாஸ்திரி நிலையம் பார்த்து எடுத்த வீட்டை இன்னொரு சாத்திரி பிழை என்பான். அது அவரது பிழைப்பு.

இதைப்பற்றிக் கவலைப்படாதை. அப்பா அறிந்தால் பிரச்சினை" என்று அவன் கூறிய பின்பு சாத்திரம், பேய், பிசாசு பற்றி அவள் கதைப்பதில்லை. கதைப்பதால் பயன் இல்லை என்று அவளுக்குத் தெரியும்.

**ம**றுநாள்க் காலை சிவரூபன் முகுந்தனின் வீட்டுக்கு வந்தபோது முகுந்தன் சொன்னான், "நேற்று நீ வந்து பகீரதிக்குச் சொன்னதை அவள் எனக்குச் சொன்னாள். நான் உன்மீது இருந்த அளவற்ற கோபத்தினால் தான் பேசவில்லை. உன்னை நான் கண்டனான். உனது செயல்கள் என்னைச் சினம் கொள்ளவைத்துள்ளது".

**சி**வரூபன் பயந்து போனான். நான் ஏதாவது கதைக்கக் கேட்டவர் திரித்துக் கூறியிருப்பார் என நினைத்தான். பகீரதியும் கலங்கிப்போனாள்.

"**நா**ன் தெரிந்து எந்தக் குற்றமும் செய்யவில்லை. நீ என்னுடைய உயிர் நண்பனல்ல. எனது குலதெய்வம்" கலங்கினான் சிவரூபன்.

"**நா**ன் உனது குலதெய்வம் தானே. நன்றாக யோசித்துவிட்டுச் சொல்".

"**இ**தில் யோசிக்க எதுவும் இல்லை. நீ தான் எனது குலதெய்வம்" என்றான் சிவரூபன்.

"**ச**ரி, ஆனால் நான் ஏற்றுக்கொள்ளமாட்டன். ஏனென்றால் குலதெய்வம் சொல்வதைப் பக்தன் விரும்பினாலென்ன விரும்பாவிட்டாலென்ன ஏற்றுக்கொள்ள வேண்டும். இது உனக்குத் தெரியாதா?" பேசுவதை நிறுத்திவிட்டு சிவரூபனைப் பார்த்தான் முகுந்தன்.

**சி**வரூபனுக்குப் பேசத் தோன்றவில்லை. உடல் வியர்த்துக் கொட்டியது. கைகளும் கால்களும் நடுங்கின.

"**உ**னக்கு அதிபரும், தாத்தாவும் எவ்வளவோ எடுத்துக் கூறியும் நீ கேட்கவில்லை. எனக்குக் கடவுளின் மீது அதீத நம்பிக்கை உண்டு. கடவுளைத் தவிர வேறு எதையும் நாம் நம்புவதில்லை. நவக்கிரகங்களும் பேய்பிசாசுகளும் கடவுளின் கட்டுப்பாட்டுக்குள் இயங்குபவை. அவற்றால் பக்தர்களுக்குத் துன்பம் செய்ய முடியாது. கடவுள் பக்தியுள்ள ஒருவனுக்கு ஆன்ம பலம் அதிகம். அதனால் தனக்கு வரும் துன்பங்களை நீக்குமாறு அவன் தந்தையான கடவுளைத் தினமும் வேண்டுவான்".

"**இ**துக்காகவா இவ்வளவும் பேசினாய். நான் என்னவோ ஏதோ என்று பயந்துவிட்டேன்" என்றான் சிவரூபன்.

“நீ திருந்தாவிட்டால் என்னுடன் சேராதே. கடந்த சில நாட்களாக நீ மனங்குழம்பி வேலைகளைச் சரியாகச் செய்யவில்லை. இயல்பாக நோய், இழப்பு, அதிர்ச்சி போன்றன வந்தால் தான் மனம் குழம்பும். அப்படியான சம்பவம் எனக்கு வந்தால் நான் மனங்குழம்பமாட்டேன். மனம் குழம்பினால் அது துவண்டுவிடும். மனம் துவண்டால் சிறிய ஒரு சத்தம் கேட்டாலும் இடி இடிப்பதைப் போல இருக்கும். செய்வினை, சூனியம், பேய், பிசாசு என்று எதுவுமில்லை. இதைத் தாத்தாவும், அதிபரும் சொல்லித்தான் நான் உணர்ந்து கொண்டேன். அவர்கள் நீ சென்ற மாந்திரீகன் போல இயற்றிக் கூறவில்லை, பிழைப்புக்காகவும் கூறவில்லை. நாயன்மார்களும், இதிகாச புராணங்களும் கூறுபவற்றைப் படித்துவிட்டே கூறினர். அதனால் எனக்கு நம்பிக்கையில்லாத விடயங்களை நீ நம்பினால், அது என்னை அவமதிப்பதற்குச் சமமானதாகும்” என்றான் முகுந்தன்.

சிவரூபன் பூரண மகிழ்வுடன் சிரிக்க, முகுந்தன் சொன்னான், “இது அறிவுரையோ, ஆலோசனையோ அல்ல எச்சரிக்கை. பிறகு என்னைக் குறைசொல்லக் கூடாது”. கண்டிப்புடன் ஒலித்தது அவனது சொற்கள்.